# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 03 செவ்வாய்க்கிழமை (17.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 172




03 வோர்னுக்கு வழக்கு




16 வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகள்



25 முதலமைச்சராக பதவியேற்றார் ஜெ.

**கல்விச் சுடர்**

நாளைய உதயனுடன் தரம் 5 புலமைப்பரிசிலுக்கான வினாத்தாள் வெளிவரும். உங்கள் பிரதிக்கு முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

# நாளை தேசிய துக்க நாள்

கொழும்பு,மே17

வன்னியில் இடம்பெற்ற போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட இரண்டாம் ஆண்டு நினைவு தினம் நாளை கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்தத் தினத்தை தமிழர்களின் தேசிய துக்க தினமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த வருடம் பிரகடனம் செய்திருந்தது.

நாளை புதன்கிழமை வன்னிப் படுகொலைகளின் இரண்டாவது தேசிய துக்க தினமாகும். வீடுகளில் அமைதியாக, ஈகச் சுடர்களை ஏற்றி துக்க தினத்தைக் கடைப்பிடிக்குமாறு தமிழர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போரில் 7,000 வரையான பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40,000 ஐயும் தாண்டக்கூடும் என்று ஐ.நா. பொதுச் செயலர் நியமித்த நிபுணர் குழுவினர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர். எனினும் அரசு இதனை மறுத்துள்ளது.

இவ்வாறு போரில் அகப்பட்டு உயிரிழந்த அப்பாவிகளை நினைவுகூரும் முகமாகவே நாளைய தினம் தேசிய துக்க தினமாகக் கடைப்பிடிக்கப்பட உள்ளது.

வன்னிப் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கோவில்களிலும் தேவாலயங்களிலும் (29 ஆம் பக்கம் பார்க்க)

# அமைதி வழியில் அரசியல் தீர்வு காண ஈழத்தமிழருக்கு தோள் கொடுங்கள்

## முதல்வர் ஜெயலலிதாவிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு,மே17

**இலங்கைத் தமிழர்கள் அமைதியான முறையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண தோளோடு தோள் நின்று உதவுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக ஜெயலலிதாவை நேரில் சந்தித்து பேசுவதற்கும் கூட்டமைப்பு விருப்பம் தெரிவித்துள்ளது.**

தமிழக முதலமைச்சராக நேற்றுப் பதவி ஏற்றுக்கொண்ட ஜெயலலிதாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனும், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவும் கைச்சாத்திட்டு அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் வடக்கு, கிழக்கில் வாழும் (29 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் இந்தியாவுக்கு விளக்கினார் பீரிஸ்

புதுடில்லி,மே17

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை நேற்று புதுடில்லியில் சந்தித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பேச்சு நடத்தினார். ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டை அவர் இந்தியாவுக்குத் தெளிவுபடுத்தினார்.

டில்லியில் உள்ள ஓபேராய் ஹோட்டலில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ், இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே.காந்த ஆகியோரும் உடனிருந்தனர். இலங்கைத் தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவும் கலந்து கொண்டிருந்தார்.

இந்தப் பேச்சில் நிபுணர் குழு அறிக்கை குறித்து என்ன பேசப்பட்டது என்பது தொடர்பில் அதிகாரிகள் கருத்து எதனையும் உடனடியாகத் தெரிவிக்கவில்லை. (29 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலையில் பௌத்த சங்கம்?

யாழ்ப்பாணம்,மே17

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பௌத்த சங்கம் ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதாக நேற்றுச் செய்தி வெளியானது. எனினும் அது அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ சங்கமா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்தச் சங்கத்தின் தலைவராக அமித் புஸ்பகுமார என்ற மாணவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்றும் துணைத் தலைவராக லதீப், ஹாசினி சசித்ரா செயலாளராகவும், தங்கராஜா பிரதீப் துணைச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று ஆங்கில ஊடகங்கள் தெரிவித்தன. (29 ஆம் பக்கம் பார்க்க)

## போர் வெற்றி நினைவுக் கூட்டம் காலிமுகத் திடலில் 27ஆம் திகதி

கொழும்பு, மே 17

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாளை மறுதினம்19ஆம் திகதி இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைகின்றது. அதனை முன்னிட்டு ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பிரதான நிகழ்வு ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

இது தொடர்பாக (32 ஆம் பக்கம் பார்க்க)

## கொலை முயற்சி; சந்தேகத்தில் கோப்பாய் வாசி கைது

யாழ்ப்பாணம்,மே17

மனைவி மற்றும் பிள்ளைகளைச் சித்திரவதை செய்து கொல்ல முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சிறீகாந் என்ற குடும் பஸ்தரை கோப்பாய் பொலிஸார் கடந்த 14ஆம் திகதி இரவு கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப நபரை பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்பாக ஆஜர் செய்த போது எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நபர் இந்த மாதம் 13 திகதி மதுபோதையில் தனது மூத்த (32 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களுக்கு யாழ்.பல்கலையில் நேற்று அஞ்சலி





யாழ்ப்பாணம்,மே17

வன்னியில் இறுதிக்கட்ட போரின் போது கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து யாழ்.பல்கலைக்கழக சமூகம் 'வலிகள் தந்த வாரம்' என்ற தொனிப்பொருளில் அஞ்சலி நிகழ்வொன்றை நேற்று நடத்தியது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பல்கலைக் கழக மாணவர் பொது மண்டபத்தில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ் முஸ்லிம் மாணவர்களுடன் (29 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய வாக்காளர் பட்டியல் படியே உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்

கொழும்பு,மே 17

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்படப் பிற்போடப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 2010ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 17ஆம் திகதி நாடு முழுவதும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டபோது, பல்வேறு காரணங்களுக்காக 90 சபைகளுக்கான தேர்தல் நடைபெறவில்லை. அவற்றில் 67 சபைகள் தொடர்பான வழக்குகள் (29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காவின் படையணி சங்காரம் செய்தது புனே வாரியர்ஸை

-அருண்மொழி-

டெக்கான் - புனே வாரியர்ஸ் மோதல் நேற்று. ஐ.பி. எல்லின் 62 ஆவது ஆட்டம். சங்ககார தலைமையில் களமிறங்கியது டெக்கான் சார்ஜஸ். மறுபுறத்தில் புனே வாரியர்ஸ் புகுந்தது யுவராஜின் தலைமையில். சுழன்றது நாணயம். வென்றது டெக்கான். பணித்தது புனேயைத் துடுப்பெடுத்தாட.

ரைடர் - பான்டி புனேயின் சார்பில் களத்துக்கு நுழைவு. டுமினி வீசினார் முதலாவது ஓவர். பான்டி - ரைடர் பகிர்ந்தனர் பவுண்டரி, சிக்ஸர். முடிக்கப்பட்டது 14 ஓட்டங்களுடன் முதலாவது ஓவர். அதிரடித் தொடக்கம் புனேயின் ஆரம்பம். நான்காவது ஓவர் வீசினார் ஸ்ரெய்ன். பறித்தார் ரைடர் விக்கெட்டை. 18 ஓட்டங்களுடன் முடிந்தது அவர் கணக்கு. வந்தார் 'தாதா'. இந்தச் செல்லப் பெயருக்கு சொந்தக்காரராகி விட்டார் கங்குலி. வந்ததும் துடுப்பாட்ட வாய்ப்பில்லை. சர்மா வீசினார் 5 ஆவது ஓவர். தப்பிப் பிழைத்து பான்டி அடித்தார் பவுண்டரி.

ஆறாவது ஓவர் கங்குலி துடுப்பாட்டம். வீசியவர் கிறிஸ்ரெய்ன். தடுமாறித் தடுத்தார் 'தாதா' முதல் நான்கு பந்துகள். தடுப்பு போதும். அதிரடி தொடக்கம். தாதாவின் நினைப்பு. காலை வாரியது அவர் நினைப்பு. ஓட்டமெதுவுமின்றி வீழ்ந்தது கங்குலி விக்கெட். நுழைந்தார் உத்தப்பா. வந்த வேகத்தில் விரட்டினார் பவுண்டரி. ஓஜாவின் சுழல் அலங்கரித்தது ஏழாவது ஓவரை. பான்டியின் துடுப்பின் வேகத்தில் எல்லையை எட்டித் தாண்டியது பந்து. விடவில்லை ஓஜா. சரித்தார் அதே ஓவரில் பான்டியின் விக்கெட்டை. 23 ஓட்டங்களுடன் முடிவை எட்டியது ஆட்டம்.

எட்டாவது ஓவர். வீசினார் மிஸ்ரா. வீழ்ந்தன விக்கெட்டுக்கள். உத்தப்பா வெளியேற்றம் 4 ஓட்டங்களுடன். மன்ஹாஸ் வந்த வேகத்தில் ஓட்டமெதுவுமின்றி வெளியேற்றம். புனேயின் நிலை பரிதாபம். 45 ஓட்டங்களில் இழந்திருந்தது 5 விக்கெட்டுக்கள். புனேயின் சரிபாதி அணி சரண்டராகி விட்டது டெக்கானிடம். யுவராஜ் - பேக்குசன் களத்தில் நிலைப்பு.

51 பந்துகளிலேயே எட்டப்பட்டது புனேயின் 50 ஓட்டங்கள். கடுமையாய் போராடியது புனே. டெக்கானின் தாக்குதல் வியூகம் வெற்றி. ஓஜா வீசினார் பதினொராவது ஓவர். எதிர்கொண்டார் யுவராஜ். அடிக்கப்பட்டது அடுத்தடுத்துசிக்ஸர், பவுண்டரி. வழங்கப்பட்டது 11 ஓட்டங்கள். 28 ஓட்டங்கள் இணைப்பாய் பகிர்வு ஆறாவது விக்கெட்டுக்காக.

12 ஆவது ஓவரில் முடிவுக்கு வந்தது பேக்குசன் ஆட்டம். டுமினியின் பந்து வீச்சில் 11 ஓட்டங்களுடன் முடிந்தது ஆட்டம். அடுத்தடுத்த ஓவர்களில் அடக் கப்பட்டது புனேயின் அதிரடி ஆட்டம். கிறிஸ்ரெய்ன் வீசினார் 15 ஆவது ஓவர். எழுச்சி பெற்றது மீண்டும் அதிரடி. மிச்செல் மார்ஷ் அடித்தார் சிக்ஸர். அந்த ஓவரில் பவிலியனுக்குத் திரும்பினார் யுவராஜ். 17 பந்துகளில் 23 ஓட்டங்கள். அணிக்காய் யுவராஜின் பங்களிப்பு.




பார்னெல் - மார்ஷ் இறுதிக் கட்டத் தாக்குதலுக்குத் தயார். தற்கொலைப் படையாய் பாயத் தயாரானது இந்த ஜோடி. சந்தித்த பந்துகளுக்கு எல்லாம் ஓங்கிச் சுழன்றது துடுப்பு. சில வேளை பட்டு பெற்றது ஓட்டம். ஸ்ரெய்ன் பந்து வீச்சில் தவறவிடப்பட்டது மார்ஷ் பிடி. இறுதி ஓவர் உச்சமடைந்தது தாக்குதல். மார்ஷ் ஓஜாவின் முதல் பந்தில் பறக்கவிட்டார் சிக்ஸர். அடுத்த பந்திலும் தாக்குதல் தொடுக்க முயற்சி. தப்பிய பந்து தாக்கியது விக்கெட்டை. வீழ்த்தப்பட்டது மார்ஷ் விக்கெட். 28 பந்துகளில் 3 சிக்ஸர்களுடன் பெறப்பட்டது 37 ஓட்டங்கள். முடிவில் பார்னெல் பறக்கவிட்டார் ஒரு சிக்ஸர்.

இருபது ஓவர் முடிவு. பெறப்பட்டது 136 ஓட்டங்கள். இழக்கப்பட்டது 9 விக்கெட்டுக்கள். கிறிஸ்ரெய்ன் வீசியது 3 ஓவர்கள் கொடுத்தது 13 ஓட்டங்கள். எடுத்தது 2 விக்கெட்டுக்கள்.

பதிலுக்குத் தாக்குதல் தொடங்கியது டெக்கான். தவான் - சொஹால் நுழைந்தனர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாய். தொடங்கினர் ஓட்ட வேட்டையை. ஆறாவது ஓவர் உச்சத்தை எட்டியது அதிரடி. மார்ஷின் பந்து வீச்சை எதிர்கொண்டார் சொஹால். சிக்ஸர், பவுண்டரிகள் அரங்கை அதிர வைத்தன. 33 பந்துகளில் பூர்த்தியானது டெக்கானின் அரைச்சதம்.

67 ஓட்டங்கள் முதலாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டம். பிரிக்கப்பட்டது யுவராஜின் பந்து வீச்சில். தவான் 25 பந்துகளில் 28 ஓட்டங்களுடன் வெளியேற்றம். அடுத்த விக்கெட்டுக்காய் 6 ஓட்டங்கள் பகிரப்பட்டது. ராகுல் சர்மாவின் சுழலில் சரிக்கப்பட்டது சொஹால் விக்கெட். 28 பந்துகள் சந்திப்பு. 2 சிக்ஸர்கள், பவுண்டரிகள் அடங் கின அவரது 34 ஓட்டங் களுள். மீதி ஆட்டம் சங்கா - டுமினி பொறுப்பெடுப்பு.

நிதானம், அதிரடி கலந்து தொடர்ந் தது இவர்களின் ஆட்டம். 35 ஓட்டங்கள் பகிரப்பட்டது மூன்றாவது விக்கெட்டுக்காய். ராகுல்சர்மா விடை கொடுத்தார் சங்காவின் ஆட்டத்துக்கு. 21 பந்துகள் சந்திப்பு. 25 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு. தொடர்ந்தது டுமினியின் ஆறுதல் ஆட்டம். டெக்கான் நெருங்கியது வெற்றியை. பார்னல் பந்தில் வீழ்ந்தது டுமினியின் விக்கெட். 26 பந்துகள் எதிர் கொண்டு பெற்றுக் கொடுத்தது 23 ஓட்டங்கள். வெற்றிவரை தொடர்ந்தது கிறிஸ்ரெய்ன் - சிப்லி ஆட்டம். மீதமிருந்தன 4 பந்துகள். கிடைக்கப்பெற்றது 6 விக்கெட்டுக்களால் வெற்றி. ஆட்ட நாயகன் அமிர் மிஷ்ரா.

# இலங்கை அணி மீதான தாக்குதல் தொடர்பாக ஒருவர் கைது

பாகிஸ்தானின் லாகூர் நகரில் 2009 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவரை பாகிஸ்தானின் டேரோகாஸிகான் நகரில் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டேரோகாஸிகான் மாவட்டத்தில் மே 14 ஆம் திகதி நடைபெற்ற வங்கி கொள்ளை தொடர்பாக அட்னன்கோஸா என்பவரை பொலிஸார் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவரிடம் விசாரணை நடத்தியபோது தானும் தனது தந்தை காரிஇர்ஷாத்தும் இலங்கை கிரிக்கெட் அணியினர் மீதான தாக்குதலில் பங்குபற்றியதாக அட்னன் கோஸா ஒப்புக்கொண்டதாக சில வட்டாரங்களை மேற்கோள்காட்டி எக்ஸ்பிரஸ் ட்ரிபியூன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி தாக்குதலின் பின்னர் இருவரும் பாகிஸ்தானிலிருந்து தப்பியோடியதாகவும் அண்மையிலேயே இவர்கள் டுபாயிலிருந்து திரும்பிவந்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி தாக்குதலின் பின்னர் ஹோட்டலொன்றில் வைத்து ஸுபைர் என்பவரை பொலிஸார் கைதுசெய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையின்போது அட்னன் கோஸா என்பவர் இந்தத் தாக்குதலில் பங்குபற்றியமை குறித்து பொலிஸாரிடம் தெரிவித்தாராம். எனினும் இத்தகைய கைது இடம்பெறவில்லை என்று பொலிஸ் அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக கூறியுள்ளனர். (15)

## இன்றைய ஆட்டம்

- கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் பெங்களூர் றோயல்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- வல்த்தாட்டி – பஞ்சாப் (12 ஆட்டங்கள் 438 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (7 ஆட்டங்கள் 436 ஓட்டங்கள்)
- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 324 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை (12 ஆட்டங்கள் 27 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல் – மும்பை (12 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (12 ஆட்டங்கள் 16 விக்கெட்டுக்கள்)

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 12 | 08 | 03 | 0 | 1 | + 0.849 | 17 |
| சென்னை சுப்ப கிங்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.544 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.245 | 16 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 07 | 05 | 0 | 0 | + 0.403 | 14 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 12 | 07 | 05 | 0 | 0 | - 0.183 | 14 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 13 | 06 | 07 | 0 | 0 | - 0.186 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 05 | 07 | 0 | 1 | - 0.969 | 11 |
| டெக்கான் சார்ஜஸ் | 13 | 05 | 08 | 0 | 0 | - 0.080 | 10 |
| புனே வாரியர்ஸ் | 12 | 04 | 08 | 0 | 0 | - 0.033 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.448 | 08 |

# சூதாட்ட குற்றச்சாட்டில் சிக்கினார் பாக்.நடுவர்

தற்போது நடைபெறும் இந்தியன் பிரிமியர்லீக் போட்டிகள் தொடர்பாக சூதாட்டத்தில் பாகிஸ்தானின் குல்பர்க் நகரில் ஈடுபட்ட 6 சூதாட்ட முகவர்களுடன் அக்ரம் ராஸா கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'குல்பர்க் நகரிலுள்ள கட்டிடமொன்றில் வைத்து 7 பேரை நாம் கைது செய்தோம். அவர்களில் ஒருவர் முன்னாள் பாகிஸ்தான் வீரரான அக்ரம் ராஸா என்று இனங் காணப்பட்டுள்ளார்' என்று குல்பர்க் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

'ஐ.பி.எல் போட்டிகள் தொடர்பாக சூதாட்டம் நடைபெறுவதாக கிடைத்த தகவலொன்றையடுத்து நாம் இந்த முற்றுகையை மேற்கொண்டோம். பணம், செல்லிடத் தொலைபேசிகள், இந்திய தொலைபேசி இலக்கங்கள் என்பனவற்றை நாம் கைப்பற்றினோம்' என்று அவர் கூறினார்.

தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முதல்தரப் போட்டிகளுக்கான நடுவர் குழாமில் அங்கம் வகிக்கிறார்.

இவர் ஏற்கெனவே ஆட்ட நிர்ணய சதி குற்றச்சாட்டுகளில் சிக்கி 2000 ஆம் ஆண்டு நீதிபதி மலிக்கயூம் விசாரணைக் குழுவினால் அபராதம் விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLPL 2011

## 33 வெளிநாட்டு வீரர்கள்

எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள எஸ்.எல்.பி.எல் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 33 வெளிநாட்டு வீரர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதல் முதலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எஸ்.எல்.பி.எல் 20 - 20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜூலை 19 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 4 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

7 மாகாணங்களாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு அணிக்கு தலா 5 வெளிநாட்டு வீரர்களை இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்திய அணியின் 12 வீரர்களும் பாகிஸ்தான் அணியிலிருந்து 6 வீரர்களும் ஆஸ்திரேலிய அணியின் 4 வீரர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அத்துடன், நியூசிலாந்து வீரர்கள் இருவரும் பங்களாதேஷ் அணியின் ஒரு வீரரும் ஏனைய பிற அணிகளில் இருந்து 8 வீரர்களும் இந்தப் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை குறிப்பிட்டுள்ளது. (15)




# தவறுகள் செய்கின்றோம்

ஐ.பி.எல். 20 ஓவர் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் கொச்சி ருஸ்கேர்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியைத் தோற்கடித்தது.

ஹொட்ஜ் ஆட்ட நாயகனாகத் தேர்வு பெற்றார். ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 ஆவது தோல்வியை தழுவியது. இதன்மூலம் அந்த அணி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழந்தது.

இந்தத் தோல்வி குறித்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் வோர்ன் கூறியதாவது:-

மோசமான துடுப்பாட்டத்தால் இந்த தோல்வி ஏற்பட்டது. 100 முதல் 120 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்தோம். தொடர்ந்து 4 ஆட்டத்தில் தோற்றோம். ஏராளமான தவறுகளை செய்ததால் தொடர்ந்து தோற்றோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த வெற்றி குறித்து கொச்சி அணித்தலைவர் ஜெயவர்த்தன கூறும்போது, எங்கள் வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இது மிகவும் எளிதான வெற்றி. இதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்றார். (15)

# வோர்னுக்கு வழக்கு

ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவரும், ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரருமான ஷேன் வோர்னின் மீது கிரிமினல் வழக்குத் தொடர ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

வோர்ன் அனுப்பிய மன்னிப்பு கடிதத்தையும் நிராகரித்தார் ராஜஸ்தான் கிரிக்கெட் வாரியச் செயலாளர் தீஷித். ராஜஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் சட்ட நிபுணர்கள் குழு வோர்னின் மன்னிப்பு கடிதம் தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை ஆலோசனை நடத்தியது. ஆனால் அதில் முழுமையான விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்று தெரிகின்றது.

இதன்பிறகு வோர்ன் மீது உள்ளூர் நீதிமன்றத்தில் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் கிரிமினல் வழக்கு தொடர முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து தீஷித் கூறியதாவது:

ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்வாகம் சார்பில் அனுப்பப்பட்ட கடிதத்தில் சில ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா க் கூறப்பட்டுள்ளது. ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் அனுப்பிய கடிதத்தில் எதுவுமே சரியாகக் குறிப்பிடப்படவில்லை என்றார்.

கடந்த 11 ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஐ.பி.எல் லீக் ஆட்டத்தில் பெங்களூரிடம், ராஜஸ்தான் தோற்றது. அதன்பிறகு பேசிய வோர்ன், ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கம் மைதானத்தை மோசமாக தயாரித்துள்ளது என்று கூறி, அதன் செயலாளர் தீஷித்தை திட்டியதாகப் புகார் எழுந்தது. இந்த விவகாரம் தொடர்பாக வோர்ன் மன்னிப்பு கேட்ட போதும் கூட, ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கம் இந்த விவகாரத்தை விடுவதாக இல்லை. (15)



# நான் சாதிப்பேன்

## -- மிஷ்ரா

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் முழுத்திறமையை வெளிப்படுத்தி சாதிப்பேன். இவ்வாறு இந்திய சுழற்பந்துவீச்சாளர் அமித் மிஸ்ரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நான்காவது ஐ.பி.எல் தொடர் முடிந்தவுடன், இந்திய அணி, மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்ய உள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் சுழற்பந்துவீச்சாளர் அமித் மிஸ்ரா நீண்ட இடைவேளைக்கு பின்னர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கடந்த 2003 இல் ஒருநாள் போட்டி அரங்கில் காலடி வைத்த இவர், கடைசியாக கடந்த ஆண்டு சிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் வி[illegible]யாடினார். இதுவரை 10 ஒருநாள் போ[illegible]ளில் மட்டுமே பங்கேற்றுள்ள அமித் மிஸ்ரா, 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். தவிர இவர் ஐ.பி.எல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதால், இந்திய அணியில் இடம் பிடித்தார்.

இதுகுறித்து அமித் மிஸ்ரா கூறியதாவது:

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இடம் கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கின்றது. இதற்கு ஐ.பி.எல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதே முக்கிய காரணம். என்னை டெஸ்ட் பந்து வீச்சாளர் என்று கூறுகின்றனர். ஆனால் நான் டெஸ்ட் போட்டிகளில் மட்டும் பந்துவீசுவதில்லை. ஒருநாள் போட்டியில் போதிய வாய்ப்புக் கிடைக்காததால், எனது திறமையை நிரூபிக்க முடியவில்லை. ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக ஐ.பி.எல் தொடரில் எனது திறமையை வெளிப்படுத்தி வருகிறேன். இதனால் இந்திய அணியில் இடம் பிடித்தேன். கிடைத்த வாய்ப்பை வீணடிக்காமல், முழுத்திறமையை வெளிப்படுத்தி இந்திய அணியில், என[illegible] இடத்தை உறுதி செய்யப் [illegible] இவ்வாறு அமித் மிஸ்ரா கூ[illegible] (15)




பறக்கும் பஞ்சாப் அழகிகள்....



# கம்பீருக்கு ஹோக்லி பாராட்டு



இந்திய கிரிக்கெட் அணி ஜூன் 4 ஆம் திகதி முதல் மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து ஒரு ரி-20 போட்டி, 5 ஒரு நாள் போட்டி மற்றும் 3 பயிற்சிப் போட்டிகளில் விளையாடுகின்றது.

இதன் ஒருநாள் தொடருக்கான இந்திய அணி சென்னையில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அணித்தலைவர் டோனி, டெண்டுல்கர், சகீர்கான் ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் கம்பீர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பத்ரிநாத், இசாந்த் சர்மா, வினய்க்குமார், அமித் மிஸ்ரா, ரோகித் சர்மா, விர்த்தி மான்சாக, பிரவீன் குமார் ஆகியோர் அணிக்கு மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கம்பீர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டதற்கு சகவீரர் விராட் ஹோக்லி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

அணித்தலைவர் பதவியில் கம்பீர் திறமையான வர். அவரது தலைமையின் கீழ் நான் விளையாடி இருக்கின்றேன். அவர் ஒரு சிறந்த அணித்தலைவர். ஆடுகளத்தில் 100 சதவீத திறமையுடன் இருக்கக் கூடியவர்.

இந்தியாவில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் அவரது தலைமையில் விளையாடி உள்ளோம். நெருக்கடிக்குத் தகுந்தவாறு முடிவுகளை எடுக்கக்கூடியவர். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மூத்த வீரர்களான டெண்டுல்கர், சேவாக், டோனி ஆடாததால் எங்களுக்கு கூடுதல் பொறுப்பு ஏற்பட்டுள்ளது - என்றார். (15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவரின் அத்துமீறல் பிரச்சினை; ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 17

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பான பிரச்சினைகள் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப் படவுள்ளன.

வடமாகாணக் கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு அவர்களை நேரில் சென்று இந்த விடயம் தொடர்பாக வலியுறுத்தவுள்ளதாகக் கூறப்பட்டது.

வடமாகாணக் கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு இதற்கான தீர்மானங்களை எடுத்துள்ளதாக அதன் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் அவர்களது கவனத்துக்குக் கொண்டுவரப் படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட தீர்மானத்தைத் தெரிவித்தார்.

வடமாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு கடந்த 14 ஆம் திகதி மன்னாரிலுள்ள திருமறைக்கலா மண்டபத்தில் கூடி வடமாகாண மீனவர்கள் தற்போது முகம் கொடுத்துவரும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியது.

அதில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து அதிக கவனம் எடுக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

அந்த முடிவுகளை அறிவிக்கும் நோக்கிலேயே செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

* இந்திய மீனவர்களின் அத்துமீறும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தவறும் சந்தர்ப்பத்தில் தென்னிலங்கை மீனவரின் ஒத்துழைப்புடன் வடபகுதி மீனவர்கள் உயிரைப் பணயம் வைத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணத்தயார்.
* இலங்கை, இந்திய மீன்பிடி பிரச்சினைகள் தொடர்பாக விசேடமாக இந்திய இழுவைப் படகுகள் பிரச்சினை தொடர்பாக இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையில் கடந்த மார்ச் 28, 29 ஆம் திகதிகளில் டில்லியில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் முடிவுகளை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும்.
* தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப்படகுகள் மே மாதம் 31 ஆம் திகதிக்குப் பின் இலங்கை கடற்பரப்புக்குள் மீளவும் வருவதை இலங்கை அரசு முழுமையாக நிறுத்த வேண்டும்.
* வட மாகாண கடற் பிரதேசத்துக்குள் வருகை தந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளை அரசு உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.
* வட மாகாண மீனவர்கள் குதிரை வலு 25 சக்தியை உடைய வெளி இணைப்பு இயந்திரங்களை பதிவு செய்வதற்கான அனுமதியை வழங்கவேண்டும்.

இந்தச் சந்திப்பின்போது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் க.சூரியகுமாரன், வலிகாமம் வடக்கு சங்கத் தலைவர் எஸ்.சிவஞானராஜா, காரைநகர் சங்கத் தலைவர் க.இராஜேந்திரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ம-14)

# தண்ணீரூற்றில் இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதற்கு ஏற்பாடு

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் தண்ணீரூற்றுக் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் மீள் குடியேற்றத்துக்காக சொந்த இடத்துக்குச் செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள குடும் பங்களை முல்லைத்தீவு அல்லது வித்தியானந்தாக் கல்லூரியில் உள்ள கேட்போர் கூடத்துக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி சமுகமளிக்குமாறும் முல்லைத்தீவு அரச அதிபர் அ. பத்திநாதன் அறிவித்துள்ளார்.

சமுகமளிக்கும் போது தாம் வசித்து வந்த கிராம அலுவலர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலரினால் மேல் ஒப்பமிடப்பட்ட இடமாற்றக் கடிதத்தை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## ஆய்வுக் கட்டுரை கோரல்

யாழ்ப்பாணம், மே 17

சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்படும் '' சைவசித்தாந்தம்'' என்னும் நான்காவது ஆய்விதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் கோரப்படுகின்றன. ஆர்வமுடையவர்கள் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாத வகையில் கட்டுரைகளை எழுதி எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக இயக்குநர், சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம், ஏழாலை மேற்கு, சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு. றஜீபன் அறிவித்துள்ளார். (ம-313)

## கசிப்பு விற்றவருக்கு 3 மாத சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், மே 17

கோப்பாயில் கசிப்பு விற்பனை செய்த நபருக்கு யாழ். நீதிமன்றம் 3 மாதம் சிறைத் தண்டனை விதித்தது.

கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட மேற்படி நபரைக் கைதுசெய்து யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு ரூபா15 ஆயிரம் அபராதம் செலுத்துமா றும் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். குற்றவாளி அபராதம் செலுத்த இயலாது என்று கூறியதையடுத்து 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ம-9)

## ஆயுள்வேத மருத்துவமனைகளில் அக்குபஞ்சர் சிகிச்சை

கொழும்பு, மே 17

நாடுபூராகவும் உள்ள அனைத்து ஆயுள் வேத மருத்துவமனைகளிலும் அக்குபஞ்சர் முறையை நடைமுறைக்குக் கொண்டு வர தேசிய வைத்தியத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த சிகிச்சைக்கான வசதிகள் தற்போது பொரளையிலுள்ள ஆயுள்வேத மருத்துவ மனையில் மட்டுமே இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த வசதிகள் ஏனைய மருத்துவ மனைகளிலும் ஏற்படுத்தப்படவுள்ளதாகப் பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

**பெயர்மாற்றம்**

இதுவரை காலமும் பேகமலர் மாயவைந்தர் என அழைக்கப்பட்ட எனது பெயரினை இன்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை முதல் செ.இராசேஸ்வரி என மாற்றம் செய்கின்றேன். இன்று முதல் நான் சகல ஆவணங்களிலும் செ.இராசேஸ்வரி எனவே கையொப்பம் இடுவேன்.

செ.இராசேஸ்வரி

**சங்காபிஷேக விஞ்ஞாபனம்**

ஏழாலை தெற்கு களபாவோடை
வசந்த நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்

17.05.2011 காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெற்று அதனைத்தொடர்ந்து விசேட பூஜை, சொற்பொழிவு, சுவாமி உலாவருதல், அன்னதானம் ஆகியன இடம்பெறும்.

(சி/046) (27-43) தேவஸ்தானம்

**வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் - மருதங்கேணி**

**முக்கிய அறிவித்தல்**

31.03.2009 ஆம் திகதியின் மேற்படி எமது சங்கத்தின் மூலதனக் கணக்குகளை ஒழுங்கமைக்கும் முகமாகக் கீழ்வரும் விவரங்கள் தொடர்பில் சங்க நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களிடமிருந்து 31.03.2009 இல் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்திச் சங்கத்தின் தலைவர்/ பொதுமுகாமையாளர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி, தாளையடி என்னும் முகரிக்கு 31.05.2011 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

1) 1.வியாபார வருமதிகள் (சங்கத்துக்கு)
   2. வியாபாரச் சென்மதிகள் (சங்கத்திடமிருந்து)
   3.சங்கத்திடம் பெற்றுக் கொண்ட கடன்
   4.சங்கத்துக்கு வழங்கிய கடன்
   5.சங்கத்துக்கு வழங்கிய ஏனைய சென்மதிகள்
   6.சங்கத்திடம் பெற்றுக் கொண்ட ஏனைய வருமதிகள்
   7.மற்றும் வரவேண்டிய முற்பணங்கள்
   8.செலுத்த வேண்டிய முற்பணங்கள்
   9.சங்கத்தில் வைப்புச் செய்த நிலையான வைப்புச் சான்றிதழ்கள்

2)சங்கத்தின் கிராமிய வங்கியில் வைப்புச் செய்தவர்கள் (நிலையான வைப்புக்கள் சேம வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்கள்) தங்களது சேமப்புத்தகங்களை சங்கத்தில் சமர்ப்பித்து மேற்படி 31.03.2009 ஆம் திகதியின் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

3) சங்கத்தின் கிராமிய வங்கிகளினூடாகவும் நேரடியாகவும் கடன் பெற்றவர்கள் 31.03.2009 இல் சென்மதி மீதிகளை உறுதிப்படுத்த உறுதிச் சான்றுகளைச் சமர்ப்பித்தல்.

4)மற்றும் சங்கத்தின் வியாபார நடவடிக்கையோடு தொடர்புடைய விடயங்கள் இருப்பின் அதுபற்றியும் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும்.

ந.திருலிங்கநாதன் — தலைவர்
பொ.ஸ்ரீராமச்சந்திரன் — பொதுமுகாமையாளர்
(40-27-24)(சி/044)

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை (Sales Rep)**

யானைச் சோடாவை (Elephant Soft Drinks) எமது வாகனத்தில் கொண்டு சென்று விற்பனை செய்யத் தகுதியானவர்கள் தங்களது சுயவிவரத்துடன் நேரில் சமுகமளிக்கவும்

* திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
ஓட்டு மடம் சந்தி ,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தொ.பே:-021 222 5595
021 492 5101

**விற்பனையாகிறது**

* ஆசிரியர் தங்கராசா மணிவண்ணனின் அருவி (தரம் 5 புலமைப் பரிசில் வழிகாட்டி)
(புதிய பாடத்திட்டம்O/L)

கிடைக்குமிடங்கள்: துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.

**மரண அறிவித்தல்**

**கிருஷ்ணகோபால் கிருஷ்ணகோபன்**



எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணகோபால் கிருஷ்ணகோபன் நேற்று முன்தினம் (15.05.2011) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் அகால மரணமானார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

07 ,May Place Avenue
Dark Ford Daoslury, U.K.

தகவல் :
கி.பாலச்சந்திரன் (சகோதரன்)
(கோபால் சேவிஸ் ஸ்ரேசன்)

**கண்ணீர் அஞ்சலி**



எமது அலுவலகத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
ம.சிறீகாந்தன்
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயம்**
அவர்கள் 14.05.2011 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) யாழ்ப்பாணம். (4289) 27-43
பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்.

**11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர் சுப்பிரமணியம் சரவணபவானந்தன்



அன்னை மடியில்
30.06.1971

ஆண்டவன் அடியில்
17.05.2000

குடும்பச் சுமையைத் தாங்கி உழைத்தவரே
குடும்பமே சிறக்க பேரவா கொண்டவரே
பெருமையுள்ள மகனே உமை என்றும் மறவோம்
இறைவனை நாளும் வணங்கி துதிக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(4286)(43)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஸ்ரீ மகா புத்த ஜயந்தியும் எதிர்கால சிந்தனையும்

இன்று உலகெங்கும் உள்ள பௌத்த மதத்தினர் புத்த பெருமானின் ''ஸ்ரீ சம்புத்த ஜயந்தி''யை பக்தி சிரத்தையுடன் கொண்டாடுகிறார்கள்.

புத்த பெருமான் அவதரித்து ஞானம் பெற்றுப் பரிநிர்வாணம் எய்திய தினமாக இன்றைய வைகாசி மாத பௌர்ணமி (வெசாக்) கருதப்படுகின்றது. புத்தபெருமானின் வாழ்வில் நிகழ்ந்துவிட்ட மூன்று மகா சம்பவங்களும் குறித்த மாதத்தில் குறித்த நாளில் குறித்த பௌர்ணமியில் இடம் பெற்றிருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமாகும். சாதாரண மனிதர்களின் வாழ்க்கையை விட அவரது வாழ்க்கை மகத் தானது, மகிமைக்குரியது, மனிதர்கள் ஏற்றுப்போற்றவேண்டி யது என்பதை இது காட்டி நிற்கின்றது.

மனிதன் பிறக்கிறான், வளர்கிறான், உலக ஆசாபாசங்களில் அகப்பட்டு, அடிபட்டு, அவதிப்பட்டு முதுமையடைகிறான். முதுமையில் மீண்டும் சிறு குழந்தைபோல் தன் நிலை மறக்கிறான். தடியூன்றி நடக்கிறான், அதையும் கடந்தவன் கைகால்களை நிலத்தில் ஊன்றித் தவழ்கிறான், எழுந்திருக்க முயன்று விழுகிறான் - பின்னர் பிணமாய்- எவருக்கும் உதவாத பிண்டமாய் மண்ணுக்குள் மண்ணாகிப் போகிறான்.

இவ்வளவுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த மனிதன் புரியும் காரியங்கள்தான் எத்தனை விசித்திரங்களைக் கொண்டிருக்கிறது பாருங்கள். பணம் தேடுவதே வாழ்க்கைக் குறிக்கோளாக அமைந்துவிடுகிறது ஒருவனுக்கு. பணம் மட்டுமல்ல பதவி, பவிசுகளிலும் இன்னொருவனின் மனம் பாய்ந்து செல்கின்றது. இன்னொருவனோ தன் இளமையை, இளமையின் இனிமையை நிரந்தரமாக எண்ணி அதனையேலௌகீக வாழ்க்கையின் பெறுபேறாகப் பெண்ணையும், பொன்னையும், பொருளையும் தேடி ஆடியலைந்து போகிறான் . இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பிரித்து பார்த்தால் அவன் காணும் பெறுபேறு பூஜ்யமே. அவன் இருந்த இடம் தெரியாமல்போய் விடுகிறது. இனஞ்சனங்கள் காலப் போக்கில் அவனை மறந்தேபோய்விடுகிறார்கள். இப்படியொருவன் இருந்தான் என்பதற்கான அடையாளமே இல்லாமல் போய்விடுகின்றது. ஆனால்...

இதற்குமாறான பெருமக்களும் இருந்திருக்கிறார்கள், இருக்கவும் செய்கிறார்கள், இனிமேலும் இருப்பார்கள். அவர்கள்தான் மகான்கள். மனிதகுலத்தின் மேன்மைக்காக வாழ்ந்து மறைந்த அவர்கள் இன்றும் போற்றப்படுகிறார்கள். அவ்வாறு தோன்றிய மகான்களில் ஒருவரே புத்தபெருமான் ஆவார்.

மனிதர்கள் அன்பையும் அஹிம்சையையும் அருளையும் கைக் கொண்டு வாழ்வதை அவர் வற்புறுத்தினார். அதற்காக அரச போகத்தைக் கைவிட்டுத் துறவறம் பூண்டார். உலக ஆசாபாசங்களை வெறுத்து இடாம்பீக உடைகளை , பல்லக்கு பரிவாரங்களை ஒதுக்கிவிட்டுப் பிச்சா பாத்திரம் ஏந்தி உலக மாந்தருக்கு உபதேசம் வழங்குவதற்காக கால்நடையாக மண்ணின் மீது நடைபயின்றார். அவரைப் பின்பற்றியவர்கள் தம்மைப் பௌத்தர்கள் என்று அழைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

புத்தபெருமான் அவதரிப்பதற்கு முன்பும் அதற்குப் பின்பும் வெவ்வேறு இடங்களில் தேசங்களில் சாதாரண மனிதர்களை ஈடேற்றுவதற்காக மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். உபதேசங்களும் புரிந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரது பெயராலும் சமயங்களும் மதங்களும் ஆங்காங்கே தோன்றித்தான் இருக்கின்றன. ஆனால் மனிதன் இன்னமும் திருந்தியதாகத் தெரியவில்லை.

உலகம் முழுவதிலும் இன்றும் கூட மனிதன் மண்ணாசையாலும், பதவி ஆசையாலும் அடிபட்டுக் கொண்டுதான் இருக்கிறான். உலகில் அமைதியை, சகோதரத்துவத்தை, அன்பை, அருளை மனித நல்லிணக்கத்தைத் தோற்றுவித்த மதங்களின் பேராலேயே சண்டைகள் நடக்கின்றன. மண்டைகள் உடைபடுகின்றன. மதங்களுக்கிடையிலேயே பிரிவுகளும் பிரிவுச் சண்டைகளும் கொலைகளும் கோட்பாட்டு மோதல்களும் இடம்பெறுவதைக் காண்கின்றோம்.

இந்த மாதிரி நிலைமைகளில்தான் புத்தபெருமான் போன்ற சிரேஷ்டர்களின் சிந்தனைகள் எமக்கு வழிகாட்டுவனவாக அமைகின்றன.

மனிதனை மனிதன் மதித்தால், தன்னை மற்றவன் மதிக்க வேண்டும் என்று நினைப்பவன் மற்றவனையும் அதேபோல் மதிக்கத் தலைப்பட்டால், தனக்கு உள்ள உரிமைகள் மற்றவனுக்கும் இருக்கவேண்டும் என்று கருதினால் உலகில் எத்தனையோ பிரச்சினைகள் இன்று இல்லாமல் போய்விடும்.

அவ்வளவு ஏன் தர்மத்தைபோதித்த புத்த பெருமானை வழிபடும் நம் நாட்டவர்கள், பெரும்பான்மை மக்கள், அவர்களின் தலைவர்கள் அவர் வழியில் சிந்திப்பார்களானால் இந்த நாட்டிலும் கூட சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பிரச்சினை இருக்கமாட்டாது.

அவரவருக்குரியதை அவரவர் அனுபவிக்க அனுமதிப்பதென்பது எந்த கோட்பாட்டுக்கும் மாறான விடயம் அன்று.

## வாக்காளர் பெயர்ப்பட்டியல் குறித்து தேர்தல் அலுவலகத்துக்கு 7000 முறைப்பாடு

### அவற்றில் மூன்று மட்டுமே நிராகரிப்பு

யாழ்ப்பாணம், மே 17

2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தொடர்பாக 7 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அதில் 3 முறைப்பாடுகள் மட்டுமே நிராகரிக்கபட்டன.

இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பெயரிடப்படுவது தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் மே மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்படும்.

இந்தப் பெயர்ப் பட்டியலை மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், கிராம சேவகர் அலுவலகம், உள்ளூராட்சி சபைகள், தபாலகங்கள் என்பனவற்றில் பார்வையிட முடியும்.

இதேவேளை, இந்த வருடம் ஜனவரி மாதம் 3ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள், சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன.

இதே காலப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட விவரங்களில் முறைப்பாடுகள் ஏதாவது இருந்தால் அது பற்றி தெரிவிக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 7 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைப் பரிசீலனை செய்ததில் கிளிநொச்சியை சேர்ந்த ஒரு முறைப்பாடும், யாழ்ப்பாணத்தைத் சேர்ந்த இரண்டு முறைப்பாடுகளும் நிராகரிக்கப்பட்டன. ஏனைய அனைத்து முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரும்பான்மையான முறைப்பாடுகளை கிராம சேவகர் மீளாய்வு செய்தபோது குடியிருப்பாளர் குறித்த குடியிருப்பில் இல்லாமையாலேயே பெயர் விவரங்கள் நீக்கப்பட்டிருந்தன. இவை தொடர்பாகவே அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.- என்றார். (த-15)

## ஊர்காவற்றுறை மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

ஊர்காவற்றுறை, மே 17

ஊர்காவற்றுறைப் பிரதேச மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை போன்ற பகுதிகளிலிருந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மத்தியஸ்தர் தொடர்பான அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

தற்போது ஊர்காவற்றுறை பிரதேச மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலையில் பிரதி ஞாயிறுதோறும் முற்பகல் 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நடைபெற்று வருகின்றன.

எனவே இந்தப் பிரதேச மக்கள் தங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து கொள்வதற்காக முறைப்பாட்டை தவிசாளரிடம் அல்லது பிரதித் தவிசாளரிடம் அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும் மத்தியஸ்தர் சபையின் அமர்வுகளில் நேரடியாக சமர்ப்பிக்க முடியும் என மேற்படி மஸ்தியஸ்தர் சபையின் தவிசாளர் சு. தனபாலசிங்கம் தெரிவித்தார். (த-21)

## உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 717 பேர் மீளக் குடியமரவில்லை

யாழ்ப்பாணம், மே 17

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இன்னும் 717 பேர் தமது சொந்த இடத்தில் மீள் குடியமர்த்தப்படாமல் உள்ளனர்.

இந்தத் தகவலை யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இதுவரை 8 ஆயிரத்து 451 பேர் சொந்த இடங்களில் மீள்குடியமர்த் தப்பட்டுள்ளனர்.

மீள் குடியமர்த்தப்படாத பகுதிகளின் மீள்குடியமர்வுப் பணிகள் கட்டம் கட்டமாக நடந்து கொண்டிருக்கின்றன.

இதில் புன்னாலைக் கட்டுவன் வடக்கில் (ஜே/208) 75 குடும்பங்களைச் சேர்ந்த 277 பேரும், குப்பிளான் வடக்கில் 121 குடும்பங்களைச் சேர்ந்த 440 பேரும் மீள் குடியமர்வுக்காகக் காத்திருக்கின்றனர்.

இவர்களை மீள் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் அந்தந்த கிராம சேவையாளர் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார் அரச அதிபர். (த-9)

## கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு இரு காணிப் பதிவாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், மே17

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு காணிப் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மேலதிகப் பதிவாளர் நாயகம் என். சதாசிவஐயர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு பதிவாளராக திருமதி தாரகா பிறேமநாத்தும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு காணிப் பதிவாளராகச் செல்வி குணாஜினி கோபால கிருஷ்ணனும் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக நீண்டகாலமாகப் பதில் காணிப் பதிவாளர் மூலமே வேலைகள் இடம்பெற்றுவந்தன.

இந்த நிலையில் அந்த மாவட்டத்துக்கு நிரந்தர காணிப் பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கைத்தொலைபேசி பாவித்தால் கடும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே 17

பாடசாலைகளுக்குக் கைத்தொலைபேசி கொண்டு வருகின்ற மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அதிபர், ஆசிரியர்கள் பின்நிற்கக் கூடாது.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு இவ்வாறான அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கல்வியமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைய பாடசாலைகளுக்கு மாணவர்கள் கைத்தொலைபேசி கொண்டு செல்வது முற்றாகத் தடை செய்யப்படவேண்டும்.

ஆனால் மாணவர்கள் இரகசியமான முறையில் அதனைக் கொண்டு சென்று துஷ்பிரயோகம் செய்வதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனைத் தட்டிக் கேட்கும் அதிபர், ஆசிரியர்களுடன் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் முரண்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனால் இத்தகைய மாணவர்களைத் தண்டிக்க நினைக்கும் அதிபர், ஆசிரியர்கள் அதிலிருந்து பின்வாங்கிச் செல்வதாகவும் தெரியவருகிறது.

எது எவ்வாறாயினும் அதிபர், ஆசிரியர்கள் பொறுப்புடன் செயற்பட்டு மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

இந்த விடயத்தில் மாணவர்களின் பெற்றோர்களும் அதிபர், ஆசிரியர்களுடன் முரண்படாத வகையில் பொறுப்புடன் செயற்பட்டு அவர்களுக்குரிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ம-9)

# 2011ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் விரைவில்ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 17

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்பட்டியலை தயாரிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்தவர்களும், பதிவு செய்யாதவர்களும் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்ய வேண்டும்.

இந்தப் பதிவு நடவடிக்கையின் போது வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பைத் தேடிச் சென்றவர்களும், இந்தியாவுக்கு அகதிகளாக சென்றவர்களும் மற்றும் தடுப்பு முகாம்களில் சந்தேகத்தின் பேரில் கைதாகி விளக்கமறியலில் உள்ளவர்களின் பெயர் விபரங்களையும் அவர்களின் உறவினர்கள் பதிவு செய்ய முடியும்.

ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படும். 2011 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரை 2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்பட்டியலே நடைமுறையில் இருக்கும்.

2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் இனி முறையீடு செய்ய முடியாது. அவர்கள் 2011 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்பட்டியலிலேயே பதிவினை மேற் கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. (ம-15)

# 2010 ஆம் ஆண்டில் மட்டும் 12 லட்சம் மோ.சைக்கிள்கள்

## போக்குவரத்தில் இணைந்தன

கொழும்பு, மே 17

கடந்த 2010ஆம் ஆண்டில் 11 இலட்சத்து 92 ஆயிரத்து 127 மோட்டார் சைக்கிள்கள் வீதிப் போக்குவரத்தில் இணைந்து கொண்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சுத் தகவல் தெரிவித்துள்ளது.

இது சாதனையடைந்துள்ள எண்ணிக்கை எனவும் அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது.

இதைவிட, 4 இலட்சத்து 17 ஆயிரத்து 304 முச்சக்கர வண்டிகள், ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 838 மோட்டார் கார்கள், ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 271 உழவு இயந்திரங்கள், ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 241 பார ஊர்திகள் (லொறிகள்), 18 ஆயிரத்து ஏழு பஸ்கள் மற்றும் 13 ஆயிரத்து 775 இழுவை வாகனங்கள் என்பன கடந்த ஆண்டில் போக்குவரத்தில் இணைந்து கொண்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சுத் தெரிவிக்கின்றது. (ம-22)

# வாழ்வாதாரத் திட்டத்துக்கு பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம், மே 17

பொருளாதார அமைச்சின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள மனைப் பொருளாதார வாழ்வாதாரத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவில் இருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கமையத் தெரிவு செய்யப்படும் பயனாளிகள் விவசாயம், மீன்பிடி, வீட்டுத் தோட்டம், சுயதொழில்கள் போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுக்க நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன.

நாடுமுழுவதும் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்படும் இந்தச் செயற்றிட்டத்துக்கு வடமாகாணத்தில் யாழ்.மாவட்டம் முதற் தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

# வெளிநாடு செல்வதற்காக குழந்தையை விற்ற தாய்!

கொழும்பு, மே 17

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றுக்குச் செல்லத் தேவையான பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்காக ஆறுமாதமேயான அழகான தனது பெண்குழந்தையை விற்றார் பெண்ணொருவர்.

அப்புத்தளையைச் சேர்ந்த பெண் ஒருவர் மட்டங்குளி, அரிவத்தையில் வசிக்கும் தமிழ்த் தம்பதிக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு இவ்வாறு குழந்தையை விற்றுள்ளார்.

மருதானையில் விடுதி ஒன்றில் தங்கியுள்ள இந்தப் பெண்மணி தனது குழந்தையை விற்பனை செய்துள்ளதாக மருதானைப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மருதானைப் பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்ததுடன் குழந்தையையும் மீட்டுள்ளனர். குழந்தையை வாங்கிய தம்பதியி னர், இடைத்தரகர் ஆகியோரும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். (ம-22)


i7 COMPUTERS

Computer sales and repairs

கணனி விற்பனை, பழுதுபார்த்தல் நிலையம்.

தெற்கில் திருப்பத்தை ஏற்படுத்திய நாம் வடக்கிற்கு வருகிறோம்.

ASUS msi hp EPSON acer DELL LG D-Link FOXCONN

நாளை முதல் யாழ் நகரில்......

124B, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்திக்கு அருகாமை)

18-05-2011 காலை 9.00 மணிமுதல் எமது சேவைகளை ஆரம்பிக்கிறோம்.

BRAND NEW COMPUTERS

| PROCESSOR | MOTHERBOARD | PRICE |
|---|---|---|
| 3.2GHZ DUAL CORE | INTEL DG41WV | 28600/= |
| 3.2GHZ DUAL CORE | FOXCONN G41MXE | 27450/= |
| 3.2GHZ DUAL CORE | ASUSP5G41 | 28200/= |
| 3.2GHZ DUAL CORE | BIOSTAR G41 D3B | 27200/= |
| INTEL i3-540-3.06GHZ | INTEL DH55PJ | 37600/= |
| INTEL i3-540-3.06GHZ | FOXCONN H55XV | 36100/= |
| INTEL i3-540 -3.06GHZ | ASUS P7H55-M LX | 38650/= |
| INTEL i3-540-3.06GHZ | BIOSTAR DH55HD | 36400/= |

WITH : RAM - 2GB DDR3 KINGSTON
: HARDISK - 500GB SAMSUNG
: OPTICAL DRIVE - 24X SAMSUNG
: CASING - 450W CCIVO
: KEY/B+MOUSE - PS2 +PS2 +M/PAD

WARRENTY 3 YEARS + 2YEARS SERVICE WARRENTY

| PEND RIVES | PRICE |
|---|---|
| 2GB KINGSTON | 950/= |
| 4GB KINGSTON | 1 100/= |
| 8GB KINGSTON | 1 850/= |
| 16GB KINGSTON | 3 100/= |
| WARRENTY | 5YEARS |
| WEBCAM | |
| PC CAMERA | 900/= |
| BROWN CAM | 1 100/= |
| A4TECK PK-636K | 2 000/= |
| WARRENTY | 1 YEAR |
| PRINTERS | |
| HP D1663 DESKJET | 3 750/= |
| HP P1102 LASER | 11 600/= |
| WARRENTY | 1YEAR |
| HSDPA DONGLE | |
| ZTEMF112(7.2) (FROM UK) | 4 250/= |
| HUWAI E153 | 4 250/= |
| WARRENTY | 1YEAR |

| ROUTERS | PRICE |
|---|---|
| TP-LINK SINGLE PORT | 2 650/= |
| TP-LINK RJ45+USB | 2 950/= |
| TP-LINK 4PORT | 4 200/= |
| 150M TP-LINK WIRELESS | 6 000/= |
| D-LINK 1PORT+USB | 3 300/= |
| D-LINK 4PORT | 4 400/= |
| WARRENTY | 1YEAR |
| HEADPHONE | |
| HITECK WITH MIC | 500/= |
| A4TECK HS-5P | 675/= |
| SONIGEAR | 525/= |
| WOOFERS | |
| CREATIVE SBS A235 | 3 000/= |
| SPECTRA300 | 2 700/= |
| VIRUS CARD | |
| KASPERSKY SIGLE | 1 550/= |
| KASPERSKY 3 USER | 3 150/= |
| UPS | |
| POWER111 | 3 950/= |
| WARRENTY | 1YEAR |

NOTE :Network products, CD, DVD, Cable items are avilable.

| MONITOR | |
|---|---|
| LCD | PRICE |
| 15.6 ACER | 9500/= |
| DELL 18.5 | 11900/= |
| LED | |
| 15.6 ACER | 10000/= |
| 15.6 AOC | 10300/= |
| 18.5 AOC | 12750/= |
| 18.5 SAMSUNG | 13100/= |
| 18.5 VIEWSONIC | 13100/= |
| WARRENTY | 3YEARS |

➤ தவணைக் கொடுப்பனவு முறையில் கணனிகளை பெற்றுக்கொள்ளலாம்.

➤ மாணவர்களுக்கு விசேட விலைகழிவுகளில் வழங்கப்படும்.

➤ அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் கேள்விப்பத்திரங்களுக்கு விசேட விலைக்கழிவு.

வியக்க வைக்கும் மலிவு விலையில்...

| SECOND HAND PC | PRICE |
|---|---|
| LAP IBM Thik Pad R51 1.7GHz(512MB RAM\40GB HDD\Combo Drive) | 30 000/= |
| Desktop Intel Duel Core System | |
| DELL 1.6 GHz\1GB Ram DDRII\80GB Sata HDD\DVD ROM\256 MB VGA | 18 500/= |
| Desktop Intel Core 2 Dou System | |
| HP 1.8 GHz\1GB Ram DDRII\160GB Sata HDD\DVD ROM\256 MB VGA | 20 500/= |
| DELL Desktop Intel P4 System | |
| Dell Desk Top P4 2.8 GHz (512MB RAM\40GB HDD\CD ROM) | 10 000/= |
| DELL Desktop Intel P4 System DDRII | |
| P4 3.0 GHz Optiplax GX 520 (1GB DDRII\80GB HDD\DVD ROM\VGA 256MB) | 14 750/= |
| DELL Tower Intel P4 System DDRII | |
| P4 3.0 GHz Optiplax GX 520 (1GB DDRII\80GB HDD\DVD ROM\VGA 256MB) | 16 500/= |
| P4 3.0 GHz Optiplax GX280 (1GB DDRII\80GB HDD\CD ROM\VGA 128MB) | 14 000/= |
| DELL\HP\Compaq Tower Intel P4 System DDRI | |
| P4 2.6 GHz (512MB RAM\40GB HDD\CD ROM\VGA 64MB) | 11 600/= |
| IBM Tower Intel P4 System DDRI | |
| IBM Tower 3.0 GHz (512MB RAM\40GB HDD\CD ROM\VGA 96MB) | 12 250/= |
| IBM Desktop Intel P4 System | |
| IBM\Lenovo P4 3.2 GHz (1GBddr2 RAM\80GB HDD\DVD ROM\ VGA 256MB) | 15 000/= |
| 2.8 GHz (512MB RAM\40GB HDD\CD ROM\VGA 96MB) | 10 000/= |
| LCD Monitor | |
| LCD 19"Black USB DELL Silver Black | 11 000/= |
| LCD 19"Black USB DELL Silver Black (B) | 9 500/= |
| LCD 19"Black HP\Samsung\Compaq\NEC\DELL (B) | 8 750/= |
| LCD 17"Black HP \DELL | 9 500/= |
| LCD 17"Black HP\Samsung\Compaq\IBM | 9 250/= |
| LCD 17"Black HP\Samsung\Compaq\NEC\DELL (B) | 7 500/= |
| Key Board | |
| Key Board Black PS2 USED | 300/= |
| Key Board Black USB USED | 325/= |
| Mouse Optical USB Used | 200/= |
| Hard Disk | |
| 40GB HDD IDE | 1 900/= |
| 80GB HDD IDE | 3 100/= |
| 80GB HDD SATA | 3 100/= |
| RAM | |
| RAM 512 MB DDR II | 1 750/= |
| RAM 512 MB DDR I | 2 100/= |
| 3 MONTHS WARRENTY | |

TEL : 0212224959 MOBILE : 0777683676 EMAIL : i7cj@sltnet.lk WEB : www.i7c.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள்

## நிலைமையை விளக்குகிறார் ஹத்துருசிங்க

கொழும்புத்துறை, மே 17

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையைச் செயற்பட வைப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன என்று வடபகுதிக் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிமெந்து உற்பத்திக்குத் தேவையான சுண்ணாம்புக்கல் தொடர்ந்து அகழப்படும்போது நிலத்தடி நீரின் தன்மை மாறுபட இடமுண்டு. எனவே இது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் பின்னரே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் சிமெந்து உற்பத்திக்காகக் குறிப்பிட்ட இடங்களில் சுண்ணக்கல் அகழப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து இடம் பெறும்போது நன்னீர் உவர்ப்படையை வாய்ப்பு உள்ளது என்று சூழலியலாளர்கள் கூறுகின்றனர். இதற்கு ஆய்வுகளும் இடம்பெறுகின்றன.

இதன் முடிவுகளை வைத்தே சிமெந்துத் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிமுடிவுசெய்யப்படும்.

இந்தத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்கும்போது பொருளாதாரம் பெரிய அளவில் உயர்வடைய வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன் தொழில் வாய்ப்புகளும் அதி களவில் கிடைக்கும்.- என்றார். யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் மற்றும் தொழில் அதிபர்களுடனான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது. இதன் போதே ஹத்துருசிங்க இவ்வாறு கூறினார். (ம-135)

# சிவபூமி முதியோர் இல்ல நான்காவது ஆண்டு நிறைவு

வலி.வடக்கு, மே 17

சிவபூமி முதியோர் இல்ல நான்காவது ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்ல மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை ஹற்றன் நஷனல் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் ம.தயாகரனும் ஆசியு ரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பபரமாச்சாரிய சுவாமிகள், வழக்கம்பரை அம்மன் கோயில் குரு சிவஸ்ரீ சு.சுந்தரரேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் வழங்கவுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினாகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு அரங்க நிகழ்வுகளாக கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர்களின் குழுநடனம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மாணவர்களின் நடனம், ரி.தேவானந்த் நெறியாள்கையில் பேராசிரியர் நந்தியின் 'சிங்கப்பூர் டாக்டர்' நாடகம், துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவர்களின் சத்தியவான் சாவித்திரி நாடகம் என்பன இடம் பெறவுள்ளன. (ம-86)

## எல்லாமே தலைகீழ்...



தீர்வு வருமா: சென்.ஜோன்ஸ் கல்லூரி நுழைவாயிலுக்கு முன்பாக இருந்த பாதசாரிகள் குறியீட்டின் நிலை. (23)

# 7ஆயிரத்து 952 பேர் இன்னும் நலன்புரி முகாம்களில்

யாழ்ப்பாணம், மே 17

யாழ்.மாவட்டத்தில் 7ஆயிரத்து 952 பேர் நலன்புரி முகாம்களில் தவம் கிடக்கின்றனர் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் கட்டம் கட்டமாக அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின் றனர்.

வலிகாமம் வடக்கில் 3ஆயிரத்து 355 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 861 பேரும், வடமராட்சி கிழக்கில் 306 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்தி 61 பேரும் என 3ஆயிரத்தி 14 குடும்பங்கள் இன்னும் அகதிமுகாம்களில் தங்கியுள்ளன. இவ்வாறு அகதி முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களைச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்து வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# காணி உரித்துப் பதிவு நடைமுறை மிக விரைவில் வட மாகாணத்தில்

யாழ்ப்பாணம், மே 17

காணி உரித்துப் பதிவு நடைமுறைகள் மிக விரைவில் வடமாகாணத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக மேலதிக காணிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடு முழுவதும் உள்ள 72 பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த வருடம் காணி உரித்துப் பதிவு நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. அதன் பிரகாரம் வடமாகாணத்திலும் காணி உரித்துப் பதிவுகள் விரைவில் இடம்பெறவுள்ளன.

வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்த நடைமுறை மிக விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதில் முதற்கட்டமாக அரச காணிகளில் குடியிருப்பவர்களுக்கான காணி உரித்துப் பதிவு இடம்பெறவுள்ளது.

இந்தக் காணி உரித்துப் பதிவானது 1998ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க காணி உரித்துப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்படியே செயற்படுத்தப்படவுள்ளது. காணி அமைச்சு, நில அளவை அதிபதி, பதிவாளர் நாயகத் திணைக்களம் ஆகியன இணைந்தே இதனை நடைமுறைப்படுத்தவுள்ளன.

காணி உரித்துப் பதிவு வழங்கப்பட்டதன் பின் வடமாகாணத்தில் உள்ள காணி தொடர்பான பிரச்சினை குறைந்துவிடும் என்று நம்புகிறேன். காணி எல்லைப் பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கமுடியும்.

இவ்வாறு பதிவுகள் வழங்கப்படும் குடியிருப்பாளர்கள் பல்வேறு நன்மைகளைப் பெறக் கூடியதாக இருக்கும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

# ஹைலண்ட் பால்மாவின் விலை 20 ரூபாவால் உயர்வடைகிறது

கொழும்பு, மே 17

400 கிராம் ஹைலண்ட் பால்மாபக்கற் ஒன்றின் விலையை 20 ரூபாவால் அதிகரிப்பதற்கு மில்க்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் இந்த விலை அதிகரிப்புக்கு அமைய 400 கிராம் ஹைலண்ட் பால்மா பக்கற் ஒன்றின் புதிய விலை 230 ரூபாவாக இருக்கும்.

பால்மா உற்பத்தியாளர்கள் தொடர்பாக லீற்றர் ஒன்றுக்குச் செலுத்தப்படும் விலை கடந்த மார்ச் மாதம் முதல் 33 ரூபாவில் இருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உற்பத்திச் செலவினங்கள் அதிகரித்துச் சென்றுள்ளமை காரணமாக நிறுவனத்துக்கு ஏற்படும் நட்டத்தைக் குறைத்துக்கொள்வது தொடர்பாக பால்மாவின் விலையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-22)

# பூங்காக்களில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் தடைச்சட்டம்

கொழும்பு, மே 17

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலுள்ள பொதுமக்களின் ஓய்வுநேரங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பூங்காக்கள் பொதுமக்கள் ஓய்வைக் கழிப்பதற்காக உள்ள ஓய்வு மையங்கள் ஆகியவற்றில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்படவுள்ளது. இதற்குரிய சட்டத்தை அரசு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு சில பூங்காக்களிலும் ஓய்வு மையங்களிலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களால் அவற்றின்வனப்புகுறைந்து போயுள்ளது.மக்களின் பயன்பாட்டுக்கென்றே அமைக்கப்பட்டுள்ள இடவசதிகளும் கூட ஆக்கிரமித்துக் கொள்ளப்படுகின்றன.

இதன்காரணமாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள்தெரிவிக்கின்றனர். (ம-22)

# விரிவுரையாளர் பிரச்சினையில் அடாவடித்தனம் வேண்டாம்

## ஐ.தே.கட்சி கோருகிறது

கொழும்பு, மே 17

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினையில் அரசு அடாவடித்தனப் போக்கைக்கைவிட்டு, அவர்களுடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்வர வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினை மேலும் உக்கிரம டைந்துள்ளது. தற்போதைக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் களுக்கு சம்பள உயர்வு வழங்க முடியாது என்று தெரிவிக்கும் அரசு, திணைக்களங்களினதும், கூட்டுத்தாபனங்களினதும், ஏனைய அரச நிறுவனங்களினதும் உயர் அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு வழங்கியுள்ளது. அது மட்டுமன்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளரினதும் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க அண்மையில் நாடாளுமன்றில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும் என்று உறுதியளித்தார். ஆனால் அவர் கூறிய சம்பள அதிகரிப்பானது விரிவுரையாளர்களின் கோரிக்கை உ... வாகும்.

தற்போது பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகளும் சம்பள உயர்வைக் கோரி நிற்கின்றனர். இவர்களே பரீட்சை வினாத்தாள் களையும் திருத்தப்போகின்றார்கள். இந்த நிலையில், மேற்கொண்டு வரும் பணிப் பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரிவுரையாளர்களிடம் கூறியுள்ளார். பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடம் இப்பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த அரசு சந்தர்ப்பம் வழங்க வில்லை. குறிப்பாக உயர்கல்வி அமைச்சும் கூட.

அரசு பல்கலைக்கழக விரிவுரையாளர்களைப் பழிவாங்குகிறது. சாதாரண அரச ஊழியர்களுக்கு உள்ள சலுகைகள் விரிவுரையாளர்களுக்கு இல்லை. வீட்டுக் கடன், கணினி கொள்வனவுக் கடன் ஆகியவை கூட விரிவுரையாளர்களுக்கு இல்லை. இன்று அதிகமான விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என்று அரசு கூறுகிறது. சாதாரணமான கோரிக்கை களுக்குத் தீர்வை வழங்காமலும், பல்கலைக்கழக கட்ட மைப்பில் செய்து கொடுக்க வேண்டிய வசதிகளை செய்து கொடுக்காமலும் பிடிவாதத்துடன் அரசு இருந்தால் எப்படி அவர்கள் நாட்டில் இருப்பார்கள்? அவர்களுக்கு உள்நாட்டை விடவும் வெளிநாட்டில் கவர்ச்சியான சம்பளம் வழங்கப் படுகிறது.

எனவே, புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதை அரசு தடுக்க வேண்டும்.

இதற்கு பேச்சுமூலம் அரசு தீர்வுகாண முன்வரவேண்டும். இல்லாவிடில் பல்கலைக்கழகத்திலும் வெளியிலும் போராட்டங்க... ,தவும் நாம் தயார்.-என்றா (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் ரூ. 90 லட்சம் செலவில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,மே 17

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் 90 லட்சம் ரூபா பெறுமதியானபல்வேறு வேலைத் திட்டங்கள் "சோஆ" நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வருட ஆரம்பத்தில் "சோஆ" நிறுவனத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான அனுமதியை ஜனாதிபதி விசேட செயலணி வழங்கியுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

12 லட்சத்து 68 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியில் 25 மலசல கூடங்கள் அமைக்கப் படவுள்ளன. 6 லட்சத்து 34 ஆயிரத்து 375 ரூபா பெறுமதியில் 25 கிணறுகளும், 3 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா செலவில் ஐந்து விவசாயக் கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளன. 12 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் 11 பொது மண்டபங்கள் திருத்தம் செய்யப்படவுள்ளதுடன் 3 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா செலவில் பாடசாலை மாணவர்களுக்கு 25 சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளன.

ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 250 ரூபா செலவில் ஐந்து பாடசாலைகளுக்குக் கற்றல் உப கரணங்களும், 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் 75 குடும்பங்களுக்குக் கடற்றொழில் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன. 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் 25 குடும் பங்களுக்கு சிறியளவிலான வருமானத்துக்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

"சோஆ" நிறுவனம் அமுல்படுத்தவுள்ள இந்தத் திட்டங்களில் தற்போது சில திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உதவி அரச அதிபர் எஸ். திருலிங்கநாதன் தெரிவித்தார். (த-14)

# 'காப்பெற்' வீதிகளுக்கு விரைவில் பாதசாரிக் கடவைகள், குறியீடுகள்

யாழ்ப்பாணம், மே 17

யாழ். நகரின் 'காப்பெற்' வீதிகளுக்குப் பாதசாரிக் கடவைகள், வீதிக் குறியீடுகள் அடுத்த மாதமளவில் போடப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார்.

நகரில் போடப்பட்டுள்ள 'காப்பெற்' வீதிகளில் வாகனங்கள் மின்னல் வேகத்தில் செலுத்தப் படுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. வீதிக் கடவைகள், குறியீடுகள் இதற்குக் காரணம் எனவும், இதனால் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் யாழ். பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்டப் பிரதம பொறியியலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நகரின் 'காப்பெற்' வீதிகளுக்கு பாதசாரிகள் கடவைகள், வீதிக் குறியீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்தக் குறியீடுகளை அமைப்பதற்குக் கொழும்பிலிருந்து இயந்திரங்கள் எடுத்துவரப்படவுள்ளன.

'காப்பெற்' வீதிகள் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றதும் வீதிக்குறியீடுகள் அமைக்கப் படும் -என்றார். (த-9)

## விவசாயிகள் குறைதீர்க்க...



பயன்தரட்டும்: யாழ்.மாவட்டத் தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் புதிய கொள்வனவு விற்பனை நிலையத் தின் திறப்பு விழா அண்மையில் கட்டுவனில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் தேசவள விவசாயிகள் சம் மேளனத்தின் தலைவர் க.முதலியார் உரையாற்றுகின்றார். அருகில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, உதவித் திட்டப் பணிப்பாளர் கே.மகேஸ்வரன் ஆகியோர் உள்ளனர்.
(302-86)

# தற்காலிக இணைப்பில் உள்ள அலுவலர்களை நிறுத்த யாழ்.தேர்தல் அலுவலகத்துக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், மே 17

உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் கடமைக்காக யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களத்துக்கு தற்காலிகமாக இணைப்புப் பெற்ற அலுவலர்களை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்கள ஆணையாளர் இந்த அறிவிப்பைக் கடிதம் மூலம் விடுத்துள்ளார் என்று யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. நடைபெறவிருந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு விசேட கடமைகளுக்காக மேலதிக அலுவலர்கள் பணிக்குஅமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் முன்னர் தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்த ஆளும் கட்சியின் வேட்பு மனுவை ஏற்றுக் கொள்ளலாம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளபோதும் தேர்தல் நடைபெறும் திகதியை தேர்தல் திணைக்களம் இது வரை அறிவிக்கவில்லை.

இதனால் இங்கு உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவது தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இருக்க தேர்தல் கடமைக்காக யாழ்.தேர்தல் திணைக்களத்துக்கு மேலதிகமாகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அலுவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதியில் இருந்து நிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கடிதம் மூலம் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.(த-9)

# இந்தியக் கல்விக் கண்காட்சி இன்று பொது நூலகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 17

"இந்தியக் கல்விக் கண்காட்சி" யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக யாழ். பொது நூலகத்தில் இன்று செவ்வாய்க் கிழமையும் நாளை புதன் கிழமையும் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பட்டதாரி மற்றும் முது நிலைப் பட்டதாரிக் கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள், இலவசத் தொழில்சார் வழி காட்டுதல் ஆலோசனைகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரையும் நாளை புதன் கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரையும் இந்தக் கண் காட்சி இடம்பெறவுள்ளது.

ஆர்வமுடைய அனைவரும் இந்தக் கண்காட்சியை பார்வையிட முடியுமென்று தெரிவிக்கப் படுகின்றது.

(த-115)

# உயர்தர மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,மே 17

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்களை வழங்கிக் கருத்தரங்குகளை நடத்தப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதான மத்திய நிலையங்களில் இந்தக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், குறித்த பாடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுடன் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்ற மாணவர்களைச் சீருடையுடன் அனுப்பி வைகுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்குகள் நடைபெறும் திகதிகள், வளவாளர் பெயர் விவரங்கள் மற்றும் மத்திய நிலையங்களுக்கு இணைக்கப்பட்ட பாடசாலைகளின் விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-14)

# மருந்துகள் வந்தன

வடமராட்சி,மே 17

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குப் போதிய மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ஒரு சில முக்கிய மருந்துகள் வந்துசேராமையால் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் அவற்றை வெளியிலேயே வாங்கவேண்டிள்ளது.

பற்றாக்குறையாக உள்ள சில முக்கிய மருந்துவகைகள் விரைவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(த-236)

# வீடுகளுக்குள் புகுந்து குரங்குகள் அட்டகாசம்

மிருசுவில், மே 17

மிருசுவில் ஆலத்தடி பகுதியில் குரங்குகளின் அட்டகாசத்தால் அந்தப் பகுதி மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தப் பகுதிக்குக் கூட்டம் கூட்டமாக வரும் குரங்குகள் மாமரங்கள், கறிமுருங்கை மரங்களில் ஏறி மாங்காய்களையும், முருங்கைக் காய்களையும் தின்று விட்டுச் செல்கின்றன.

மேலும் இங்கு ஓலையால் வேய்ந்திருக்கும் வீடுகளுக்குள் புகுந்து சமைத்து வைத்துள்ள சோறு, கறி என்பவற்றையும் ஏனைய உணவுப் பொருள்களையும் பதம் பார்த்துவிட்டுச் செல்கின்றன.

இவற்றை மக்கள் துரத்த முயன்றால் குரங்குகள் அவர்களைத் திருப்பித் துரத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்த வழி தெரியாமல் அந்தப் பகுதி மக்கள் திண்டாடுகின்றனர். (த-100)

# கரவெட்டிப் பிரதேசப் பயணிகளுக்காக நெல்லியடி - யாழ் பஸ் சேவை தேவை

வடமராட்சி, மே 17

பருத்தித்துறை - யாழ்ப்பாணம்பிரதானபாதையில்நெருக்கடி மிகுந்த வேளைகளில் கரவெட்டிப் பிரதேசப் பயணிகள் யாழ்ப்பாணம் செல்வதற்கு வசதியாக நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தனியான பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகக் காலை நேரத்தில் 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்குப் பயணிப்பதற்காக அல்வாய் மாலுசந்தி, நெல்லியடி பஸ் நிலையம், நாவலர் மடம், கரணவாய் குஞ்சர் கடை போன்ற பஸ்தரிப்பிடங்களில் காத்திருக்கும் பயணிக்கு இ.போ.ச பஸ்ஸிலோ மினி பஸ்ஸிலோ ஆசனம் கிடைக்காது. அந்தரத்தில் தொங்கி நின்று பயணம் செய்ய வேண்டியிருப்பதாகக் கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச வாசிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் குறைபாட்டைக் போக்க நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இ.போ.ச பஸ் ஒன்றையோ அல்லது மினிபஸ் ஒன்றையோ சேவையிலீடுபடுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்தப் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைக்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் கூட்டம் ஒன்றை நடத்தி விரைவில் தீர்வு காணப்படும் என கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்துக் கரவெட்டி பிரதேச செயலர் தலைமையில் பருத்தித்துறை இ.போ.ச.டிப்போ அதிகாரிகள், வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கப் பிரதிநிதிகள், பிரதேசப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் இந்தப் பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காணப்படவுள்ளது.

(த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டியில் குளறுபடி

## கல்விச் சமூகம் பெரும் அதிருப்தி

யாழ்ப்பாணம், மே 17

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ்த் தினப்போட்டியில் குளறுபடிகள் இடம்பெற்றதாகப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இந்தப் போட்டியை வருடாந்தம் வலிகாமம் கல்வி வலயத் தமிழ்ப் பாடத்துக்கான உதவிக் கல்விப்பணிப்பாளரே கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடத்தி வந்துள்ளார்.

இந்தமுறை அவரிடம் இந்தப் பணி வழங்கப்படவில்லை. உயர் அதிகாரிகள் இருவர் தாம் அந்தப் பணியைச் செய்யப் போவதாகக் கூறிப் பொறுப்பேற்றுள்ளனர்.

தமிழ்த்தினப் போட்டிகளுக்கு நடுவர்களாக ஒரே கல்விக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களே நியமனம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நான்கு கல்விக் கோட்டங்கள் இருந்தும், ஒரே கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த நடுவர்கள் நியமனம் செய்யப்பட்டமை ஏன் என்று மாணவர்களின் பெற்றோர் கேள்வி எழுப்புகின்றனர்.

ஒரு போட்டிக்கு மூன்று நடுவர்கள் இருந்தால் போட்டி முடிவு பெற்றதும் மூவரும் இணைந்து தாம் இட்ட புள்ளிகளைக் கூட்டி இறுதிப் பெறுபேற்றை வழங்குவதே நடைமுறையாகும்.

இந்தமுறை நடுவர்களினால் போடப்பட்ட புள்ளிகளைப் போட்டிகளைப் பெறுப்பெடுத்த உயர் அதிகாரிகளே கூட்டி இறுதிப்பெறுபேற்றை முடிவு செய்துள்ளார்கள்.

இவ்வாறு வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்தினப் போட்டிகளில் இம்முறை பல்வேறு குளறுபடிகள் அரங்கேற்றப்பட்டுள்ளதாகப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் க.இராஜேந்திரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்து ஆராய்ந்து மேலதிக தகவல்களை தருவதாகவும் தெரிவித்தார். (த-68)

## வலி வடக்குப் பிரதேசத்தில்

# 150 அரை நிரந்தர வீடுகளை நோர்வே நிறுவனம் அமைக்கும்

யாழ்ப்பாணம்,மே 17

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் 150 அரை நிரந்தர வீடுகள் மற்றும் மலசல கூடங்களை அமைக்கும் திட்டத்தை நோர்வே அகதிகள் பேரவை முன்னெடுக்கவுள்ளது.

ஜனாதிபதி விசேட செயலணி இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அனுமதியை கடந்த மாதம் 4 ஆம் திகதி வழங்கியுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அரை நிரந்தர வீடுகள் மற்றும் மலசல கூடங்களை அமைப்பதற்குத் தலா 87 ஆயிரம் ரூபாவை அந்த நிறுவனம் ஒதுக்கியுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு போதாது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி விசேட செயலணியின் செயலாளர் எஸ்.பி. திவாரட்ண, ஒதுக்கீட்டுத் தொகை அதிகரிக்கப்பட்ட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு ஒதுக்கிய நிதியை அதிகரிக்கமுடியாத சந்தர்ப்பத்தில் வழங்கப்படவுள்ள அரை நிரந்தர வீடுகளின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் எனவும் அதன் மூலம் வீடு மற்றும் மலசலகூடத்தை அமைப்பதற்கான நிதியை அதிகரிக்க முடியும் எனவும் அவர் அந்த நிறுவனத்துக்கு அறிவித்துள்ளார். (த-14)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள்

கொழும்புத்துறை, மே 17

கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

200 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியேறியுள்ள இந்தப் பகுதியில் குடியிருப்புக் காணி ஒன்றுக்கு 10 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்படுகின்றன.

தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையும் தொண்டு நிறுவனங்களும் இணைந்து தென்னங்கன்றுகளை இலவசமாக வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் இந்தப் பகுதியில் பெருமளவு தென்னை மரங்கள் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த-135)

## மக்கள் சேவைக்காக...



*நாங்கள் உங்களுடன்: அச்சுவேலிப் பொலிஸாரின் பொலிஸ் - பொதுமக்கள் நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை இடைக்காடு மகாவித்தியாலத்தில் நடைபெற்றுள்ளது. இதில் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செலயர் ம.பிரதீபன், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா, அச்சுவேலி பொலிஸ் பெறுப்பதிகாரி ஜனக சாஸ்திரி மற்றும் அதிகாரிகள் அழைத்துவரப்படுகின்றனர். (த-11)*

# தாக்குதலில் குடும்பஸ்தர் படுகாயம்

கொழும்புத்துறை, மே 17

கொழும்புத்துறை ஆனந்தன் வடலிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்துள்ளனார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த சி.பூலோகராசா (வயது -46) என்பவரை இரவு நேரம் வீட்டுக்குள் வந்த சிலர் வெளியே அழைத்துப் பொல்லுகளால் தாக்கிவிட்டுத் தலைமறைவாகினர். அவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். இவ்வாறான அடாவடிச் சம்பவங்களால் அந்தப் பகுதி மக்கள் அச்சமும் விசனமும் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-135)

# அமல மரித்தியாகிகள் சபை ஸ்தாபகரின் நினைவு நிகழ்வு

கொழும்புத்துறை, மே 17

அமலமரித் தியாகிகள் சபையின் ஸ்தாபகர் புனித யூஜின் டீ மசனட்டின் 150 ஆவது வருட நினைவு விழா நிகழ்வுகள் யாழ். பேராலயத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நன்றிக் கூட்டுத் திருப்பலி இடம்பெறும்.

அமலமரித் தியாகிகள் சபையின் யாழ்.மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளார் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (த-135)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரத்து 225 வீடுகள்

யாழ்ப்பாணம், மே17

அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 225 வீடுகள் அமைக்கப்படுகின்றன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இவற்றில் ஆயிரத்து 678 வீடுகள் அமைக்கும் பணிகள் முழுமையடைந்துள்ளன எனவும் 112 வீடுகளின் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் :

யு.என்.டி.பி நிறுவனம் 110 வீடுகளையும், போரூட் நிறுவனம் 9 வீடுகளையும், எஸ்.டி.சி நிறுவனம் 375 வீடுகளையும், கரித்தாஸ் நிறுவனம் 290 வீடுகளையும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 350 வீடுகளையும், யு.என்.ஹபிற் நிறுவனம் ஆயிரத்து 81 வீடுகளையும் அமைத்துள்ளன.

இவற்றில் 112 வீடுகள் மட்டும் பணிகள் முழுமையாகப் பூர்த்தியடையாத நிலையில் உள்ளன.

அவை விரைவில் நிறைவு பெறும் - என்றார். (த-9)

# காக்கைதீவுக் கடலில் இறால் கூடுகள் சேதம்

நவாலி, மே 17

காக்கைதீவுக் கடலில் மீண்டும் இறால்கள் அபகரிக்கப்பட்டு இறால் கூடுகளும் வீசி எறியப்படுகின்றன.

இந்தப் பகுதியில் நவாலி மற்றும் சில பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் முதல் நாள் மாலை இறால் கூடுகளை கடலில் அமைத்து விட்டுச் செல்கின்றனர்.

மறுநாள் அந்த இடத்துக்கு இறாலைப் பிடித்துச் செல்வதற்காக வந்தால் அங்கு இறால்கள் முழுவதும் அபகரிக்கப்பட்டு இறால் கூடுகளும் தூக்கி வீசப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சியடைகின்றனர்.

இந்தச் சம்பவம் அடிக்கடி இடம்பெற்று வருவதால் இவற்றை விற்றுச் சீவியம் நடத்தும் பல குடும்பங்கள் பட்டினியால் வாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இவற்றைத் தடுத்து நிறுத்த யாராவது முன்வரவேண்டுமென்று பாதிக்கப்படும் மீனவர்கள் கோருகின்றனர். (த-100)

# தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா வெள்ளியன்று

யாழ்ப்பாணம், மே 17

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ்மன்றம் இந்த ஆண்டு முத்தமிழ் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இந்த விழா எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்குக் கல்வியியல் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவும், கௌரவ விருந்தினராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்ந்த பின்னர் தேவைகளை எதிர்நோக்கும் முத்துஐயன்கட்டு விவசாயிகள்

பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டு குளத்தின்கீழ் இந்தமுறை சிறுபோக நெற் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அழிவுற்ற அல்லது களவாடப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கான நீர்ப்பம்பிகளும் பொருத்தப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் நெற் செய்கையையும் மேட்டுப் பயிர்ச் செய்கையையும் மேற்கொள்வதற்காக தரிசாக இருந்த காணிகளைத் துப்புரவு செய்து பயிர்ச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வாய்க்கால்கள் புனரமைக்கப்படாததால் நீர் முகாமைத்துவத்தைச் சரியாகப் பேண முடியாதுள்ளது. சில காணிகளுக்கு நீர்பாயக் கூடிய ஏதுநிலையும் இல்லை. தொடர்ந்தும் விவசாயிகள் ஈவு என்ற பெயரிலே தமது காணிகளை விடுத்து இன்னொருவர் காணியில் செய்கை பண்ண வேண்டியுள்ளது. இவை தவிர்க்கப்பட வேண்டும். ஒரே ஒரு பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டுக் குளத்தின் வாய்க்கால்கள் இனிமேலாவது திருத்தப்பட்டு ஈவு முறையினைத் தவிர்த்து அவரவர் காணியில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும்.

முன்னர் இந்தப் பகுதி ஒன்று முதல் ஏழு கண்டங்களாக வகுக்கப்பட்டுப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் கடந்த 30, 35 வருடங்களாக வாய்க்கால்கள் திருத்தப்படாததால் ஒவ்வொரு கண்டமாக விடுபட்டுச் சுருங்கிக் கொண்டு வருகிறது. நீர் வீண் விரயமாகிறது. இதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் இந்தமுறை சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அழிவுற்ற அல்லது களவாடப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கான நீர்ப்பம்பிகளும் பொருத்தப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் ஆர்வத்துடன் தரிசாக இருந்த காணிகளையும் துப்புரவு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு விவசாயியும் தமது காணியைத் துப்புரவு செய்து அதில் பல பயிர்களையும் நாட்டி தனது நேரடிக் கண்காணிப்பில் இருக்கவே விரும்புகிறான். அதைவிடுத்து ஈவுப் பங்கு என்ற முறையில் இரண்டு மூன்று மைல் சென்று ஓர் ஏக்கர் அல்லது ஒன்றரை ஏக்கர் செய்கையினை மேற்கொள்ள முடியாத நிலையில் காணிப் பங்கைப் பெற்று அதனை விற்றுவிட்டுச் செல்கிறான். இதனால் அவனது குடும்பம் வறுமையில் வாடுகின்றது. அவனது காணிகள் காடாகக் கிடக்கின்றன. வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டால் எப்படியாவது கணவனோ மனைவியோ அல்லது பிள்ளைகளோ ஏதாவது பயிர்களை நடுவார்கள். எனவே ஈவு முறை ஒழிக்கப்பட்டு தமது சொந்தக் காணியில் பயிர்கள் நடுவதற்கு வாய்க்கால்கள் புனரமைக்கப்பட வேண்டும்.

தற்போது என்றுமில்லாதவாறு விதை நிலக்கடலையின் விலை 50 கிலோ 10 ஆயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது. இந்த விலை ஏற்றத்தால் நிலக்கடலைச் செய்கையாளர்கள் குறைந்துள்ளனர் உழுந்து பயறு போன்றவை மழையினால் சேதமடைந்தன. விதையினைப் பெறமுடியாதுள்ளது. இவற்றை விவசாய திணைக்களத்தினர் இனம் கண்டு மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். வெறுமனே விவசாய திணைக்களம் என்ற பெயரில் இயங்கினால் மட்டும் மக்கள் முன்னேற மாட்டார்கள்.

நல்லின விதைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இல்லாதவற்றை முடிந்தவரை பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். விவசாயிகளுக்கிடையிலான போட்டிகளை நடத்த வேண்டும். பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும்.

விவசாயத்தை ஊக்குவித்தால் நல்ல பயனை அடையலாம் மாதிரிச் செய்கைகளைச் செய்வதற்கு விவசாயிகளைத் தேர்வு செய்து அவர்களுக்கான ஊக்கத்தை வழங்க வேண்டும்.

விவசாயப் போதனாசிரியர் ஒருவர் இருக்கின்றார் என்று கூடச் சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். அடிக்கடி விவசாயப் போதனாசிரியர் விவசாயிகளைச் சந்திக்க வேண்டும். அறிவுரைகளைக் கூறவேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும். வெறுமனே விவசாயத்திணைக்களம் இருக்கின்றது என பெயர்ப்பலகையுடன் இருந்து கேட்கும் பொருள்களை இல்லை என்று கூறிவந்தால் மட்டும் போதாது.

விவசாயிகள் எதனால் துன்பப்படுகின்றான்? அவர்களுக்கு எம்மால் எப்படி உதவமுடியுமா? என்ன செய்யலாம்? என விவசாயிகள் பக்கம் ஒருகணம் சிந்திக்க வேண்டும். முல்லை மாவட்டத்தில் மருந்து தெளிக்கும் தெளிகருவி எவரிடமும் இல்லை. வைத்திருப்பவர்கள் 100 ரூபா தொடக்கம் 150 ரூபா வரை வாடகைக்கு விடுகின்றனர். அதுவும் உரியநேரத்தில் கிடைப்பதில்லை.

விவசாய திணைக்களத்தினர் தெளிகருவிகளைக் குறைந்த விலையில் விற்க ஏற்பாடு செய்யலாம். தவறின் குறைந்த வாடகை அடிப்படையில் தேவைக்கேற்ப உரிய நேரத்தில் பெறக்கூடியதாக வழங்க முன்வரலாம். எத்தனையோ விவசாயிகள் தெளிகருவியின்றி உரிய நேரத்தில் மருந்தினைத் தெளிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

கமநலச் சேவை நிலையத்துக்கு மக்கள் சேவைக்கென உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ஆனால் தனியார் உழவு இயந்திரக் கூலியும் கமநலச் சேவைகள் நிலையத்தின் உழவு இயந்திரக் கூலியும் ஒன்றாகவே உள்ளது. தனியார் இயந்திரத்தின் மூலம் கடன் அடிப்படையில் உழவு செய்யலாம்.

ஆனால் கமநலச் சேவை நிலையத்தில் முன்னதாகவே பணம் செலுத்த வேண்டும்.

**இராஜ் தனபால்**

ஆகவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும். மீண்டும் மீண்டும் அவர்கள் வறுமை நிலையில் இல்லாது மற்றவர்களைப் போல வாழ வேண்டும். அரச நிறுவனங்கள் விவசாயிகளைத் தோழனாகக் கருதி அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டும். ''வரப்புயர நெல் உயரும் நெல் உயரக் குடியுயரும் குடி உயரக் கோன் உயர்வான்'' இது ஔவை வாக்கு. ★

பிரவேசம் இலவசம் !
முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இந்தியக் கல்விக் கண்காட்சி


17th, 18th May 2011 யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில்
17th - 9.00 am to 5.00 pm
18th - 9.00 am to 1.00 pm

இந்திய கல்விக் கண்காட்சி 2011 உங்களுக்கு வழங்குவது என்ன?

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்து துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹோட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதியர் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரீக கலை பாடசாலைகள்

ORGANISED BY: EdCIL (India) Limited
SUPPORTED BY: CONSULATE GENERAL OF INDIA JAFFNA
PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS LANKA EXHIBITION
4th Floor, Automobile Association Building, No. 40, Sir Mohamed Macan Markar Mw, Colombo 03
Tel: 011 239...
E-mail: sudesh@saexhibitions.com

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் செட்டியார்

*(இளைப்பாறிய அதிபர், யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை - ஆனைக்கோட்டை, பரிபாலகர், சிதம்பர சுப்பிரமணியர் சுவாமி கோயில், கோவிலாக்கண்டி)*



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் செட்டியார் 13.05.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செட்டியாரின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், யோகம்மா மற்றும் பரமேஸ்வரி, தவமணிதேவி, பத்மாதேவி, கமலாதேவி, மகாலிங்கம், பரஞ்சோதிலிங்கம், இலங்காதேவி ஆகியோரின் சகோதரியும் கமலாவதி (U.K), விமலாவதி (CANADA), சிதம்பரசுப்பிரமணியம் செட்டியார் (U.K), சிவனேசன் செட்டியார் (SWISS), குகனேசன்செட்டியார் (U.K), பரதன் செட்டியார்(U.K), லீலாவதி, சிவஞானவதி ஆகியோரின் அன்புத் தாயும் அன்னலிங்கம், விஜயகுமாரன், சாந்தினி, காந்திமதி, கௌரி, சாமளா, சிவமூர்த்தி, புஸ்பரட்ணம் ஆகியோரின் மாமியும் நிசாந், விதுசன், றெம்மியா, லாவண்யா, அபிநீத், அஷ்ணவி, சுவாஸ்ரிக், சேயோன், ரிசிகேஷ், திவ்யன், நிதிஷா, தான்யா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

...ஸ். லேன், கொக்குவில் மேற்கு. (4273)(48)

தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா சிறைக்கைதிகள் மீது காவலர்கள் கடும் தாக்குதல்

வவுனியா, மே 17

வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் மூன்று பேர் சிறைக் காவலர்களினால் கடந்த வியாழக்கிழமை கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் வேறு இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதால் வவுனியா சிறைச்சாலையில் பதற்றநிலை காணப்படுவதாகக் கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை மூன்று கைதிகள் காரணமின்றி சிறைக்காவலர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் வேறு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதனைக் கண்டித்து சக கைதிகள் சிறைக் காவலர்களிடம் இவர்கள் தொடர்பாகக் கேட்டபோதும் உரிய தீர்வு கிடைக்கவில்லை. இதனைத் தொடர்ந்து சிறைக் கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். இதனால் சிறைக் காவலர்கள் சிறைக்குள் சென்று கைதிகளைத் தொடர்ந்தும் தாக்கி வருகின்றனர்.

இது மட்டுமின்றி புலி உறுப்பினர்கள் எனத் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீண்ட நாள் கைதிகளைக் கொண்டும் புதிய கைதிகளைத் தாக்கி வருகின்றனர்.

கைதிகள் தாக்கப்பட்டதில் சுமார் மூன்றுக்கும் மேற்பட்ட கைதிகள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழன் முதல் கைதிகளின் உறவினர்கள் வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிடுவதற்கான அனுமதியைச் சிறைக் காவலர்கள் மறுத்துள்ளனர்.

குறிப்பாக மன்னாரில் இருந்து வவுனியா சிறைச் சாலைக்குச் சென்ற அதிகளவானோர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த கைதிகள் வவுனியா சிறைச்சாலையில் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அவர்களுடைய உறவினர்கள் மன்னாரிலுள்ள அதிகாரிகளைச் சந்தித்து குறித்த சம்பவம் தொடர்பாகத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (க-601)

## கடமைக்குத் திரும்பாத ஆசிரியர்களால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த கொக்குளாய்ப் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றுக்கு ஆசிரியர்கள் சிலர் கடமைக்குத் திரும்பாததால் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கொக்குளாய்ப் பிரதேசத்தில் நீண்ட காலத்துக்குப் பின்னர் அண்மையில்தான் மீள்குடிமயர்வு இடம்பெற்றது. இதனால் இங்குள்ள பாடசாலை விரைவாக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் உரிய ஆசிரியர்கள் தான் வருகை தரவில்லை. தற்போது நூறு மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் மட்டுமே கடமைக்கு வருகை தருகின்றனர். அதனால் இவர்களால் கற்பித்தல் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபடமுடியவில்லை.

இந்தப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஏனைய ஆசிரியர்கள் முல்லைத்தீவு கரைதுறைப் பற்றுப் பிரதேசத்திலுள்ள ஏனைய பாடசாலைகளில் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் கொக்குளாய்ப் பகுதியில் பாடசாலைகளில் வசதியில்லையெனக் கூறி அங்கு செல்லப் பின்னடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாடசாலைச் சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## கிளிநொச்சியில் இம்முறை வெசாக் கொண்டாட்டம்

கிளிநொச்சி, மே 17

கிளிநொச்சி நகரப் பகுதி வெசாக் பண்டிகையை முன்னிட்டு புத்தொளி பெற்று வருகின்றது.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரியளவில் வெளிச்சக் கூடுகள் படைமுகாம்கள் சோதனை நிலையங்கள் எனப் பல இடங்களிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஏ-9 பாதையான கண்டி வீதியையொட்டி ஆனையிறவு முதல் கிளிநொச்சி வரை பரவலாக வெளிச்சக் கூடுகள் நிர்மாணிக்கப்படுவதுடன் அலங்கார மின் குமிழ்கள் பொருத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

வெசாக் தினத்தன்று உணவுகள் குளிர்பானங்கள், வழங்குவதற்கான பந்தல்களும் கொட்டகைகளும் கூட விசேடமாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-86)

### மனமுருக வேண்டுதல்...



அருள் புரிவான் கண்ணன்: கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் கண்ணன் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் இடம்பெற்ற பூசை நிகழ்வில் கலந்து கொண்ட கிராம மக்கள் . (410)

## தனியார் காணியில் பௌத்த விகாரை

கிளிநொச்சி, மே 17

மாங்குளம் சந்திக்கு அருகில் உள்ள தனியார் காணியில் பெரிய பௌத்த விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இன்று வெசாக் தினத்தன்று இந்த விகாரை திறந்து வைக்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட பௌத்த விகாரையை தற்போது மாங்குளம் சந்தியில் நிலை கொண்டுள்ள படையினர் தனது முகாம் வளாகத்தில் ஏ-9 வீதியான கண்டி வீதியோரமாக நிர்மாணித்துள்ளார்கள். படைத்தரப்பினரால் நிர்மாணிக்கப்படும் இந்த பௌத்த விகாரை அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களிடையே அதிருப்தியான மன நிலை ஏற்படுத்தியுள்ள போதிலும் படைத்தரப்பினர் மேற்கொள்வதினால் எதனையும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-86)

# முல்லைத்தீவிலிருந்து தேசிய மட்டத்துக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு

முள்ளியவளை, மே 17

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தேசிய மட்டப் போட்டிகளுக்கு விளையாட்டு வீரர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 8 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசைகள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஸ்ரீரங்கா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய விளையாட்டுத்துறை அமைச்சர் நீண்ட காலத்துக்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தேசிய மட்டத்துக்கு விளையாட்டு வீரர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவும் மேற்படி பொருள்படக் கருத்துரைத்தார். அமைச்சர் மஹிந்தானந்த தமிழ் மொழியிலேயே தமது உரையை நிகழ்த்தினார். இந்த நிகழ்விலே ஏராளமான விளையாட்டு வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டம் தழுவிய ரீதியில் வீரர்கள் தெரிவு செய்யப்படவிருப்பதால் இதுவரையில் மீள்குடியமர்வு செய்யப்படாமல் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளவர்களும் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் குறித்த நிகழ்வுக்கு வருகை தந்த மாணவர்களுக்கு உரிய வசதிகள் வழங்கப்படவில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-ரி)

## நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படாமையால் நட்டாங்கண்டல் மக்கள் அவலநிலையில்

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு மாவட்டம் நட்டாங்கண்டல் பொதுவைத்தியசாலையில் நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படாததால் நோயாளர்கள் இன்னல்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் குறித்த மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு மத்திய மருந்தகம், மகப்பேற்று விடுதி ஆகியனவும் அமைந்துள்ளன.

ஆனால் நிரந்தர வைத்தியர் எவரும் இதுவரை நியமிக்கப்படாமையால் நோயாளர்களின் நிலை தொடர்ந்து பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

வேறு இடத்தில் கடமைபுரியும் மருத்துவர் ஒருவர் வாரத்தில் ஒருநாள் மட்டுமே வருகை தந்து சிகிச்சை அளிப்பாரென அறிவிக்கப்பட்ட போதிலும் மருத்துவர் எவரும் வருவதில்லையெனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மருத்துவமனையை நம்பி சுமார் 2 ஆயிரத்து 500 குடும்பங்கள் உள்ளன. ஆனால் இவை தமது மருத்துவ சேவையைப் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன. இக்குடும்பங்கள் தூர இடங்களுக்குச் சென்றே வைத்திய சேவையைப் பெற முடிகின்றது.

உரியவர்கள் இனியும் காலம் தாழ்த்தாமல் இந்த வைத்திய சாலை இயங்குவதற்கு ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## முல்லைத்தீவில் உப தபாலகங்கள் புனரமைப்பு

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த இரு உப தபாலகங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

முத்துஐயன்கட்டு மற்றும் விசுவமடு உப அலுவலகங்களே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன. வடக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் அலுவலகம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட கட்டடத் திணைக் களம் இந்த இரு உப அலுவலகங்களையும் புனரமைப்பதற்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. கடந்த யுத்தத்தின் போது இந்த இரு உப தபாலகங்களும் பெரிய சேதத்துக்கு உள்ளாகின. இந்த உப தபாலகங்கள் இயங்காததன் காரணமாக இந்தப் பிரதேசங்களில் மீள்குடியமர்ந்த மக்கள் தமது அஞ்சலகத் தேவைகளை பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர். (க-122)

## மன்னாரில் பௌர்ணமி தின விழா

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற 5 ஆவது பௌர்ணமி தினவிழா மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சின் பதில் செயலாளர் எஸ். ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா ஈழத்தமிழர்களை கைவிடமாட்டார்

## அரியநேத்திரன் எம்.பிக்கு இப்படி ஒரு நம்பிக்கை

மட்டக்களப்பு,மே17

தமிழ் நாட்டில் புதிய முதலமைச்சராக பதவியேற்கவுள்ள ஜெயலலிதா அல்லல்படுகின்ற ஈழத்தமிழர்களைக் கைவிடமாட்டாரென்று நம்புகின்றோம். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

மட்டக்களப்பு கல்லடி - நொச்சிமுனை காந்தி சமுர்த்தி சங்கத்தின் வறிய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வறுமை காரணமாகப் பெற்றோர் தங்களது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பமுடியாதுள்ளனர். இந்த நேரத்தில் புலம்பெயர் தமிழர்களின் பல அமைப்புகள் எமது மாணவர்களின் கல்வி விருத்திக்குப் பெரிதும் உதவி புரிகின்றன.

எமது மாவட்டத்தில் கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி கல்வியை மழுங்கடிக்கும் முகமாக சில தீயசக்திகளின் திட்டமிட்ட செயற்பாட்டால் தேவைக்கு அதிகமான முறையில் மதுபானச் சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. எமது எதிர்கால சந்ததியினரை இதிலிருந்து காப்பாற்றவேண்டும். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சை நடத்தி வருகின்றது. இருப்பினும் கூட்டமைப்பின் எந்த விடயத்தையும் அரசு ஏற்றுக்கொண்டு செயற்படுத்தவில்லை.

யுத்தம் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்களாகியும் மக்கள் இன்றும் இடம்பெயர்ந்த நிலையில் அல்லற்படுகின்றனர். -என்றார். (ச)



தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 500 ரூபாவை வழங்க வலியுறுத்தியும்,கூட்டு ஒப்பந்தம் சாரா தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து நேற்று திங்கட்கிழமை பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர். (ச)

# ஆலய அபிவிருத்திக்கான ஆலோசனை சபை மலையகத்தில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும்

பொகவந்தலாவ, மே 17

சிறுவர்களுக்கு இறைவழிபாட்டின் முக்கியத்துவம், சடங்குகள் மற்றும் சமய அனுஷ்டானங்களை கற்பித்து வந்தால் அவர்கள் இளைஞர்களாக வரும்போது ஆலய விவகாரங்களில் இருந்து ஒதுங்கியிருக்க மாட் டார்கள் - என பிரிடோ நிறுவன வெளிக்கள இணைப்பதிகாரி சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஆலய அபிவிருத்திக்கான சிறுவர் ஆலோசனை சபை என்ற புதிய கருத்தியலை அறிமுகப்படுத்துவதற்காக பிரிடோ சிறுவர் கழக மேம்பாட்டாளர்களுக்காக பொகவந்தலாவை பணிமனையில் நடத்தப்பட்ட விளக்கக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு,

ஆலய விவகாரங்களில் பங்களிப்புச் செய்வதற்கு சிறுவர்களுக்கு உரிமையுண்டு. ஆலயங்களில் நடப்பது பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று எவரும் கேட்பதில்லை.

ஆலயங்கள் சிறுவர்களின் ஆன்மிக வாழ்வுக்கும், கல்விக்கும் உதவ வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே "ஆலய அபிவிருத்திக்கான சிறுவர் ஆலோசனை சபை" என்ற கருத்தியலை பிரிடோ நிறுவனம் முன்வைத்திருக்கின்றது. சிறுவர்களிடம் சிறப்பான கருத்து இருக்கின்றது. அவற்றைக் கேட்டால் சமுதாயம் முன்னேற முடியும்.

இதனை ஏற்றுக் கொண்டதன் காரணமாகவே பொகவந்தலாவை கீழ்ப் பிரிவு ஆலயத்தில் ஆலய அபிவிருத்திக்கான சிறுவர் சபை நிறுவப்பட்டுள்ளது. இது சிறுவர் பங்கேற்பில் ஒரு புதிய அணுகு முறையாகும் - என்றார். (ச)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்த போடப்பட்ட சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள்,சேவல் குஞ்சுகள், புறோயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (21.05.2011) காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2223 திகதி 14-05-2011

ஆங்கில எழுத்திற்கும் X

வெற்றி எண்கள் 17 37 63 64

போனஸ் இல: 16

ஜக்பொட் பரிசு ரூ. 11,634,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 198957 | 20/- | 3,979,140/- |
| 2 இல | 14185 | 100/- | 1,418,500/- |
| 3 இல | 284 | 1,000/- | 284,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7840 | 40/- | 313,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 583 | 1,000/- | 583,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 20 | 10,000/- | 200,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,634,950/- | - |
| 1 இல + போனஸ் இல | 9500 | 100/- | 950,000/- |
| 2 இல + போனஸ் இல | 438 | 500/- | 219,000/- |
| 3 இல + போனஸ் இல | 5 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 377 | 200/- | 75,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,546,640/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 232216 | | 10,146,640/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 303181713-6-45 |
| கேகாலை | 303188015-8-18 |
| புத்தளம் | 303189799-4-23 |
| கம்பஹா | 303197880-4-32 |
| மாத்தறை | 303181175-4-23 |
| இரத்தினபுரி | 303196140-6-45 |
| அநுராதபுரம் | 303203319-2-08 |
| குருநாகல் | 303181530-4-00 |
| கண்டி | 303183321-1-43 |
| மாத்தளை | 303184322-9-03 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.12,177,175/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 மே 21 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
350, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 2333546/7


# 3 மாதங்களில் 33.2 மில்லியன் மெற்றிக்தொன் தேயிலை ஏற்றுமதி; சாதனை என்கிறது சபை

நுவரெலியா,மே 17

இந்த வருடத்தில் கடந்த மார்ச் வரையான மூன்று மாதகாலத்துக்குள் சுமார் 33.2 மில்லியன் மெற்றிக்தொன் தேயிலை சந்தைக்கு விடப்பட்டுள்ளது என இலங்கை தேயிலைச் சபை தெரிவித்துள்ளது. இது கடந்த வருடங்களைவிட அதிகம் என்றும் சபை கூறியுள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் மார்ச் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் விற்பனைக்கு விடப்பட்ட மொத்த தேயிலையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, அது 2010 ஆம் ஆண்டில் மூன்று மாதங்களை விட 2.2 மில்லியன் மெற்றிக்தொன் அதிகம் என்றும் இலங்கை தேயிலைச் சபை தெரிவித்துள்ளது.

எது எப்படியாயினும், இலங்கையில் கடந்த 4 மாத காலமாக காலநிலை மாற்றம் ஏற்பட்டபோதும் தேயிலை உற்பத்தியானது நாட்டின் பணப் புழக்கம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தது என சபையின் உயரதிகாரி தெரிவித்துள்ளார். (ச)

# பதினொரு கல்விப் பணிப்பாளர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு

வடமத்திய மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 110 லட்சம் ரூபாவைச் செலவழித்து தாய்லாந்து நாட்டுக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்ட அந்த மாகாணத்தின் பதினொரு கல்விப் பணிப்பாளர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு வடமத்திய மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தில் ஆணை பிஸ்கால் மூலமாகவும் பதிவுத்தபால் மூலமாகவும் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் ஜயந்த ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாணத்தில் வசதிகள் குறைந்த 95 பாடசாலைகள் மூடப்பட்டு இருக்கும் நிலையில் இவர்கள் 110 லட்சம் ரூபாவை வெளிநாட்டுப் பயணத்துக்குப் பயன்படுத்தியது அசாதாரணமானது என வட மத்திய மாகாண பிரதான அமைச்சுச் செயலாளர் சமர்ப்பித்த மனுவை ஆராய்ந்த பின்னரே மேன்முறையீட்டு நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ச-5)

## துயர் பகிர்கின்றோம்

யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் எமது ஆசிரியர் திருமதி வசந்தி சிவராஜா அவர்களின் அருமைச் சகோதரன்

**கனகசூரியர் விக்னேந்திரன்**

14.05.2011 அன்று காலமான செய்தி அறிந்தோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4278)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.


## ஜனஜய லொத்தர்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வாரம் 227 | சீட்டிழுப்புத் திகதி 15.05.2011

வெற்றி இலக்கங்கள் 05 14 36 46

சுப்பர் இலக்கம் 10

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,203,880/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 112915 | ரூ. 20/= | ரூ. 2,258,300 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 10179 | ரூ. 40/= | ரூ. 407,160 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 8737 | ரூ. 100/= | ரூ. 873,700 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 809 | ரூ. 200/= | ரூ. 161,800 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 195 | ரூ. 1,500/= | ரூ. 292,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 15 | ரூ. 3,000/= | ரூ. 45,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 5,203,880/= | |
| மொத்த எண்ணிக்கை | 132851 | | ரூ. 5,038,460/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,546,420/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk



## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ்.எஸ். நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.தொ.பே: 0776146434



## அரசியல் விஞ்ஞானம் விசேட கருத்தரங்கு

(புதிய பாடத்திட்டம்)

A/L 2011 மாணவர்களுக்கு

இடம்: விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம்.
காலம்: 20.05.2011 (வெள்ளி), 21.05.2011 (சனி)
நேரம்: 9.00-2.00p.m
நடத்துபவர்:-வெளிவாரி பட்டப்படிப்புகள் விரிவுரையாளர்.

அனைத்து மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

மாதிரி வினாக்களும் அவற்றுக்குரிய விடைகளும் வழங்கப்படும்.

(4275)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கொலைகளுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## இரா.துரைரெத்தினம் அறிக்கை

மட்டக்களப்பு,மே17

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் தொடர் கொலைகளுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரை ரெத்தினம் தெரி வித்துள்ளார்.

மட்டக்களப்பு - களுவாஞ்சி குடியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாகத் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு :

மட்டக்களப்பு மவாட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலைகளை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை களுவாஞ்சிகுடியில் முருகேசு இளங்குமரன் என்னும் மதுபானசாலை உரிமையாளர் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டுள்ளார். வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார்.

இவர் சுடப்பட்ட பகுதி பாதுகாப்பு நிறைந்த பகுதி. இந்தப் படுகொலைக்கு முன்னர் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு நகரில் நிகழ்ந்த படுகொலையும் பாதுகாப்பு நிறைந்த பகுதியிலேயே நிகழ்ந்துள்ளது.

இந்தக்கொலைகளுக்குப் பலமான பின்னணி இருக்கவேண்டும். இந்தக் கொலைகளுக்கு சூத்திரதாரிகள் யார் என்பதை பலமான அமைப்பு கொண்ட அரசாலேயே அடையாளம் காண முடியும்.

இதில் அரசு எந்தத் தயக்கமும் காட்டக்கூடாது. இதனைச் செய்யத்தவறும் பட்சத்தில் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதமடையும். இந்த மாவட்டத்திலுள்ள பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தக்கொலைகளின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க ஒத்துழைத்து சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முன்வரவேண்டும்- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

வழங்கல்...



திருகோணமலை பொதுவைத்தியசாலைக்கு ஒரு தொகுதி நீர் வடிகட்டி உபகரணங்களை அந்த மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா வழங்குகின்றார். (ச)

# பதுளை மாவட்ட கிராமிய வீதிகளின் அபிவிருத்திக்கு ரூபா 42 கோடி நிதி

## வேலைகளை ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் பஸில்

பதுளை,மே17

பதுளை மாவட்டத்திலுள்ள பின் தங்கிய கிராமிய வீதிகளின் அபிவிருத்திக்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 42 கோடி 50 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி மூலம் பதுளை தேர்தல் தொகுதியில் 6 கோடி 80 லட்சம் ரூபா செலவில் பதுளை-சிறிமல்கொட, ஹாலி எல, வியலுவ மற்றும் மஹியங்கனை வீதிகளுக்கு காப்பற் இடப்படவுள்ளது.

பண்டாரவளை தொகுதியில் ரூபா 10 கோடி 50 லட்சம் ஒதுக்கீட்டில் தந்தரியஹீல் ஓய, கிதல் எல்ல வீதிகளும், ஹப்புத்தளை தொகுதியில் 25 கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் கொரகவே, ரன்வன்குஹாவ, நிகபொத்த வீதிகளும் செப்பனிடப் படவுள்ளன.

இவை தவிர, ஹாலி-எல தேர்தல் தொகுதிக்கு 27.50 கிலோ மீற்றர் நீளமான ஐந்து வீதிகளும், பண்டாரவளை தொகுதியில் ஏழு வீதிகளும், அப்புத்தளை தொகுதியில் ஆறு வீதிகளும், ஊவா பரணகமவில் 6 வீதிகளும், வெலிமடையில் ஐந்து வீதிகளும், பதுளையில் 16 வீதிகளும், வியலுவவில் நான்கு வீதிகளும், மஹியங்கனையில் மூன்று வீதிகளும் அபிவிருத்தி செய்யப் படவுள்ளன.

இந்த வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

இந்தநிகழ்வில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா, அப்புத்தளை தேர்தல் தொகுதி அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதித லொக்குபண்டார, பண்டாரவளை தேர்தல் தொகுதி அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ரோஹன புஷ்பகுமார மற்றும் ஊவா மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

# கட்டாக்காலி கால்நடைகளை விடுவிக்க தண்டப்பணம் அறவீடு

திருகோணமலை,மே17

கிண்ணியா பிரதான வீதிகளில் நடமாடிய கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து கட்டிவைத்த நகரசபையினர் அவற்றை விடுவிக்க வேண்டுமாயின் தண்டப் பணம் செலுத்த வேண்டும் என உரிமையாளர்களிடம் கோரியுள்ளனர்.

இந்தப் பிரதேச கால்நடை உரிமையாளர்களுடன் அண்மையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கமையவே இந்தக் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டிருப்பதாக கிண்ணியா நகரசபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், தற்போது பிடித்து வைக்கப்பட்டுள்ள கால்நடைகளுக்கு தண்டப்பணமாக ரூபா 2ஆயிரம் செலுத்தப்பட வேண்டும் என்று கிண்ணியா பிரதேச பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிகள் மூலம் அவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறவிடப்படும் தண்டப் பணத்தின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ள நகரசபையினர், 3 நாள்களுக்குள் இந்தக் கால்நடைகள் மீட்கப்படாத பட்சத்தில் அவை ஏலத்தில் விடப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். (ச)

# அனுமதியின்றி 'கள்' விற்ற 16 பேர் பிபிலையில் கைது

அனுமதிப்பத்திரமின்றி கள் விற்பனை செய்து வந்த 16 பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் பிபிலை பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது. அனுமதிப் பத்திரமின்றி கள் உற்பத்தி செய்வதாகக் கிடைத்த தகவலையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்ற பொலிஸார் 16 பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர்.

நீதிமன்றில் இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு மொனராகலை மாவட்ட நீதிவான் சிந்தக குணசேகர உத்தரவு பிறப்பித்துள்ளார். (ச)

# அக்குறணை வங்கியில் ரூ.12 லட்சம் கொள்ளை

அக்குறணையிலுள்ள தனியார் வங்கியொன்றிலிருந்து 12 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வங்கியின் முகாமையாளரை பிஸ்டல் முனையில் அச்சுறுத்திவிட்டு இரண்டு பைகளில் பணத்தை எடுத்துச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிராமவாசிகளின் உதவியுடனேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து மோட்டார் சைக்கிள், போலி துப்பாக்கி மற்றும் கத்தி என்பன கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# அன்று யுத்தத்தால் துன்பங்களை அனுபவித்தவர்கள் இன்று அரசின் பயங்கரவாதப் பிடிக்குள் சிக்கியுள்ளனர்

## கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

அம்பாறை,மே 17

அன்று யுத்தத்தால் துன்பங்களை அனுபவித்த மக்கள் இன்று மஹிந்த ராஜபக்ஷ அரசின் பயங்கரவாதப் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் தேசமான்ய தயா கமகே. ஐக்கிய தேசியக்கட்சியின் நிந்தவூர் இணைப்பு அலுவலகத் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

இந்த நாட்டு மக்களுக்கு விடிவு ஏற்படவும், சிறுபான்மை சமூகங்கள் உட்பட சகல இன மக்களும் சுபீட்சமுடன் வாழவும் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சி இந்த நாட்டில் மலர வேண்டும்.

இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் முக்கியமாகும். மக்கள் பரவலாக ஐக்கிய தேசியக்கட்சியைப் பலப்படுத்துவதற்கு முன்வர வேண்டும்.

மக்கள் இந்த வகையில் நிலமைகளை இன்று அனுபவ ரீதியாக உணர்ந்துவருவதுடன் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிமலர வேண்டுமென்ற அவாவையும் கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்பாந்துறை, கல்முனை, பொத்துவில் தொகுதிகளில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் நீண்டகாலமாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கும் முஸ்லிம்காங்கிரஸுக்குமிடையே இருந்த கூட்டு ஒப்பந்தம், எம் ஆதரவாளர்களை முஸ்லிம் காங்கிரஸுக்குத் தாரைவார்த்த நிலைமையை உருவாக்கியதுடன் எமது சக்தியைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் இங்கு ஐக்கிய தேசியக்கட்சியை அழிக்கும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸுக்கு கொள்கை, கோட்பாடு ஒருபோதும் இருந்ததில்லை. முஸ்லிம் மக்களிடையே இன, மத உணர்வுகளை ஏற்படுத்தி மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுச் சென்று சுயநல அரசியல் நடத்துவதே முஸ்லிம் காங்கிரஸின் வழக்கமான செயற்பாடாகத் தொடர்ந்து வருகின்றது.

இன்று முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து தமது சுக போகங்களை அனுபவித்து வருகின்ற போதிலும் முஸிம் மக்களுக்கு எந்தப் பயனுமில்லை.

இதை இன்று முஸ்லிம் மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தக்க பாடத்தை முஸ்லிம் காங்கிரஸுக்குப் புகட்டவும் தயாரகவுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்களின் பெரும்பாலானோர் விவசாயத்தையே நம்பி வாழ்பவர்கள். அண்மையிலேற்பட்ட வெள்ளப் பாதிப்புகளால் நம் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு விரக்தி நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

இவ்வாறு பாதிப்புக்குள்ளான நமது மாவட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடுகள் அரசால் வழங்கப்படவில்லை. ஆனால் இலவசமாக விதை நெல் வழங்கப்படுமென்றனர். அதுவும் நூறு வீதம் வழங்கப்படவில்லையென்பதும் கவலைக்குரிய விடயமாகும்.

எனவே நாட்டு மக்களின் எதிர்காலத்துக்காக சிறுபான்மை மக்களுடன் என்றும் நேச சக்தியாகவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி மீண்டும் மலர வேண்டும். இதற்கான பலத்தை மக்கள் வழங்க வேண்டும் - என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவுக்கு அறிக்கை தயாரிக்கும் பணி ஆரம்பம்; உதய பெரேரா மலேசியாவிலிருந்து வரவழைப்பு

கொழும்பு, மே17

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையில், இலங்கைப் படையினர் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கை இராணுவம் அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகிறது.

இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணி இலங்கையின் மலேசியாவுக்கான பிரதித் தூதுவர் மேஜர் ஜெனரல் உதய பெரேராவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைப் பணிப்பாளராக இவரே செயற்பட்டிருந்தார்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக இவர் கோலாலம்பூரில் இருந்து கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே, இராணுவத்தின் ஆள்சேர்ப்புப் பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சுராஜ் பன்சஜய ஆகியோரும் இந்த அறிக்கையைத் தயாரிக்கும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இறுதிக்கட்டப் போரின்போது முக்கிய பங்கெடுத்த அதிகாரிகளாவர்.

இறுதிப்போரில் 58ஆவது டிவிசன் படையணிக்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா இந்த அறிக்கை தயாரிக்கும் பணியில் பங்கேற்கவில்லை.

அவர் தற்போது அமெரிக்காவில், ஐ.நாவுக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதியாக உள்ளார்.

எனவே போரில் இவருக்குத் துணையாகச் செயற்பட்ட இரண்டு அதிகாரிகள் இந்த அறிக்கை தயாரிப்புப் பணிக்கு உதவப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசு ஐ.நா பொதுச் செயலருக்கு அனுப்பவுள்ள



அறிக்கையுடன், இலங்கை இராணுவத்தின் இந்தப் பதிலும் இணைக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## திருட்டுச் சந்தேகத்தில் முன்னாள் சிப்பாய் கைது

கொழும்பு, மே17

குருநாகல் பிரதேசத்திலுள்ள பல வீடுகளில் திருடி வந்தார் என்ற சந்தேகத்தில் குருநாகல் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இராணுவத்திலிருந்து தப்பிவந்த கடந்த புதன் கிழமை சிப்பாயொருவர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து காஸ் அடுப்பு, சிலிண்டர், தங்க ஆபரணங்கள், கைக்கடிகாரங்கள், கையடக்கத் தொலைபேசிகள், கிரைண்டர்கள், மின் உபகரணங்கள், இரு சைக்கிள்கள் உள்ளிட்ட பல பொருள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர். (ச)



உலகின் மிகப்பெரிய பௌத்த தகவல் மத்திய நிலையமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சம்புத்த ஜயந்தி நிலையம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கொழும்பில் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள், ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், முப்படைத் தளபதிகள், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பிக்குமார்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.(ச)

## தனியார் போக்குவரத்து அமைச்சு நாவலவில்

கொழும்பு, மே17

கொழும்பு 5, பூங்காவீதியிலுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கட்டடத்தில் இயங்கிவந்த தனியார் போக்குவரத்து அமைச்சு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நாவல - நாரஹேன்பிட்டி வீதியில் 34 ஆம் இலக்க இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை இயங்கிவந்த கட்டடத்தில் போதுமான இடவசதிகள் இல்லாத காரணத்தினாலேயே இந்த இடமாற்றம் நடைபெற்றதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச)

## பாண் உற்பத்தியில் அரிசிமாவின் கலவையை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, மே 17

பாண் உற்பத்தியின்போது கலக்கப்படும் இரண்டு சதவீத அரிசி மாவை 40 சதவீதமாக அதிகரிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சகல பேக்கரிகளிலும் தற்சமயம் கோதுமை மாவுடன் இரண்டு சதவீத அரிசிமாவே கலக்கப்பட்டு வந்தது. புதிய சட்டத்தின்படி இது 40 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

அரிசிமாவின் பாவனையை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்தப் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## பஸ் கட்டணம் தொடர்பில் வெசாக்கின் பின் தீர்மானம்

கொழும்பு, மே17

பஸ் கட்டண அதிகரிப்புத் தொடர்பாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்னாயக்க வெசாக்குக்குப் பின்னர் உத்தியோக பூர்வ அறிவிப்பொன்றை விடுப்பார் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றியும் கட்டணத்தை அதிகரிக்க முடியும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் கூறியிருந்தனர்.

எனினும், இது குறித்து கருத்துத் தெரிவிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மறுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதில்லை எனப் போக்குவரத்து அதிகாரிகள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர் என இந்த ஆணைக்குழுவின் தலைவர் சஷி வெல்கம தெரிவித்துள்ளார். (ச)

## 8 லட்சம் பெறுமதியான நகைகள் திருட்டு; சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, மே 17

பெண்ணொருவரின் பயணப் பையிலிருந்த சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான 20 பவுண் நகைகளைத் திருடினார் என்ற சந்தேகத்தில் புத்தளம் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் காணாமல் போன நகைகளையும் மீட்டுள்ளனர்.

புத்தளம் நாகவில்லு பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பெண்ணும் அவரின் கணவரும் கடந்த 9 ஆம் திகதி ஓட்டோவொன்றில் திருமண அழைப்பிதழ் வழங்குவதற்காக சென்றவேளையில் பயணப் பையை ஓட்டோவிலேயே வைத்துவிட்டு இறங்கியுள்ளனர்.

இந்தத் தம்பதியினரும், ஓட்டோச்சாரதியும் திரும்பி வந்து பார்த்தபோது அந்தப் பை திறந்து கிடந்ததுடன், அதிலுள்ள நகைகளும் காணாமல் போயிருந்தன. இது குறித்து புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பாக விசாரணைகளை நடத்திய பொலிஸார் கடந்த சனிக்கிழமை சந்தேகநபரைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 20 பவுண் நகைகளையும் மீட்டனர். (ச)

## புத்தஜெயந்தியை முன்னிட்டு ஐந்து தபால் தலைகள் வெளியிடப்பட்டன

கொழும்பு, மே 17

2600 ஆவது புத்த ஜயந்தியை முன்னிட்டு இலங்கை அஞ்சல் திணைக்களத்தினால் ஐந்து ரூபா பெறுமதியான நான்கு தபால் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு கடந்த சனிக்கிழமை அநுராதபுரம் மகாபோதியில் நடைபெற்றது. புதிய தபால் தலைகள் தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டன. (ச)

## பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில் கணினி

கொழும்பு, மே 17

பாடசாலை மாணவர்களுக்குக் குறைந்த விலையில் கணினிகளை வழங்குவதற்கான விசேட வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்தச் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சு மற்றும் தனியார் கையடக்கத் தொலைபேசி நிறுவனம் ஒன்றுடன் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை கணினி மூலம் மேற்கொள்வதற்கு வசதியாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. சந்தையில் நிலவுகின்ற விலையை விட 25 சதவீத விலைக் கழிவுடன் இலங்கை வணிக பலநோக்கு க் கூட்டுத்தாபனத்தில் இந்தக் கணினி[illegible]ளைக் கொள்வனவு செய்[illegible]யும்.

இதன்மூலம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களும், உயர்வகுப்பு மாணவர்களும் தமது பாடங்களைக் கணினியூடாகப் பயில்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

மாணவர்கள் தமது பாடவிதானத்திற்கு அமைவான தகவல்களைப் பெற்றுக் கொள்வதைத் தவிர பாட விதானங்களுக்கு அப்பாற்பட்ட இணையத்தளங்களைத் தடை செய்வதற்[illegible] தெரிவித்துள்ளார். (ச)

## தாயால் கைவிடப்பட்ட 3 பிள்ளைகள் சிறுவர் காப்பகத்தில் ஒப்படைப்பு

கொழும்பு, மே 17

தாயொருவரால் அநாதரவாக விடப்பட்ட மூன்று பிள்ளைகள் எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற உத்தரவின்பேரில் சிறுவர் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் சமஹிபுர, நெலும் சிரிகமவில் உள்ள வீடொன்றில் தாயாரினால் அநாதரவாக விட்டுச் செல்லப்பட்ட இந்தச் சிறுவர்கள் தொடர்பில் மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இந்தத் தகவலையடுத்து விரைந்த பொலிஸார் சிறுவர்களை மீட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

செவனகல பொலிஸார் தாயைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆன்மிக வகுப்புக்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி " ஸ்மார்ட் கிட்ஸ்மொடல்" சிறுவர் பாடசாலையில் இடம்பெற்றது. இளைப்பாறிய வங்கி முகாமையாளர் அ.த. கதிரவேல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிறுவனத்தைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய மங்கல விளக்கேற்றுகிறார். (313)

# விசேட கல்வித்துறையில் சிறப்பான சேவையை வலிகாமம் கல்வி வலயம் வழங்கி வருகின்றது

யாழ்ப்பாணம்,மே 17

வடமாகாணத்தில் வலிகாமம் கல்வி வலயமே விசேடமாகக் கல்வித்துறையில் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது.

இத்தகைய சேவை ஏனைய கல்வி வலயங்களிலும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் செல்வி இந்திரா செல்வநாயகம்.

அண்மையில் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட இணுவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற விசேட தேவைக்குட்பட்டோரின் வளநிலையத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:

விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்குச் சிறந்த நற்குணங்கள் இருத்தல் அவசியம்.

இதற்கான நடவடிக்கைகள் யாவும் கல்வி சமூகத்தினரிடையே தங்கியுள்ளது. 2015 ஆம் ஆண்டுக்குள் அனைத்து ஆசிரியர்களுக்கும் விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். சாதாரண மாணவர்களைப் போன்று அல்லாமல் அவர்களை வேற்றுமையாகப் பார்க்கும் சமுதாயத்தின் பார்வையை திசை திருப்ப வேண்டும். ஆசிரியர்களின் வழிகாட்டல்கள் கற்றலில் எவ்வளவு பங்கு வகிக்கின்றன என்பதைக் கல்விச் சமூகம் நன்றாக அறியும்.

இதனைக் கவனத்தில் கொண்டு ஏனைய வலயங்களிலும் விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான வளநிலையங்களை அமைத்து அவர்களது திறமைகளை வெளிப்படுத்தி தமக்குள் இருக்கும் குறைகளை மறந்து திறமையுள்ளவர்களாக மிளிர அனைவரும் பங்களிப்பான சேவையை வழங்க வேண்டும் - என்றார் . (ம-313)

# தொழில் செய்யும் இடங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றவேண்டும்

யாழ்ப்பாணம்,மே 17

தொழில் புரியும் இடங்களில் அனைவரும் அர்ப்பணிப்பான சேவையை வழங்க வேண்டும். இந்த அர்ப்பணிப்பான சேவைகளை வழங்குவதன் மூலம் தான் எமக்குச் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

நாம் செய்யவேண்டிய கடமைகளிலிருந்து விலகி நடப்போமானால் இதனால் கிடைக்கும் பின் விளைவுகள் தான் ஏராளமாக இருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் அண்மையில் ''மன அழுத்தங்களை எப்படி எதிர்கொள்வது'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

தொழில் புரியும் இடங்களில் மன ஈடுபாட்டுடன் கடமையுணர்வுடனும் முழுமையான சேவைகளை வழங்க வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களை நினைத்து மனக் குழப்பங்களுடன் சேவைகளை நிறைவேற்றக்கூடாது.

'' இறைவன் இன்றி ஓர் அணுவும் அசையாது". இதுபோல் நாம் செய்யும் காரியங்களையும் இறைவன் கவனித்துக் கொண்டு தான் இருப்பார். இறைவனிடம் எமது கஷ்டங்களைக் கூறி அவன் அருள்கிடைக்க இறைவனது பாதங்களை வணங்கி நாம் செய்ய வேண்டிய காரியங்களை நிறைவேற்ற வேண்டும்.

தொழில் செய்யவேண்டிய கட்டாயத்துக்காக மன உளைச்சல்களுடன் கடமைகளை செய்வதில் எந்தப் பயனும் இல்லை.

அத்துடன் தொழில் செய்யும் இடங்களில் அனைவரும் ஒன்றிணைந்து சேவையாற்ற வேண்டும்.

இவற்றில் முகாமைத்துவம் என்பது கட்டாய தேவையில் ஒன்றாகும். இத்தகைய செயற்பாடுகளைத் தவிர்த்து ஏனோ தானோ என்று கடமைகளைச் செய்வோமானால் எதிர்பார்க்கக் கூடிய பலன்களை அடையமுடியாது.

"செய்யும் தொழிலே தெய்வம்" என்று பெரியோர்கள் கூறிய கருத்து முற்றிலும் உண்மையானது.

தொழில் செய்யும் இடங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். இவையாவும் சிறப்பாக நடக்குமானால் நாம் தனியாக நேரங்களை மீதப்படுத்தி ஆலயம் செல்லவேண்டிய தேவையே இருக்காது.

அத்துடன் தொழில் செய்யும் இடங்களில் "பதற்றம்" வேண்டாத ஒன்று. இது ஒரு தொற்று வியாதி போன்றது. எங்கு சென்றாலும் பின் தொடர்ந்து வரும்.

எனவே " கடமையைச் செய் பலனை எதிர்பாராதே". நாம் செய்யும் கடமைக்கு ஏற்றாற்போல் அதற்கான பலன்கள் தானாகவே வந்து சேரும் - என்றார். (ம-313)

## ஆன்மிக வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், மே 17

யாழ் சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிரதி வியாழக்கிழமைகள் தோறும் ஆன்மிக வகுப்புக்கள் இடம் பெற்று வருகின்றன.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள '' ஸ்மாட் கிட்ஸ் மொடல்'' சிறுவர் பாடசாலையில் வியாழக்கிழமை தோறும் மாலை 6.30 மணி வரை இந்த ஆன்மிக வகுப்புக்கள் பிரம்மச்சாரிய ஜாக்கிரத் சைத்தன்ய தலைமையில் நடைபெறுகின்றன. இலவசமாக இடம் பெறும் இந்த வகுப்புக்கு ஆர்வமுடைய அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ளலாம். (ம-313)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், மே 17

வடமாகாண உபதபாலதிபர்களின் தொழிற்சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் யாழ்.பிரதம தபாலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக - எஸ். ஜெயரட்ணம், உப்தலைவராக - எஸ்:நாகசந்தினி, செயலாளராக - சின்னத்தம்பி சுப்பிரமணியம், உபசெயலாளராக கே.கமலேந்திரன், பொருளாளராக - திருமதி க.கௌசலாதேவி ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களான :

க.சாந்தசொரூபி,ஆர்.பௌலினாஸ், இ.தனுசன், கே.சிறிமாலினி, சு.பராணி, கே.அருணகிரிநாதன், ந.நவரூபன், எஸ். கௌரிமலர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(ம-313)

## பயிற்சி வகுப்பு பிற்போடப்பட்டது

நவாலி, மே 17

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் நாளை புதன் கிழமை நடைபெறவிருந்த ''மூத்தோர் பராமரிப்பு உதவிகள்'' சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி வகுப்பு பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார். (ம-100)

# உடுவில் கோட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

மருதனார் மடம்,மே 17

உடுவில் கோட்ட மட்டத் தமிழ்த் தினப் போட்டிகள் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் இடம் பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**கட்டுரை - பிரிவு-II**

குகேந்திரராசா கஸ்தூரி (தாவடி இந்து தமிழ்க் கலவன்), சுப்பிரமணியம் ஜனனி (இராமநாதன் கல்லூரி),மனோகரன் சயின்ஸ்லா (உடுவில் மான்ஸ் ம.வி).

**கட்டுரை - பிரிவு-III**

விமலச்சந்திரன் கயன்சிகா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), குணரத்தினம் காருண்யா (உடுவில் மகளிர் கல்லூரி), விமலாம்பிகை பாகன் கீர்த்தனா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**கட்டுரை இலக்கியநயம் - பிரிவு-IV**

விமலாம்பிகை பாகன் திவாகரன் ( ஸ்கந்தவரேதயக் கல்லூரி), யோகலிங்கம் சூரியா (உடுவில் மகளிர் கல்லூரி), அபூர்வசிங்கம் தர்சிகரூபன் (இணுவில் மத்திய கல்லூரி).

**இலக்கணம் - பிரிவு-IV**

உதயரஞ்சன்தனுஷன்(ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), கணேசமூர்த்தி மோகனஜெனனி (இணுவில் இந்துக் கல்லூரி), செல்வமோகன் மதுஷன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**குறுநாடகம் ஆக்கம் - பிரிவு-IV**

சதீஸ்கந்தராசா சன்சிகா (ஏழாலை ம.வி.), சண்முகநாதன் டினேஸ் ( ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ரவீந்திரன் அன்ரோட் (உடுவில் முருகமூர்த்தி).

**சிறுகதை ஆக்கம்- பிரிவு-IV**

வி.வரதராசா சொரூபிகா (இணுவில் இந்துக் கல்லூரி), இமெல்டா (இராமநாதன் கல்லூரி), இலட்சுமிகாந்தன் நிலானி (ஏழாலை ம.வி).

**கவிதை ஆக்கம் - பிரிவு-IV**

நிசாகரன் நிலக்சனா (உடுவில் முருகமூர்த்தி), இராகுல தேவன் டெனா (ஏழாலை சைவ மகாஜனா), மனோகரன் மதுஷா (இணுவில் இந்துக் கல்லூரி).

**கட்டுரை இலக்கியநயம் - பிரிவு-V**

லோறன்ஸ் இராஜகுமார் அனற்கேசிகா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), பஞ்சாபிகேசன் தர்சிகா (இணுவில் மத்திய கல்லூரி), உதயகுமார் மேனகா ( இணுவில் இந்துக் கல்லூரி).

**இலக்கன வினாவிடை-பிரிவு- V**

ஆணந்தராஜா ஜெயப்பிரகாஷ் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), தர்மலிங்கம் சுஜிதா (இணுவில் இந்துக் கல்லூரி).

**குறுநாடகம் ஆக்கம்- பிரிவு-V**

ஜெயரத்தினம் தர்சனா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சீலன் யாழினி (இணுவில் இந்துக் கல்லூரி).

**சிறுகதை ஆக்கம்-பிரிவு-V**

கோணேஸ்வரன் ஜனார்த்தனி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கண்ணதாசன் ரபிதா (இணுவில் இந்துக் கல்லூரி).

**கவிதை ஆக்கம்-பிரிவு-V**

மனோகரன் மஞ்சுகா (இணுவில் இந்துக் கல்லூரி), விஜய [illegible] (ஸ்கந்தவரோதயக் கல்லூரி),யூகராசா சஜீவினி (இணுவில் மத்திய கல்லூரி).

**திறனாய்வு-பிரிவு-V**

வரதராஜா துவாரகன் (இணுவில் இந்துக் கல்லூரி), ஜெயகாந்தன் எழிலரசி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**எழுத்தாக்கம் -பிரிவு-I**

மகேந்திரன்திவ்ஜா(யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), பாக்கியநாதன் சானுஜா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஜெயக்குமார் வைஸ்ணவி (உடுவில் மகளிர் கல்லூரி).

**வாசிப்பு -பிரிவு-I**

தேவகரன் துளசிகா (இணுவில் மத்திய கல்லூரி), ரவிதாஸ் பவித்தனன் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), கைலாசபதி அனிஸ்ரன் (ஏழாலை தெற்கு அ.மி. த.க.பாடசாலை).

**பேச்சு -பிரிவு-I**

மகேஸ்வரன் ரம்மியா (ஸ்கந்தவரோதயக்கல்லூரி), அலன்கியூமர் பிரியங்கா (உடுவில் மகளிர் கல்லூரி),சசிதரன் ஆதித்தன் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), சுதாகரன்டாரனி (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை).

**பாவோதல் - பிரிவு-I**

சிவகுமாரன் சிவபரணிக்கா (ஏழாலை மகாவித்தியாலயம்), இன்பராசா ஜேன்சிகா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), யூட்ஞானசீலன் விபர்சனா (கந்தரோடை கந்தையா வித்தியாசாலை).

**கதை கூறல் -பிரிவு-I**

சுரேந்தின் சுகிர் (ஏழாலை தெற்குஅ.மி.த.க பாடசாலை) கி.அபிசன் (சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை), பூவலிங்கம் நிலக்சன் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை).

**இசையும் அசைவும் - பிரிவு-I**

உதயசீலன் சுதர்சனா (ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை), பாஸ்கரன் நிசாளினி (ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை) இராசகுமார் தனுஜா ( சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை).

**நாடகம் - பிரிவு-I**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, ஏழாலை மகா[illegible].ம். (ம-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். நேற்று முடியாத வேலை ஒன்று இன்று முடிவுக்கு வரலாம். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் அதிக ஆதாயம் பெறலாம். வெளியூர்களில் இருந்து உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் குடிகொள்ளும்.

**இடபம்:**
எந்த விடயத்திலும் விடாப்பிடியாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். நிதியுதவி, கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று முடிவுக்கு வரும். சுப காரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. தொழில் ரீதியான செல்வாக்கு, மதிப்பு அதிகரிக்கும்..

**மிதுனம்:**
கோயில்களுக்குச் சென்று வழிபாடு மேற்கொள்வீர்கள். திடீர் பணவரவுகள் வந்தாலும் அதற்கேற்ற செலவுகள் ஏற்படும். பிற்போட நினைத்த வேலை ஒன்றை திடீரென செய்ய நேரிடலாம். வேண்டாம் என்று சொன்னாலும் சிலர் உங்களுக்கு உதவி செய்யலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும்.

**கடகம்:**
பயணங்களால் அலைச்சல், சோர்வு உண்டாகும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். ஒருவரிடம் கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம்

**சிங்கம்:**
மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள். நேற்றுவரை திர்பார்த்து வராமல் இருந்த பணவரவு ஒன்று, இன்று கையில் கிடைக்கலாம். நண்பர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். முக்கிய வேலைகளுக்காக வெளியூர் பயணம் செல்லலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆறுதலான நாள்.

**கன்னி:**
புத்திசாலித்தனம், ஆற்றல் அதிகரிக்கும் நாள். தொல்லையாக இருந்த உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பிள்ளைகள் பொறுப்போடு நடந்து உங்களை மகிழ்ச்சிப் படுத்துவர். பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்த காரியம் ஒன்றில் லாபம் கிடைக்கலாம். விரும்பிய உணவு வகைகளை வெளியில் சாப்பிட நேரிடலாம்.

**துலாம்:**
வியாபாரிகள் போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடிக்க நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். சிலர் தங்களின் வேலைகளை உங்கள் தலையில் சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்ளலாம். பழைய கடன் ஒன்றை தீர்க்க புதிய கடன் வாங்கலாம். உடன்பிறப்புகள் தொடர்பான வழிகளில் அனுகூலம் உண்டு.

**விருச்சிகம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். உறவினர் ஒருவர் உங்களின் மனம் புண்படும் வகையில் அல்லது சந்தோஷப்படும் வகையில் நடந்து கொள்ளலாம். நண்பர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பீர்கள். தொழிலில் அதிக கவனம், எச்சரிக்கை அவசியம். கடன் மிகுதி ஒன்று வசூலாகும் நாள்.

**தனுசு:**
பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த பிரச்சினை ஒன்று சுமுகமாக முடிவுக்கு வரும். பெரிய மனிதர்கள் சிலர் உங்களைத் தேடி வரலாம். தவறு என தெரிந்தும் சில காரியங்களை துணிச்சலாகச் செய்வீர்கள். ஒருவர் செய்த உதவிக்கு பதில் உதவி செய்வீர்கள்.

**மகரம்:**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்னை ஒன்று மீண்டும் சிக்கலை உண்டாக்கலாம். ஆரோக் கியக் குறைவால் உற்சாகம், தெம்பு பாதிக்கப்படும். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதியவர்கள் அறிமுகம் கிட்டும். பிள் ளைகள் கேட்ட பொருள்களை மறுக்காமல் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:**
மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். பழைய அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். பிடித்தமான பொருள் ஒன்றை வாங்குவீர்கள்.

**மீனம்:**
திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். கனிவான பேச்சுக்களால் கல் மனம் படைத்த சிலரிடமும் காரியம் சாதிப்பீர்கள். சிலர் உங்களின் கோபத்தை தூண்டும் வகையில் செயற்படலாம். மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம்.

# அரச வே
# காத்திரு
# யாழ்.

யாழ் மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகள் இலங்கையின் வடபகுதியிலுள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாக உள்ளது.

இந்த மாவட்டத்தில் அரச வேலைக்கான வெற்றிடங்கள் ஒப்பீட்டளவில் மிகக்குறைவாக உள்ளதுடன், வேலை தேடுவதற்கான மாற்றுவழி களும் அரிதாகவே உள்ளன என்று உள்ளூர் பட்டதாரிகள் மற்றும் பேராசிரியர்கள் தெரிவிக் கின்றனர்.

இந்தப் பகுதியில் இடம்பெற்ற போரின் விளைவு இவ்வாறான வேலையற்ற பிரச்சினைக்கு ஒரு காரணமாக உள்ளதாகத் தனியாரால் நடத்தப் படும் யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட சமூக, விஞ்ஞான ஆய்வு நிறுவனமான பருத்தித் துறை (Point Pedro) நிறுவனத்தின் பிரதான ஆய்வாளரான முத்துக்கிருஷ்ணா சர்வானந்தா தெரிவித்துள்ளார்.

''வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் ஏற்பட்டுள்ள பிரச்சினையானது அபவிருத்தித் திட்டங்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது'' என்பது ஆய்வாளரின் கருத்து.

26 வருடங்களாக இலங்கையில் இடம்பெற்ற போர், மே மாதம் 2009இல் முடிவுக்கு வந்தது. அது மீண்டும் தோற்றுவிக்கப்படாமல் தடுப்பதற்கும் எதிர்காலத்தில் உள்நாட்டு அமைதியை நிலைப் படுத்தவும் வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக் கைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சமூக மற்றும பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கிலுள்ள தமிழரைவிட மத்திய மற்றும் தென்பகுதியில் உள்ள சிங்களச் சமூகம் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புப் போன்றவற்றில் அதிக நலனைப் பெற்று வருகின்றது என்று சிலர் கருதுகின்றனர்.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டாலும் தற்போதும் வடக்கில் வேலையற்றோர் பிரச்சினை மற்றும் வறுமை அதிகரித்தே செல்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 6,000 வரையிலான பட்டதாரிகள் அரச வேலையற்றுள்ளனர்.

**போருக்குப் பிந்திய பொருளாதாரம்**

2010இல் வேலையற்ற பட்டதாரிகளின் வீதம் நாடு முழுவதும் 4.5 ஆகக் காணப்பட் டதாக குடிசன மதிப்பீடு மற்றம் புள்ளிவிவர வியல் திணைக்களம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. 2009இல் இந்த வீதம் 5.8 ஆக இருந்ததாகவும் போருக்குப் பின்னான காலப் பகுதியில் வெளிநாட்டு முதலீடுகள் நேரடியாக இலங்கைக்கு வந்து சேர்வதால் வேலையற்றோர் வீதம் குறைந்துள்ளதாக புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

ஆனால் இந்த வெளிநாட்டு முதலீடுகள் யாழ்ப்பாணத்தின் வேலையற்றோர் எண்ணிக்கையில் சிறிதளவு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என யாழ்ப்பாண வேலையற்ற பட்டதாரிகளின் தலைவர் தியாகராஜ் தனம் தெரிவித்தார்.

''எமது பிரச்சினைகளை எவரும் கவனத்திலெடுக்கவில்லை'' என்கிறார் தனம்.

புள்ளிவிவரவியற் திணைக்களத்தின் மதிப்பீடானது வடக்கு - கிழக்கு வாழ் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையை உள்ளடக்கியிருக்கவில்லை என்றும் ஒரு மாவட்டத்தில் இடம் பெறும் பிரச்சினையானது வடகிழக்கின் சகல மாவட்டத்திலும் பிரதிபலிக்காது எனவும் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் விகிதமானது மொத்தத் தேசிய விகிதத்திலும் இரு மடங்காக இருக்கும் எனவும் ஆய்வாளர் சர்வானந்தா குறிப்பிட்டார்.


இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 400,000 வரையான மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவிற்கான பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் 20,000 வரையானோர் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப் படுகிறார்கள் என்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் நவரட்ணா தெரிவித்தார்.

இதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஒவ்வொரு ஆண்டும் வேலையற்றோர் பட்டியலில் இணைகின்றனர். ஏற்கனவே 42,000 வரையானோர் அரச வேலை ஏதுமற்ற பட்டதாரிகளாக இருக்கின்றனர்.

**மூடப்பட்டுள்ள தனியார் துறையின் கதவுகள்**

யாழ். குடாநாட்டை நோக்கித் தற்போது படையெடுத்து வரும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் இங்கிருக்கும் வேலையற்றோரை பணிக்கமர்த்துவதைத் தவிர்த்துவருவதாக யாழ். பட்டதாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

''தனியார் துறையில் பெருமளவான தொழில் வாய்ப்புக்கள் இல்லாதபோதிலும்; இவர்கள் தமக்கான பணியாளர்களை தென்பகுதியிலிருந்தே கொண்டு வருகிறார்கள்'' என வேலையற்ற பட்டதாரியான முகுந்தன் சிவயோகநாதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்காக ...ருக்கும் ...பட்டதாரிகள்

தெரிவித்தார்.

தொழில்நுட்ப அறிவின்மை, ஆங்கில மொழியில் போதியளவு தேர்ச்சியின்மை போன்றவற் றால் யாழ்ப்பாணத்துப் பட்டதாரிகள் பலர் வேலையற்றிருக்கின்றனர் என்று யாழில் உள்ள தனியார் துறை நிறுவன இயக்குநர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதனை ஒத்துக்கொண்டுள்ள ஆய்வாளர் சர்வானந்தா, பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் பட்டதாரிகளின் ஆளுமையை உடனடியாக விருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது எனவும், எவ்வாறிருப்பி னும் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் துறை நிறுவனங்களில் போதியளவு வெற்றிடங்கள் இல்லை எனவும் தெரிவித்தார்.

அதேவேளையில் ''சிறிய தனியார் துறை நிறுவனங்களே யாழில் உள்ளன. இவை நிலையான பெரிய முதலீடுகளுடன் தமது தொழிலை விரிவாக்கவில்லை. இலங்கையின் மத்திய நிர்வாகம் இதனை ஊக்குவிக்கவும் இல்லை. பெருமளவான வேலை வாய்ப்புகளை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பில் அரச நிறுவனங்களே செயற்படுகின்றன'' என அவர் மேலும் தெரிவித்தார்.



### போக்கு மாறவேண்டும்

தனியார் துறைக்குள் பெருமளவான வேலையற்றோரை உள்வாங்க வைக்க வேண்டியது அரசின் கடமை என்று இளம் பட்டதாரிகள் நினைக்கின்றனர். ஆனால் உயர்ந்தளவில் எதிர்பார்க்கப்படுகின்ற அரச வேலைகள் அனைவருக்கும் கிடைப்பதென்பது கடினமான விடயமாகும்.


''இளம் பட்டதாரிகள் அரச வேலை வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கிறார்கள். குறிப்பிடத் தக்களவு வேலை வாய்ப்பை வழங்கவல்ல தனி யார் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் இவர்கள் சாதகமாகச் சிந்திக்கவேண்டும்'' என்று யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் கருதுகிறார்.


தனியார் துறையோ அரச துறையோ அல்லது பட்டதாரிகளோ, பட்டதாரியாகாதவர்களோ இது தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்றிருக்கவேண்டும் என யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட பெண்கள் அபிவிருத்தி அமைப் பன் தலைவி சறோஜா சிவசந்திரன் எதிர்பார்க்கிறார்.

''யாழ். மாவட்ட இளைஞர்கள் அவர்களின் ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய விதத்தில் எந்தவொரு உயர் கல்வியையும் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. இந்த இளைஞர்கள் பொருத்தமான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்குரிய விதத் தில் போருக்குப் பின்னான சிறப்புத் திட்டத்தின் கீழ் பயிற்றுவிக்கப்படுவதற்குரிய பொறுப்பு அரசுக்கு உண்டு'' என்று இவர் மேலும் தெரிவித்தார்.

பல்வேறு பிரிவுகளாக திறன் அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சிகள் மற்றம் இளைஞர் வலுவூட்டல் போன்ற திட்டங்களை வடபகுதியிலுள்ள இளைஞர்களுக்காகச் செயற்படுத்த முயற்சிப்பதாக இலங்கையின் இளைஞர் விவகாரப் பிரதி அமைச்சர் துமிந்த திஸநாயக்க குறிப்பிடுகிறார்.

[நன்றி: புதினப்பலகை]




## கல்வியா, செல்வமா, எது பெரிது?



ஓர் ஊரில் பணக்காரர் ஒருவரும் படிப்பாளி ஒருவரும் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஊரிலேயே பெரிய மனிதர்களாக மதிக்கப்பட்டு வந்தார்கள். இருந்தாலும் பணக்காரர் பெரியவரா? படிப்பாளி பெரியவரா? என்று ஊர் மக்கள் அடிக்கடி விவாதித்துக் கொள்வார்கள். எப்படி முடிவு சொல்ல முடியும்? இரண்டு பேரின் கட்சியிலும் நிறையக் காரணங்கள் சொல்லப் பட்டன.

திடீரெனப் பணக்காரர் நோய் வாய்ப்பட்டு இருந்து விட்டார். அதே வாரத்தில் முதுமை காரணமாகப் படிப்பாளியும் மரணம் அடைந்து விட்டார். அதன் பிறகே உண்மையில் பெரிய மனிதர் யார் என்பதை ஊர் மக்கள் அறிந்து கொண்டனர்.

காரணம் பணக்காரனின் வீடு மகனுக்குக் கைமாறியது வயல் மாம்பிள்ளைக்குப் போனது. கடை கண்ணிகள் சின்ன மகனுக்குக் கிடைத்தன. வங்கிக் கணக்குகள் மனைவி கணக்குக்கு மாறிவிட்டன. அவரது கழுத்துச் சங்கிலி பேரப்பிள்ளை கழுத்தில் மின்னியது. பத்து விரல் மோதிரங்களையும் உருக்கிப் பேர்த்திக்கு வகை வகையாகச் செய்து கொண்டனர்.

பணக் காரர் இருந்ததைவிட செத்தது மேல் என்பது போல் அவரது குடும்பமே கொண்டியது. ஒரு ரூபாய் கூட அவர் போகும் போது கூடப் போகவில்லை. அவரது குடும்பத்துக்கே முழுவதும் கிடைத்தன.

ஆனால் படிப்பாளி நிலைமையோ வேறு. சின்னச் சின்ன நோய்களுக்குக்கெல்லாம் செலவில்லாமலேயே மருந்து சொல்வார். இப்போது மக்களுக்கு அந்த மருந்துக்களைச் சொல்ல ஆளில்லாமல் வைத்தியத்துக்கு செலவு அதிகரித்தது. பிரச்சினைகளுக்கெல்லாம் நல்ல தீர்வு சொல்வார். பின்னர் பிரச்சினைகளைத் தீர்க்க ஆளில்லாமல் மக்கள் கஸ்ரப்பட்டனர்.

அவரது இசைஞானம் அபராதம். திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம் எல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். படிப்பாளிக்குத் தீ வைத்த போது இந்த எல்லாச் செல்வத்துக்கும் சேர்த்தல்லவா. தீ வைத்து விட்டார்கள். எல்லாமே அவரோடு போய்விட்டன.

பணக்காரர் செல்வத்தில் கொஞ்சமும் அவர் கூடப் போகவில்லை. படிப்பாளி விஷயத்தில் எல்லாமே அவரோடு போய்விட்டன. அதனால் தான் பொருள் செல்வத்தை விடக் கல்விச் செல்வமே மேலானது என்பதை ஊர் மக்கள் புரிந்து கொண்டனர்.

தனம் தரும் என்று பாடிய அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில் உடனே கல்வி தரும் என்றார். ஏன்? அறிவற்றவன் கையில் இருக்கும் செல்வம் அணு குண்டைவிட ஆபத்தானது. மெய்யன்பர்களே அதனால்தான் திருவள்ளுவர் கல்விச் செல்வமே செல்வம். பொருட்செல்வம் செல்வமே அல்ல என்ற பொருளில் ''கேடல் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றையவை'' என்கிறார்.

எனவே நாமும் கல்வியா செல்வமா சிறந்தது என்பது பற்றிய பொதுவான கருத்துக்களை நோக்கும் போது கல்வியே சிறந்தது என்ற கருத்தையே ஏற்கக் கூடியதாக உள்ளது.

செல்வனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிஞனுக்கு நண்பர்கள் தான் அதிகம். அத்தகையவன் எப்பவும் அதை மற்றவர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டே இருப்பான். அதனால் அவனிடம் தாராளத் தன்மை இருக்கும்.

செல்வமானது உள்ளத்தின் ஒளியைப் போக்கி. இருட்டை உண்டாக்கும். ஆனால் அறிவு இருண்ட உள்ளத்திலே ஒளியைப் பாய்ச்சி அதை விசாலப்படுத்தி விடும்.

செல்வம் மனதின் செருக்கை உண்டாக்கி ஆணவத்தை ஏற்படுத்தும். அதனால் ''நானே கடவுள் என்று நினைக்கிற அளவுக்கு மனிதனைத் தாழ்த்தி விடுகின்றது'' ஆனால் அறிவு பணிவையும், பண்பாட்டையும் வளர்க்கிறது. அதனால் அறிவு தான் சிறந்தது.

பொருள் செல்வத்தை விட கல்விச் செல்வமே மேலானது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட்டால் வாழ்வில் வெற்றி நிச்சயம்.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவு பார்க்கும் ரகசிய ரோபோ கமெரா

வானத்தில் பறந்த படியே ஆயிரம் அடி தொலைவில் இருந்து தெள்ளத் தெளிவாக படம் எடுக்கக் கூடிய ரோபோ கமெராவை கனடாவை சேர்ந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது.

கனடாவைச் சேர்ந்த நிறுவனம் ஏரியன் லேப்ஸ் உளவு நிறுவனங்களுக்குத் தேவையான எலக்ட்ரோனிக் கருவிகளை தயாரித்து வருகிறது.

சமீபத்தில் இந்த நிறுவனம் உருவாக்கியிருப்பது ஏரியன் ஸ்கவுட் எனப்படும் ரோபோ கமெரா. இதில் உள்ள தொடு திறன் திரையின் மூலம் முதலில் கூகுள் நிறுவனத்தின் உலக வரைபட மென்பொருள் மூலமாக நமக்கு வேண்டிய இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.

உதாரணமாக நியூயோர்க் என்று தேர்வு செய்தால் ஏரியன் ஸ்கவுட் உடனே புறப்பட்டு நியூயோர்க் நோக்கிப் பறக்கத் தொடங்கும். அங்கு சென்றதும் 500 அடி உயரத்தில் பறந்தபடியே கீழே நடப்பவற்றை தனது டிஜிட்டல் கமெராவில் புகைப்படமாக அல்லது வீடியோ காட்சியாக தொடர்ச்சியாகப் பதிவு செய்யும்.

கீழே இருந்து பார்த்தால் ரோபோவைக் கண்டுபிடிக்க முடியாது. சுமார் ஆயிரம் அடி தொலைவில் இருந்துகூட தெள்ளத் தெளிவாகப் படங்களை எடுக்கும். பதிவாகும் காட்சிகளை மின்னஞ்சலுக்கோ, ஐபோனுக்கோ அனுப்பிக் கொண்டே இருக்கும்.



இதன் விலை ரூ.22 லட்சம். காரில் மிக வேகமாகச் செல்பவரின் முகத்தைக்கூட இந்தக் கமெரா தெளிவாகப் படம் பிடிக்கும். தப்பிச் செல்லும் கொள்ளையரைப் பிடிக்கவும், மறைந்திருக்கும் குற்றவாளிகளைப் பிடிக்கவும் இது உதவிகரமாக இருக்கும் என்கிறது ஏரியன் லேப்ஸ் நிறுவனம்.

## PDF கோப்புகளை Word கோப்பாக மாற்றும் வழி

PDF 2 TEXT

Scan செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் நம்மிடம் இருக்கும் PDF கோப்புகளை சில நிமிடங்களில் வேர்ட் கோப்புகளாக மாற்றலாம்.

FreeOCR என்ற இந்த இலவச மென்பொருளை நம் கணினியில் தரவிறக்கி நிறுவிக் கொள்ளவும். அடுத்து நாம் வேர்ட் கோப்பாக மாற்ற விரும்பும் PDF கோப்புகளையோ அல்லது JPG படங்களில் இருக்கும் எழுத்துக்களை வேர்ட் கோப்பாக மாற்ற விரும்பினால் அதையும் தேர்ந்தெடுத்துக் கொண்டு OCR என்பதை சொடுக்கி எளிதாக வேர்ட் கோப்பாக தட்டச்சு செய்த எழுத்துக்களாக மாற்றலாம்.

Save என்ற ஐகானைச் சொடுக்கி வேர்ட் கோப்புகளாக நம் கணினியில் சேமிக்கலாம். Scanner மூலம் நேரடியாக ஸ்கேன் செய்த புகைப் படங்களையும் உடனடியாக வேர்ட் கோப்புகளாக மாற்றலாம்.

தமிழ் மொழி எழுத்துக்களைத் தவிர ஆங்கிலம், பிரெஞ்சு, சீன மொழிகளுக்கு மட்டுமே இப்போது துணை புரிகிறது.

ஆங்கில கோப்புகளை இனி தட்டச்சு செய்து வேர்ட் கோப்பாக மாற்ற விரும்பும் அனைவருக்கும் இந்த மென்பொருள் பயனுள்ளதாக இருக்கும்.

## தரையிலும் தண்ணீரிலும் இலகுவாக பயணத்தை மேற்கொள்ளும் பேருந்து





உலகில் பெரும்பாலானோர் தரைவழிப் பாதையால் பல பயணங்களையும் சுற்றுலாக்களையும் மேற்கொண்டிருக்கின்றனர். ஆனால் நீரோடைகளில் அதுவும் பேருந்தின் மூலமாக ஓர் உல்லாச சுற்றுலாவைத் தற்போது மேற்கொள்ள முடியும். அவ்வாறான சுற்றுலாவை மேற்கொள்வதற்கு துணைபுரியும் பேருந்துதான் அம்பிக்கோச் (Amphicoach).

## சிறுவர்களுக்கான மென்பொருள்




சாதாரணமாக விண்டோஷுடன் வரும் பெயிண்ட் மென்பொருளைவிட பல பல வசதிகள் உள்ளன. இதன் மற்றுமொரு சிறப்பம்சம் என்னவென்றால் எங்கள் அழகுத் தமிழிலும் பயன்படுத்துவதற்கு வசதியாக உள்ளதென்பதாகும்.

டுக்ஸ் பெயிண்ட்(Tux Paint) எனும் பெயர்கொண்ட இந்த மென்பொருள் உலகெங்கிலுமுள்ள அநேகமான சிறுவர்களை வெகுவாகத் தன் பக்கம் கவர்ந்து இழுத்துக் கொண்டிருக்கின்றது.

அனைவரது கணினியிலும் இருக்க வேண்டிய இந்த மென்பொருளைத் தரவிறக்கிக் கொள்ளுங்கள். தரவிறக்கியதும் திறக்கும் விண்டோவில் படத்தில் உள்ளவாறு Languages பொத்தானை அழுத்தி Tamil என்பதை தெரிவு செய்து அடுத்து applyயை கொடுத்துவிடவும் அவ்வளவு தான்.

## இணைய உலாவியில் தகவல்கள் திருடப்படுகின்றதை அறிந்து கொள்ள....

நாம் பயன்படுத்தும் பிரவுசரை தாக்கி நம் கணினியில் இருக்கும் தகவல்களை கொள்ளை அடிக்கும் வழக்கம் தற்போது வேகமாகப் பரவி வருகிறது.

சிறிய அளவில் சாதாரணமான ஸ்கிரிப்ட் மூலம் கூட தகவல்களை திருடுகின்றனர். சில நேரங்களில் நம் பிரவுசரில் இது போன்ற ஸ்கிரிப்ட் இருப்பது கூட நமக்குத் தெரியாது. இதற்குத் தீர்வாகப் புதிய இணையத்தளம் அறிமுகமாகியிருக்கிறது.

இணையம் மூலம் நம் பிரவுசரை எளிதாக சோதித்து பாதிப்பு ஏதும் இருக்கிறதா என்று எளிதாக அறியலாம். இன்டர்நெட் எக்ஸ்புளோரர், பயர்பொக்ஸ், ஓப்பரா போன்ற பிரவுசர்களில் ஏதேனும் பாதிப்பு இருக்கிறதா என்பதை இணையத்தின் மூலம் சோதித்து சில நிமிடங்களில் தெரிந்து கொள்ளலாம்.

கீழே குறிப்பிட்ட தளத்திற்குச் சென்று Start the test என்ற பட்டனை அழுத்தி நம் பிரவுசரை சோதிக்கலாம். சில நிமிடங்களில் நம் பிரவுசர் பாதிக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்ற தகவல்களையும் கொடுக்கிறது. அனைத்துத் தரப்பு மக்களும் பிரவுசரை அடிக்கடி சோதித்துக் கொள்வதால் பாதிப்புக்களைத் தவிர்க்கலாம்.

## கணினியில் தேவையற்ற கோப்புகளை அழித்து விரைவுபடுத்த

கணினியில் தினமும் பல்வேறு மென்பொருள்களை நிறுவி பயன்படுத்தி வருகிறோம். உதாரணமாக இணையத்தில் கிடைக்கும் இலவச மென்பொருள்களை பதிவிறக்கம் செய்வோம்.

பிடித்தால் அந்த மென்பொருள்களை பயன்படுத்துவோம். இல்லையெனில் கணினியிலிருந்து நீக்கி விடுவோம். இவ்வாறு கணினியில் இருந்து நீக்கம் செய்யும் போது மென்பொருள் முழுமையாகக் கணினியை விட்டு நீங்காது.

ஒரு சில கோப்புக்கள் கணினியிலேயே தங்கி விடும். மேலும் கணினியைப் பயன்படுத்தும் போது நாம் பயன்படுத்தும் மென்பொருள்கள் கணினியில் தேவையற்ற குப்பைகளைச் சேமிக்கும். அதுவும் கணினியிலேயே தங்கி விடும்.

கணினியானது அடிக்கடி கிராஷ் ஆகினால் விண்டோஸ் ரிஸிஸ்ட்டரியில் கோப்புக்கள் சேதமாகும். இதுபோன்ற காரணங்களால் கணினியினுடைய செயற்பாட்டில் வேகம் குறையும்.

இதுபோன்ற நிலையில் கணினியில் உள்ள தேவையற்ற குப்பைகளை நீக்கினால் மட்டுமே கணினியானது மிக விரைவாக செயற்படும்.

இதுபோன்ற கோப்புக்களை நீக்கி கணினியைச் சுத்தம் செய்ய வேண்டுமெனில் நாம் ஒரு மென்பொருளின் உதவியை கண்டிப்பாக நாடிச்செல்ல வேண்டும். இதற்கு ஒரு மென்பொருள் உதவி செய்கிறது. அதுவும் தற்போது அந்த மென்பொருள் இலவசமாகக் கிடைக்கிறது.

சுட்டியில் குறிப்பிட்ட தளத்துக்குச் சென்று Get your FREE product என்னும் பொத்தானை அழுத்தவும். பின் உங்களது சுயவிவரங்களை உள்ளிடவும். அடுத்ததாக மென்பொருளை தரவிறக்கம் செய்வதற்கான இணைப்பு கிடைக்கும். அதனைப் பயன்படுத்தி மென்பொருளை பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

அதிலேயே இலவச லைசன்ஸ் கீயும் கிடைக்கும். அதையும் குறித்து வைத்து கொள்ளவும். இவை அனைத்தும் நீங்கள் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். அதையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த மென்பொருளை இணையத்தின் உதவியுடன் பதிவிறக்கம் செய்து கணினியில் நிறுவிக் கொள்ளவும். பின் லைசன்ஸ் கீயை பயன்படுத்தி மென்பொருளை முழுமையாக நிறுவிக் கொள்ளவும். இந்த மென்பொருளுடைய சந்தை விலை 39.95 ஆகும்.

இந்த மென்பொருளை ஜீன் 1, 2011 வரை மட்டுமே இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும். கணினியில் உள்ள தேவையற்ற குப்பைகளை நீக்கம் செய்ய இந்த மென்பொருள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் ஓர் ஆலயம்!




மனிதன் மனதுக்கு நிம்மதி தேடி ஆலயங்களை வந்தடைகிறான். நேர்த்திகளை நிறைவேற்றுகிறான். அதுமட்டுமன்றித் தனது கவலைகளை அங்கே கொட்டித் தீர்த்து சரணாகதி அடைகிறான். போர்க்காலத்தில் அழிவு கண்ட ஆலயங்கள் எல்லாம் இன்று புதுப் பொலிவு பெறுகின்றன. வானளாவ உயரும் கோபுரங்கள், மனதைக் கொள்ளை கொள்ளும் மணி மண்டபங்கள் என்றெல்லாம் வேலைகள் மும்முரமாக நடந்தேறி வருகின்றன. எல்லாவற்றையும் அதே பொறுமையோடு பார்த்துக் கொண்டிருப்பவன் இறைவன். அறுகம்புல் மலரென்றால் அன்பேதான் கனியென்றால் அதனையும் ஏற்பவன் இறைவன்.

பக்தன் ஒருவன் கோயிலுக்கு வாழைக் குலையைச் சுமந்து செல்கிறான். வழியில் பசி தாங்க இயலாத பிச்சைக்காரன் மறிக்கிறான். அப்போது "போ உனக்குக் கிடையாது; இது கடவுளுக்கு உரியது" என்று அவனைக் கடந்து வந்து கோயிலிலே கட்டித் தூக்கத் தூக்க வாழைக் குலை அறுந்து விழுகிறது. ஆம்! ஏழையின் பசியைத் தீர்க்காத காணிக்கையை கடவுள் ஏற்கவில்லை.

இறைவனின் திருவிளையாடல்கள் ஒரு விதம். மனிதனின் திருவிளையாடல்கள் மறுபுறம். இவற்றின் இடையே சிக்கித் தவிக்கிற உலகின் நடுவினிலே கண்கண்ட தெய்வங்களையும் இனங் காணத் தவறாதவன் மனிதன். மாதா, பிதா, குரு, தெய்வம் என்றோர் ஒழுங்கு இருக்கிறது. பருவத்தை, தேவையை, நிலைமையைப் பொறுத்து தெய்வங்களும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாகவே புலப்படுகின்ற நிலைமை தெரிகிறது. அத்தகைய தெய்வங்களைத் தரிசிக்கும் இடங்களும் ஆலயங்களே. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்கிறார்கள். அதுவும் அனுபவத்தில் உண்மையிலும் உண்மை.

தெய்வத்துக்கு அடுத்ததாக வைத்து வணங்கப்படுகிறவர் வைத்தியர் என்பர் ஒரு சாரார். பெற்றோரை, ஆசிரியரை மதிக்கத் தவறும் கலாசாரம் வளர்ந்து வருகிறது எனப் பலரும் கவலை கொள்கிறார்கள். என்றாலும் வைத்தியரிடம் வரும்போது பெரும்பாலும் எல்லோரதும் திமிர் அடங்கி, கொஞ்சம் கப்சிப் ஆகத்தான் வருகிறார்கள். பின்னர் வெளியே போய் வைத்தியர் ஆலோசனையைப் பின்பற்றி நடக்காமல் விடுவது வேறு விடயம்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். உண்மைதான். நோய் கண்டு விட்டால் வைத்தியர் தான் தெய்வம். வைத்திய சாலைதான் ஆலயம். நோய் இல்லாமலே அந்தப் பரிசோதனை, இந்தத் தடுப்பூசி என்றெல்லாம் வைத்தியசாலைக்குப் படையெடுப்பவர்கள் இப்போதெல்லாம் ஏராளம். சாவைத் தடுக்க ஏராளமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தேவை என்று பலரும் பறக்கிறார்கள்.

இலவச வைத்திய பரிசோதனை என்று நிறுவனங்கள் விளம்பரம் செய்கின்றன. சும்மா இருப்பவர்கள் இதில் போய் பரிசோதித்து பயந்து மிரண்டு லட்சங்களை செலவழிப்பதும் உண்டு.

உலக நடப்புக்களை சந்தேகக் கண் கொண்டு நோக்க வேண்டிய காலம் இது. எதுவானாலும் ஓர் இலாப நோக்கம் பெரும்பாலும் உள்ளே இருக்கும். 'எதற்கெடுத்தாலும் விழா வைக்கிற காலம் அல்லவா இது. தமக்குத் தாமேயும் விழா எடுப்பார்கள். தம் புகழ் பாடித் திரிவார்கள்.

அண்மையில் உயிரோட்டமான ஒரு பாராட்டு விழாவில் கலந்து கொண்ட திருப்தி எனக்கும் இருந்தது. வடமராட்சி மக்களின் உயிர் நாடியான பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினர் அந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். சற்று ஆச்சரியமாக இருந்தது. அரச சேவைகளும் ஏனோ தானோ என்றிருக்காமல் மக்களின் பாராட்டைப் பெறுமளவுக்கு முன்னேற்றகரமாக இருக்கின்றன.

வைத்தியசாலைகளின் சேவையைப் பாராட்டும் மரபு வடமராட்சியில் மேலோங்கி இருப்பதற்கு இந்த விழாவும் ஒரு சாட்சி என்றால் மிகையாகாது. மக்கள் சேவையில் பார் புகழும் அளவுக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை என்பன வடமராட்சியில் முன்னணியில் திகழ்கின்றன. இவற்றின் தன்னலம் கருதாத சேவை பற்றி வரைய வார்த்தைகள் இல்லை எனலாம்.

சுகாதார அமைச்சின் மத்திய தர வைத்தியசாலைகளின் தர நிர்ணயப் போட்டியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற செய்தி பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. நாடுமுழுவதிலும் இருந்து 18 பொது வைத்திய சாலைகளும் 59 ஆதார வைத்தியசாலைகளும் இந்தப் போட்டியில் களமிறங்கி இருந்தன. ஏனையவை களமிறங்கத் தயக்கம் காட்டித் தாமாக ஒதுங்கிக் கொண்டன போலும்.

ஆண்டாண்டு காலமாக சீரான அபிவிருத்தி தொடர்ந்து கொண்டிருந்த பல வளங்களும் கொண்ட தென்பகுதி வைத்தியசாலைகளைப் பின்தள்ளி -

**மு.சிவநேசன்**

யுத்த பூமியில் பல்வேறு சோதனைகளைச் சந்தித்தும் தளராது, சாம்பல் மேட்டில் இருந்து உயிர்த்த பீனிக்ஸ் பறவையாக எழுந்து சாதனை படைத்த பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பெற்றுக் கொண்ட வெள்ளி விருது - பலருடைய தன்னலம் கருதாத உச்சக் கட்ட அர்ப்பணிப்புக்களின் விளைவான பிரசவம். (தொடரும்)

# புகழ் பூத்த பாடசாலைகளுக்கு மாணவர்களை வாரி வழங்கி வரும் தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**1996** ஆம் ஆண்டு அ.மாணிக்கவாசகர் தம்பசிட்டிப் மெ.மி.த.க. பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் அசௌகரியமாகக்காணப்பட்ட மலசலகூடம் இடித்தழிக்கப்பட்டு GTZ அமைப்பின் உதவியுடன் புதிதாக மலசலகூடம் அமைக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு தரம் ஒன்பது வரை வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டதோடு பாடசாலையின் தரமும் உயர்ந்தது.


இவர் இளைப்பாறியதைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு தொடக்கம் வீ.வடிவேல் என்பவர் அதிபராகப் பொறுப் பேற்றார். இவரது பதவிக் காலத்திலே புதிய மாடிக் கட்டடம் ஒன்று GTZ அமைப்பின் உதவியோடு கட்டப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவரின் நலன் கருதி நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டது. மாணவர்களின் நலன் கருதி வகுப்பறைகளைப் பிரிக்க தடுப்புகள் அமைக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டு சித்திரை மாதம் வீ.வடிவேல் ஓய்வு பெற்றுச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து கா.ராமஜெயம் அதிபரானார். இவர் பதவியேற்றதன் பின்னர் பாடசாலையின் பௌதிக வளத்தில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. இவரது காலத்தில் பாடசாலையின் முகப்புத் தோற்றம் மாற்றம் பெற்று அழகுறப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் பெரிய வாயில்கள் அமைக்கப்பட்டன. அத்துடன் முகப்பு வளைவும் அமைக்கப்பட்டது. மாணவர்களின் தேவைக்கென கணினி, பாடசாலையின் தேவைக்கென றோனியோ இயந்திரம் என்பன கிடைக்க வழி செய்தார். இவரது காலத்திலே மாணவர்கள் கல்வியிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் தம் முத்திரையைப் பதித்து வருகின்றனர்.

இந்தப் பாடசாலை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி வலயத்தில் தொடர்ச்சியாக சிறந்த பெறு பேறுகளைப் பெற்று வருகின்றது. மேலும் சதுரங்கச் சுற்றுப் போட்டி, மெய்வல்லுநர் போட்டி என்பவற்றிலும் மாணவர்கள் தம் திறமையினை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த முறை நடைபெற்ற வடமராட்சி வலயப் போட்டிகளில் வெற்றி பெற்ற இரண்டு மாணவர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடமராட்சியிலே புகழ் பூத்த 1 ஏபி பாடசாலைகளாகத் திகழும் பாடசாலைகள் அனைத்துக்கும் வளமான மாணவர்களை வாரிவழங்கும் மூலாதாரமாக இந்தப் பாடசாலை மிளிர்கின்றது என்றால், அது மிகையாகாது. இந்தப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற பின்னர் உயர்தரப் பரீட்சையிலே சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பலர் இன்று மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், பேராசிரியர்களாகவும் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்றனர்.

இன்று வரையான இந்தப் பாடசாலையின் வரலாற்றிலே பல சாதனைகள் சரித்திரங்களாகக் காணப்பட்டாலும் சில வேதனையான விடயங்களும் இருக்கவே செய்கின்றன. பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலை ஒரு குறுகிய நிலப்பரப்பிலே அமைந்துள்ளமை வேதனையான விடயமே. விளையாட்டு மைதானம் இல்லாமல் இருப்பதுடன் ஒரு சிறிய விளையாட்டு முற்றம் அமைப்பதற்குக் கூட போதிய நிலவசதி காணப்படாமை கவலைக்குரியதே.





அத்துடன் சில வகுப்பறைகள் இன்று வரை சிமெந்து நிலம் இல்லாமல் வெறுந்தரைகளாகவே காணப்படுகின்றன. 1939 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பிரதான மண்டபம் நான்கு வகுப்புக்களை உள்ளடக்கியுள்ளதோடு இடிந்து விழக் கூடிய நிலையிலும் காணப்படுகின்றது. சங்கீத அறையோ விஞ்ஞான ஆய்வு கூடமோ இன்றி தரம் ஒன்பது வரை மாணவர்கள் கல்வி கற்பது கவலைக்குரியது.

GTZ நிறுவனம் அமைத்த மாடிக் கட்டடத்தின் மேல் தளம் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் இந்தப் பாடசாலை விடயத்தில் அதிக அக்கறை எடுத்து தேவைகளை நிறைவு செய்து பாடசாலை வளர்ச்சிக்கு உதவிட வேண்டும் என்பதே பாடசாலைச் சமூகத்தினரின் வேண்டுகோளாகும். (முற்றும்)

**சரணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு ஆண்டுகளும் ஆயிற்றோ.... ஒளிமுகம் மறைந்து?



அன்னையின் மடியில்
04 . 08 . 1981
புகையிரதத்தின் பிடியில்
17 . 05 . 2004

### செல்வன் மரியரட்ணம் குணரட்ணம் (குணம்)

(ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் பேராதனைப் பல்கலைக்கழக 2ஆம் வருட பொறியியல் பீட மாணவனுமாகிய இலட்சிய வேந்தன்)

சோதனைகளையே சாதனைகளாக்கி
இமை மூட மறுத்து
இலட்சியக் கனவுகள் சுமந்து
உனக்காக வாழ்வதை உதறி எறிந்து
எமக்காக வாழ்ந்த
எங்கள் குண மலரே!!!

திரும்பும் திசை எல்லாம் உன்
நிழல் விம்பம் வைத்து
நிஜத்தில் உன்னுடனேயே
வாழ்வதாய் உணர்கின்றோம்
வீடியோ ஒளிப் படத்தில்

அன்றைய உன் கனவுகள் நிஜங்களாகி
ஒன்றன் பின் ஒன்றாய்
புது உறவுகளும் காண்கின்றோம்
ஆனால், உனக்கான இடம் மட்டும்
இன்னும் இடைவெளியே!!

வீட்டில் உன் குரல் கேட்கும்
கூடிய நண்பர் வரவில்
உன்னையே தினமும் கண்டும்
எம்மையே ஏமாற்றி
ஏதேதோ செய்கின்றோம்.

"நாம் வாழும் வரை எம்முள்ளே நீயும் வாழ்வாய்"

நிரந்தர முகவரி:
6ஆம் வட்டாரம், மயிலிட்டி.
தற்காலிக முகவரி:
தும்பளை, பருத்தித்துறை.

உன் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

(4269) (38)

# செஞ்சிலுவைச் தொண்டர்களுக்கு பயிற்சி

அச்சுவேலி, மே 17

வலி.கிழக்கு கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கு நான்கு தினங்களுக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

முதலுதவிப் பயிற்சியில் இணைந்து கொள்ளவிரும்பும் தொண்டர்கள் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் இ.மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இருந்துவரும் முதலுதவி வளவாளர்கள் தொண்டர்களுக்கு நான்கு தினங்களுக்கு பயிற்சி அளிக்கவுள்ளனர். பயிற்சி நெறியில் இணைந்து முதலுதவிப் பயிற்சியை பெற்றுக்கொள்ள விரும்புவோர் கோப்பாய் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தலைவர் அறிவித்துள்ளார்.

(ம-11)

## சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், மே 17

ஜன்னல் கம்பியை உடைத்து ஜன்னலுக்கு அருகே வீட்டினுள் நித்திரையில் இருந்தவரின் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தம்பாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வந்துள்ளதாவது:

வீட்டினுள் ஜன்னல் அருகில் நித்திரையில் இருந்தவேளை ஜன்னல் பக்கமாக வந்த திருடர்கள் ஜன்னல் கம்பியை வளைத்து அதனூடாக அங்கு நித்திரையில் இருந்தவரின் 2 பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

நித்திரை யிலிருந்து எழுந்து பார்த்த போது சங்கிலி திருட்டுப் போனமை தெரியவந்துள்ளது.

இந்தச் திருட்டுச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

### தவறிவிட்டது

நீர்வேலி மத்தி, நீர்வேலியைச் சேர்ந்த கமலாதேவி இராசதுரை என்பவரது தேசிய அடையாள அட்டை [467020153 V] 10.04.2011 அன்று யாழ்ப்பாண NSB கிளைக்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் 0772670280 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### தவறிவிட்டது

காளிகோயிலடி, வீமன்காமன் தெல்லிப்பழையைச் சேர்ந்த கமலேந்திரராசா சதீஸ்வரன் என்பவரது தே.அ.அ.[810174943V] மற்றும் தற்கால அ.அ. என்பன முத்திரைச் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் "ஜெயா ஸ்வன்டிங் வேக்ஸ்", இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் ஒப்படைத்துதவவும். T.P- 0779933008

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள் 19.05.2011 விநியோகிக்கப்படும்.
விலை 90 கூடுதல் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் மீண்டும் கொள்வனவு செய்யப்படும்.

- ராஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்
- ஜென்சிபாம், முதலாம் கட்டை, பருத்தித்துறை

T.P.: 021 222 2867, 077 6090926.

(3902)(25-50)

### விசேட பொதுக்கூட்டம்
### வட இலங்கை சுதேச வைத்தியசாலை

காலம்: 29.05.2011 பிற்பகல் 2.00 மணி
இடம்: யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
தலைமை: Dr. சு.ஸ்ரீவிக்னேஸ்வரா DAM

உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு:
அங்கத்தவர்கள் 2011 இக்கான அங்கத்துவப் பணத்தைச் செலுத்துவதுடன் புதியவர்கள் அங்கத்துவ விண்ணபப்படிவத்தைக் கீழ்க்கண்ட முகவரிகளில் பெற்று விண்ணப்பித்து 28.05.2011 இற்கு முன் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும். 25.05.2011 ஆம் திகதிக்கு முன் பிரேரணைகளைத் தலைவர் அல்லது செயலாளரிடம் எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும்.

தலைவர்
Dr. சு. ஸ்ரீவிக்னேஸ்வரா,
சிவசக்தி வைத்தியசாலை,
சின்னக் கிணத்தடி வீதி,
அரியாலை.

செயலாளர்
சுதேச மருத்துவர் ஜெ.ஜெயலன்
சுஜீவா வைத்தியசாலை,
இல.6. கலட்டி, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(4261)

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



### அமரர் இராசலிங்கம் அருஜெயக்குமார்

(அருள் ஸ்ரோர் உரிமையாளர், கோப்பாய்)

தோற்றம்: 09.04.1972
மறைவு: 28.05.2010

திதி: வைகாசிப் பௌர்ணமி (17.05.2011)

அருளாக உதித்து
அன்பாலே ஆண்டு
அரைவழியில் போய்
ஆண்டொன்று ஆனது
பூண்ட விரதமெல்லாம்
புவியில் வீணாகிப் போனது
ஆறவில்லை எம்மனது
ஆற்றுவார் யாருமின்றி- என்றும் உன்
அன்புக்கு ஏங்கும் உறவுகள்.

மனைவி: ஜீவமதி,
பிள்ளைகள்: ஐவர்ஜன் (யா/இந்துக் கல்லூரி),
அஜீவன் (யா/மத்திய கல்லூரி),
லஜனன் (கோ/நாவலர் தமிழ் வித்தியாலயம்).

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(4162) (38)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
11 . 03 . 1934



உதிர்வு
17 . 04 . 2011

எம் குடும்பத் தலைவியாய்த் திகழ்ந்து பண்புக்கும்
பாசத்துக்கும் உறைவிடமாய் விளங்கிய எம் தெய்வமான

### திருமதி இராசையா சந்திரவதனா

இறைவனுடன் சங்கமித்த வேளையில் எமது துயரத்தில்பங்கு கொண்டு தொலைபேசி, கடிதம் மூலமும்அனுதாபச் செய்திகளை அனுப்பியோர், உடன் நின்று ஒத்தாசை புரிந்தோர் மற்றும் எம் அன்புத் தெய்வம் சுகயீனமுற்று யாழ்.போதனா வைத்தியசாலை இரண்டாம் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த காலத்தில் கடமையுணர்ச்சியுடன் சேவையாற்றிய வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் குறிப்பாக விடுதிப் பொறுப்பதிகாரி வைத்தியர் பேரானந்தராஜா மற்றும் ஊழியர்களுக்கும் அனைத்துக் கிரியைகளிலும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றியறிதலைத் தெரிவித்துகொள்கின்றோம். அத்துடன் இன்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வெட்டை,
ஏழாலை தெற்கு.

குடும்பத்தினர்.

(சி/019) (38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் சண்முகம்

## கதையோடு செய்தி

பக்கத்து வீட்டுப் பெடியன் ஒரு மாதிரித் திரிகின்றான். ஆள் முளைக்க முதல் அவன் நடவடிக்கைகள் சரியில்லாமல் இருக்குது பாருங்கோ.

இப்பத்தான் எட்டோ ஒன்பது படிக்கிறான். அவனுடைய தலை வெட்டும் சைக்கிள் ஓட்டமும் கண்டபடி இருக்கிறது.

அவனுடைய தகப்பனிடம் இதைப்பற்றிச் சொன்னபோது அவரும் காதில் போட்டபாடில்லை.

ஒருநாள் வீட்டு ஒழுங்கையூடாக நடந்து செல்லும் போது அவன் சைக்கிளால் ஒரு வெட்டு வெட்டிப்போட்டு போனான். அவ்வளவுதான். நான் தடுமாறி கீழே விழுந்தபோது முதுகில் கல் ஒன்று குத்தியது. அந்தக் கல்லுக் குத்திய நோவு இன்னும் மாறவேயில்லை.

இதை ஏன் சொல்லுறன் என்று பார்க்கிறியளா? இவன் படிக்கின்ற வலிகாமம் பாடசாலை ஒன்றில் சமைத்த உணவில் பல்லி விழுந்திருந்தும் அதனை எடுத்து வெளியே போட்டுவிட்டு மாணவர்களுக்கு சாப்பிடுவதற்கு கொடுத்ததை நினைத்தால் வயிறு பத்தி எரியுது.

என்ன செய்கிறார்கள் இவர்கள். பல்லி விசம் உணவில் கலந்திருந்தால் அந்த உணவைச் சாப்பிட்ட மாணவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று சொல்ல முடியாதுள்ளது.

அந்தப் பாடசாலை ஆசிரியர்கள் ஒரு குதர்க்கமாகத்தான் மாணவர்களுக்குப் பாடம் சொல்ல வெளிக்கிட்டிருக்கினம்.

உந்தப் பெடியன் திரியிற போக்கைப் பார்த்தால் கண்டிப்பாகச் சிறந்த ஆசிரியர்கள் உந்தப் பாடசாலையில் இருக்க வாய்ப்பில்லை என்று தெரிகிறது. யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் கூடுதலாகப் போஷாக்குக் குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

இப்படிப் போஷாக்குக் குறைந்த மாணவர்களுக்குப் பாடசாலை நேரங்களில் உணவை வழங்குவதற்கு உலக உணவு நிறுவனம் முன்வந்தது.

ஆனால் அந்தப் பாடசாலைச் சமூகம் சரிவர அதனைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் கொடுக்கின்றது என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மாணவர்களின் நண்பகல் உணவில் அக்கறை இல்லாமல் இருக்கும் அந்தப் பாடசாலை நிர்வாகம் எப்படி மாணவர்களுக்கு நல்ல கல்வியை வழங்கப்போகிறது. ஒரு மாணவனுக்கு 100 கிராம் அரிசி எந்த விதத்தில் அவனுடைய போஷாக்குக் குறைவைப் போக்கும் என்று தெரியவில்லை.

வசதிபடைத்த மாணவர்கள் பாடசாலை நண்பகல் உணவைச் சாப்பிடுவதில்லை. ஏனென்றால் பாடசாலை உணவில் சுத்தம் இருக்காது என்ற காரணத்தால் வீட்டிலிருந்து உணவைப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து அனுப்புகிறார்கள்.

இதற்கு என்ன காரணம் என்று ஆராய பாடசாலை சமூகமும் முன்வருவதில்லை.

வலிகாமம் பகுதியில் ஒரு பாடசாலை அதிபர் அந்தப் பாடசாலை மாணவர்களுக்கு வந்த அரிசி மூடையை வீட்டுக்கு எடுத்துச் சென்ற சம்பவம் ஒன்றும் நடந்துள்ளது.

ஓட்டோவைப் பிடித்து பட்டப் பகலில் அரிசி மூடையை ஏற்றிக்கொண்டு போகும்போது வழியில் ஒருவர் கேட்டிருக்கிறார் ''என்ன சேர் சாமானோடு போறியள்'' என்று.

அதற்கு அந்த அதிபர் ''ஒன்றுமில்லை அரிசி பழுதடைந்து விட்டது. கோழிக்கு போடுவதற்காக எடுத்துச் செல்லுகிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்.

சரி பழுதடைந்து இருந்தாலும், பழுதடைய முதல் அந்த மாணவர்களுக்கு ஒழுங்காக உணவைப் போதுமான அளவு கொடுத்திருந்தால் இந்த அரிசி மூடை மிஞ்சியிருக்குமோ.

இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடும் ஆசிரியர்கள், அதிபர்கள் இந்தச் சமூகத்தில் வளரும் மாணவர்களின் வளர்ச்சிக்கு எப்படி பங்களிப்புச் செய்யப்போகிறார்கள்.

சமூகத்தில் நல்ல பிரஜைகளாக வலம்வரும் மாணவர்களை தயார்படுத்துகிற பொறுப்பு ஆசிரியர்களிடமும் உள்ளது அல்லவோ.

உணவில் பல்லி விழுந்த நிலையில் மாணவர்களுக்கு அது வழங்கப்பட்டுள்ளது. உயிரையே பறிக்கும் இந்தச் சிறுசெயலைக் கண்டும் காணாமல் விட்டிருப்பது ஏன்?

மாணவர்களுக்கு கொடுக்கின்ற நண்பகல் உணவைச் சுத்தமாக வழங்க முடியாத இதே போன்ற பாடசாலைகள் எப்படி சிறந்த மாணவர்களை உருவாக்க முடியும்.

நான் சொல்லுகிறேன் என்று கோவியாதேங்கோ. என்னுடைய மகனும் இதே பாடசாலையில் தான் கல்வி கற்கிறான்.

சமூகத்தில் சிறந்த உதாரணமாக விளங்குவதற்குரிய ஆசிரியர், அதிபர்கள் திருந்த வேண்டும். அதை விட்டுவிட்டு தங்களுடைய விளையாட்டுகளை எல்லாம் பாடசாலைகளில் காட்டிக்கொண்டு இருந்தால் அப் பாடசாலை மாணவர்களும் இவர்களைப் பார்த்துப் பழகிப் போய் விடுவார்கள் எல்லோ.

அதிபர், ஆசிரியர்கள் விடுகிற விளையாட்டு, மாணவர்களைப் பாதிக்கிறது.

ஆரம்ப காலங்களில் குருவுக்கு மரியாதை இருந்தது. இன்றைய காலங்களில் அந்த மரியாதை காற்றில் பறக்கிறது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் படிப்பிப்பது மட்டுமன்றி மாணவர்களுடைய நடத்தையிலும் அக்கறை கொள்ளவேண்டும்.

இன்றைய காலங்களில் பொறுப்பில்லாத ஆசிரியர்கள், அதிபர்கள் இருக்கின்றபோது எப்படி மாணவர்கள் முன்னேறு வார்கள். இந்தச் சமூகம் எப்படி முன்னேறும்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 17

ஏழாலை தெற்கு கலவாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் 108 சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து விசேட பூஜை, சொற்பொழிவு, சுவாமி உலா வருதல், அன்னதானம் என்பன இடம்பெறும்.

(ற-313)

***

யாழ்ப்பாணம், மே 17

சங்கானை அரசால் சித்தி ஞானவைரவர் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகம் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிக்கு பொங்கல் நிகழ்வு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து இரவு 8 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

(ற-313)

***

யாழ்ப்பாணம், மே 17

இடைக்காடு கேவின்பதி மருதடியுறை விசாலாட்சி அம்பாள் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

(ற-11)

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் - மருதங்கேணி

முக்கிய அறிவித்தல்

கிளைகள் ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்டுதலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளலும்.

கடந்த கால போர் சூழலில் எமது சங்கம் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து இறுதியில் நடைபெற்ற உக்கிரமான போரின் போது சங்கங்களின் ஆவணங்கள், சொத்துக்கள் அனைத்தையும் இழந்த நிலையிலுள்ளது.

எமது சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குள் தற்போது பெருமளவு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே எதிர்காலத்தில் சங்கத்தின் பொதுச் சபையினையும் இயக்குநர் சபையினையும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்வதற்கான முன்னோடி நடவடிக்கைக்காக கிளைகள் ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களை திரட்ட வேண்டியுள்ளது மேலும் புதிய அங்கத்தவர்களையும் சேர்த்துக் கொள்ள முடி யும். அங்கத்தவர்கள் விவரங்களை திரட்டுவது தொடர்பில் ஏற் கனவே சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்தவர்கள் பின்வரும் விடயங்களை கவனத்திற் கொண்டு செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தாங்கள் சங்கத்தின் ஏதாவது கிளையொன்றில் ஏற்கனவே அங்கத்தவராக இணைந்திருப்பின் அதற்கு ஆதாரமாகப் பங்குப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது சேமப் புத்தகத்தில் பங்குப் பணம் செலுத்தியமைக்கான அல்லது ஆதாரப்படுத்தக் கூடிய சான்றளிக்கக்கூடிய விவரம் இருப்பின் அதனை சங்கத்தின் தலைவரிடம் அல்லது செயலாளரிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்திச் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

ஏற்கனவே அங்கத்தவராக இணைந்து ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாதவர்கள் ரூபா 100/= பங்குப் பணத்தைச் செலுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணபத்தைப் பூர்த்தி செய்து செயலாளரிடம் அதனைச் சமர்ப்பிப்பதுடன் தாங்கள் பழைய அங்கத்தவர் என்பதனை உறுதிப் படுத்தக்கூடிய சத்தியக் கடதாசி ஒன்றைத் தயாரித்து முறைப்படி பூரணப்படுத்தி விண்ணப்பப்படிவத்துடன் ஒப்படைக்கவும்.

(எதிர்காலத்தில் பழைய கணக்கு விவரம் கிடைக்கும் பட்சத்தில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குப்பணம் தற்போது செலுத்தப்படும் பங்குப் பணத்துடன் சேர்த்துக் கணிப்பிடப்படும்)

*ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/=

*புதிய அங்கத்தவர்கள் வழமையான நடைமுறைக்கமைய ரூபா 100/= பங்குப் பணத்தைச் செலுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி சங்கத்தின் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

ந.திருலிங்கநாதன்
தலைவர்

பொ.ஸ்ரீராமச்சந்திரன்
செயலாளர்.

(40)(சி/043)

# மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை

நவாலி, மே 17

மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எல்கோ மல்கம்பேத் தலைமையில் ஆரம்பமாகியது.

இந்த நடமாடும் சேவையில் மோட்டார் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.குணசிங்க, பொலிஸ் அதிகாரிகள், வடக்கு வலய உதவிப் பதிவாளர் மகாராணி இராசரத்தினம், காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் பரஞ்சோதி பிரபாகரன் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சேவையில் பிறப்பு, இறப்புப் பதிவுகள், காணாமல் போனவர்கள் பற்றிய பதிவுகள், தேசிய அடையாள அட்டை, திருமணப் பதிவு, கண் பரிசோதனை செய்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் என்பனவும் இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்துப் பிரிவுபொறுப்பதிகாரியினால் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

(ம-100)

வெளிவாரிப் பட்டப் படிப்புகள் மற்றும் பரீட்சைகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு
Bachelor of Business Management - (Online) Degree Programme
புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

மேற்படி இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21.05.2011 (சனிக்கிழமை) மற்றும் 22.05.2011 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் பீடாதிபதி அலுவலகம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடத்தில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும்.

இந்தக் கற்கைநெறிக்கான தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான, நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கான கடிதத்தில் குறிப்பிட்ட ஆவணங்களுடன் குறிப்பிட்ட நேரத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு: 021 222 3612, 021 222 3610, 021 222 1106 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
13.05.2011

(சு/045)(39)

மஹஜன சம்பத
அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2394
திகதி 15.05.2011

வெற்றி எழுத்து: U
வெற்றி எண்கள்: 7 3 3 0 8 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 7 | 3 | 3 | 0 | 8 | 2 | ரூபா. 10,002,704/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 7 | 3 | 3 | 0 | 8 | 2 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 3 | 3 | 0 | 8 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 3 | 0 | 8 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 82 |
| 4ம் பரிசுகள் | | | | | 0 | 8 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 804 |
| 5ம் பரிசுகள் | | | | | | 8 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் | 8039 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் | 79804 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 7 | 3 | 3 | 0 | 8 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 08 |
| 8ம் பரிசுகள் | | 7 | 3 | 3 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 82 |
| 9ம் பரிசுகள் | | 7 | 3 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 813 |
| 10ம் பரிசுகள் | | 7 | 3 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 7970 |
| 11ம் பரிசுகள் | U | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 32011 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,337,507.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 8,106,000.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631
முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடன் விவகாரம்; பாக்.நாடாளுமன்றில் சர்ச்சை

இஸ்லாமாபாத், மே 17

''நீங்களும் உங்கள் கட்சியும், என் மீது எதற்காக தொடர்ந்து வசைமாரி பொழிகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் செய்யும் காரியங்களின் விளைவுகள் உங்களுக்குத் தெரியுமா?'' என பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ., தலைவர் பாஷா, எதிர்க்கட்சித் தலைவர் மீது சாடியுள்ளார்.

கடந்த வாரம் கூடிய பாகிஸ்தான் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் ஷெரீப் கட்சியின் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரான சவுத்ரி நிசார் அலி கான், பின்லேடன் பற்றிய தகவல்களைச் சேகரிக்காமல் கோட்டை விட்டு விட்டதாக ஐ.எஸ்.ஐ., தலைவர் அகமது சுஜா பாஷாவைக் கடுமையாகச் சாடினார்.

இதன்பின், இரு நாள்களுக்கு முன் கூட்டத்தொடரின் ஒரு பகுதியாக, ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்து பாஷா விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரிடம் சில கேள்விகளைக் கேட்பதற்காக, அலி கான் எழுந்தார். அவ்வளவு தான்... பாஷாவுக்கு கடும் கோபம் வந்தது. தொடர்ந்து பலர் முன்னிலையில் பல்வேறு கேள்விக் கணைகளால் அலி கானை துளைத்து எடுத்து விட்டார்.

என்னிடம் ஒரு காரியம் ஆக வேண்டி நீங்கள் வந்த போது, அதற்கு இசைய நான் மறுத்து விட்டேன். அதனால்தான் நாடாளுமன்றில் என் மீது பழி தூற்றுகிறீர்கள். இதன் விளைவுகளை நீங்கள் அறிவீர்களா? அமெரிக்காவுக்கு நான் சென்றிருந்த போது சி.ஐ.ஏ. இயக்குநர் லியோன் பனெட்டா என்னிடம் ''உங்களை நம்ப முடியாது என்று உங்கள்நாட்டு எதிர்க்கட்சித் தலைவரே கூறுகிறார். அப்புறம் நாங்கள் எப்படி உங்களை நம்புவது?'' என்று என்னிடம் கேட்டார். நான் எந்த முகத்துடன் அவருக்கு பதில் சொல்வேன்? என்று பாஷா பொரிந்துதள்ளிவிட்டார். அவரது ஆவேசத்தைக் கண்ட அலிகான், அப்படியே உட்கார்ந்து விட்டார். இத்த கவலை, பாகிஸ்தா னில் இருந்து வெளிவரும், ''தி எக்ஸ்பிரஸ் ட்ரிபியூன்'' வெளியிட்டுள்ளது.



எகிப்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கட்டார் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷேக் ஹமத் பின் ஜசீம் அல்தானி (இடது) தலைநகர் கெய்ரோவில் வெளியுறவுத்துறை அமைச்சர் றில் அல் அராபியைச் சந்தித்தார்.


## தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பதிவு இல. ஜே/1591 - 06.03.1972

## பதவி வெற்றிடம்

1.
1. பதவி : காசாளர்
2. சம்பளக் குறியீட்டு இலக்கம் : 306/13
3. சம்பள அளவுத் திட்டம் : 9950 - 85 X 10 - 90 X 10 - 1170
4. தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 14 வது சம்பளத் திட்டப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணம்) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர் அல்லது வியாபார நடவடிக்கைகள் பற்றி இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

5. வயது : 18 - 45

2.
1. பதவி : அலுவல்கள் அலுவலக உதவியாளர்
2. சம்பளக் குறியீட்டு இலக்கம்: 317/16
3. சம்பள அளவுத் திட்டம் : 9200 - 70 X 10 - 80 X 10 - 10650
4. தகைமைகள்

8ஆம் வகுப்பு சித்தி

5. வயது : 18 - 45

3.
1. பதவி : தட்டெழுத்தாளர்
2. சம்பளக் குறியீட்டு இலக்கம்: 305/16
3. சம்பள அளவுத் திட்டம் : 9200 - 70 X 10 - 75 X 10 - 10650
4. தகைமைகள்

க.பொ.த. (சாதாரணதரம்) தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும் சிங்களம் அல்லது தமிழ் தட்டெழுத்து வேகம் நிமிடத்துக்கு 18 சொற்களுடன் ஆங்கிலத் தட்டெழுத்து வேகம் நிமிடத்துக்கு 20 சொற்கள்.

5. வயது : 18 - 45

* கணினி அறிவு அவசியமானது.
* சங்கம் கோரும் பிணையை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.
* கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்கப் பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
* சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* விண்ணப்பப்படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், தொழில் தகைமைச் சான்றிதழ் என்வற்றின் போட்டோப் பிரதி இணைத்திருத்தல்
* வேண்டும். இவ்வாறு இணைக்காத விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் ''பொது முகாமையாளர், தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து), புகையிரத நிலைய வீதி, மல்லாகம்'' என்ற முகவரிக்கு 25.05.2011 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

* கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பதவிக்கானது என எழுதப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் தகுதியில்லாத விண்ணப்பம் என நிராகரிக்கப்படும்.

*16.05.2011*
*புகையிரத நிலைய வீதி,*
*மல்லாகம்.*

பொதுமுகாமையாளர்.

(சி/041)


# அமெரிக்காவுக்கு எதிராகப் போராட்டங்கள்; பாகிஸ்தான் மதவாத அமைப்புகள் கூட்டு

லாகூர், மே 17

ஒசாமாவை சுட்டுக் கொன்ற அமெரிக்காவை எதிர்த்துப் போராடும் வகையில் பாகிஸ்தானில் உள்ள சில மதவாத அமைப்புகள் ஒன்று சேர்ந்து புதிய கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்க அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட ரகசியத் தாக்குதலில் பாகிஸ்தானில் தங்கியிருந்த ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டில் உள்ள பல்வேறு மதவாத அமைப்புகளும் போராட்டங்கள் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் அங்குள்ள சில மதவாத அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து அமெரிக்காவை எதிர்க்கும் நோக்கில் புதிய கூட்டணி ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. ''டெபா-இ-பாகிஸ்தான்'' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புதிய கூட்டமைப்பு அமெரிக்காவை எதிர்க்கும் போராட்டங்களை நாடு முழுவதும் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ஜமாத்-உல்-தவா தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த கூட்டமைப்பில் ஜமாத்-இ-இஸ்லாம், ஜாமியாத் உலேமா-இ-இஸ்லாம் அமைப்பின் இரு பிரிவுகள், ஜாமியாத் உலேமா-இ-பாகிஸ்தான் அமைப்பின் ஒரு பிரிவு, மஜ்லிஸ் அஹ்ரர், மர்காஷி ஜாமியாத் அல்-இ-ஹதித், தன்ஷீம்-இ-இஸ்லாமி மற்றும் சர்வதேச காதிம்-இ-நபுவாத் ஆகியவை உறுப்பினர்களாக இடம்பெறுகின்றன.

அமெரிக்காவுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் தங்களுடன் இணைந்து செயல்படுமாறு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பி.எம்.எல்.என் மற்றும் முன்னாள் கிரிக்கட் வீரர் இம்ரான் கானின் பாகிஸ்தான் டெஹ்ரீக்-இ-இன்சாப் ஆகிய கட்சிகளுக்கும் இப்புதிய கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டில் அமெரிக்க இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்ட போது தலிபான்களை ஆதரித்து இதே மதவாத அமைப்புகள் ''டெபா-இ-பாக்-ஆப்கன்'' எனும் கூட்டமைப்பை ஏற்படுத்தின.

அதன்பின் 2002ஆம் ஆண்டில் அமெரிக்க ராணுவத்தின் முன்னிலையில் ஆப்கானிஸ்தானில் நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பலுசிஸ்தான் மற்றும் கைபர்-பக்துன்க்வா ஆகிய இரண்டு எல்லை மாநிலங்களில் ஆட்சியை படித்ததும் குறிப்படத்தக்கது.

# ஓசாமாவின் உடலை எடுத்துச் சென்ற கப்பலை பார்வையிடுவதற்குப் பொதுமக்களுக்கு அனுமதி

மணிலா, மே 17

ஒசாமா பின்லேடனின் உடலை கடலில் அடக்கம் செய்ய எடுத்துச் சென்ற கார்ல் வின்சன் என்ற போர்க்கப்பலை பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த பின்லேடனை அமெரிக்கக் கெமாண்டோ வீரர்கள் சுட்டுக் கொன்று அவரது உடலை ஹெலிகொப்டரில் ஆப்கானிஸ்தானுக்கு கொண்டு சென்றனர்.

அங்கிருந்து பின்லேடனின் உடல் கார்ல் வின்சன் போர்க் கப்பல் மூலமே கடலுக்குள் அடக்கம் செய்ய எடுத்துச் செல்லப்பட்டது. இதனால் இந்தப் போர்க்கப்பலை பார்ப்பதற்குப் பொதுமக்கள் ஆர்வமாக உள்ளனர்.

இதைப் புரிந்து கொண்ட அமெரிக்கா கப்பலைப் பார்க்க அனுமதி அளித்துள்ளது. கார்ல் வின்சன் கப்பல் இப்போது பிலிப்பைன்ஸின் மணிலா துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் மூன்றாவது பெனிங்கோ அகியூனோ, அவரது அமைச்சரவைச் சகாக்கள், முக்கிய ராணுவ அதிகாரிகள் ஆகியோர் கார்ல் வின்சன் கப்பலை சனிக்கிழமை பார்வையிட்டனர். இதைத் தொடர்ந்து சில பத்திரிகையாளர்களும் சென்று பார்வையிட்டனர்.

கப்பலைப் பார்வையிட வருபவர்கள் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்து கப்பலுக்குள் விரிவாக ஏதும் விவாதிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பார்வையாளர்கள் கார்ல் வின்சன் கப்பலை அமைதியாகப் பார்த்து விட்டு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.


## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 07 . 1940



உதிர்வு 17 . 05 . 2000

**அமரர் சபாபதி திருநாவுக்கரசு**

(முன்னாள் அதிபர், யா/கலட்டி அ.மி.த.க. பாடசாலை, யா/நல்லூர் சாதனா பாடசாலை)

நற்பண்புகள் நிறைந்த - என்றும்
ஆடம்பர வாழ்வில்லாது - எப்போதும்
ராஜாவாகத் திகழ்ந்த - எங்கள்
சாயாத கோபுரம் சாய்ந்ததேனோ?

*இல. 1/5, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மனைவி, மகள்,
மருமகன், பேரன்மார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடனான உறவைத் துண்டிக்குமாறு அமெரிக்காவில் பல தரப்பிலும் கோரிக்கை

வாஷிங்டன், மே 17

பாகிஸ்தான் அரசுடன் இனியும் சுமுகமான உறவைத் தொடர்வதா, வேண்டாமா என்பது பற்றி அமெரிக்க ஆட்சியாளர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

பல அமெரிக்க அதிகாரிகள் பாகிஸ்தானுடனான உறவை அமெரிக்கா துண்டித்துக் கொள்ள வேண்டும் என்றே ஆலோசனை கூறி வருகின்றனர்.

இதுதொடர்பாக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் வாஷிங்டன் போஸ்ட் நாளிதழில் கூறப்பட்டுள்ளதாவது:

அல்குவைதாத் தலைவர் ஒசாமா பின்லேடன் எங்கள் நாட்டில் இல்லை எனப் பாகிஸ்தான் அரசு தரப்பில் கூறப்பட்டது. இந்நிலையில் அங்குள்ள அபோதாபாத் மறைவிடத்தில் பதுங்கியிருந்த ஒசாமா அமெரிக்க ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒரு சர்வதேச பயங்கரவாதிக்கு அடைக்கலம் கொடுத்த பாகிஸ்தான் அரசுடன் உள்ள அனைத்து விதமான உறவுகளையும் துண்டித்துக் கொள்ள வேண்டும் என அமெரிக்க ஆட்சியாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது. இதுதொடர்பாக ஒபாமா நிர்வாகம் சரியான முடிவெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் முறையாக ஒத்துழைக்காத பட்சத்தில் அந்த நாட்டுடனான தொழில் தொடர்புகள் துண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

இதற்கிடையில் ஐ.எஸ்.ஐ மற்றும் தலிபான் இடையிலான உறவுகள் குறித்த ஆதாரங்கள் தன் கையில் இருப்பதாகக் கூறி வரும் அமெரிக்க அதிகாரிகள், ஐ.எஸ்.ஐ மற்றும் பாகிஸ்தான் ராணுவத்தின் உயரதிகாரிகளுக்கும் தலிபான்களுக்கும் இடையில் தொடர்பு இருந்ததற்கான ஆதாரங்கள் தங்களிடம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்- என்றுள்ளது.

# அணு மின் நிலையம் மூடப்பட்டதற்கு ஜப்பான் பிரதமருக்கு பெரும் ஆதரவு

டோக்கியோ, மே 17

ஜப்பானின் ஹமவோக்கா அணுமின் நிலையத்தை இழுத்து மூட உத்தரவிட்ட அந்நாட்டுப் பிரதமர் நவோட்டோ கானுக்கு மக்கள் பெருமளவில் ஆதரவு அளித்துள்ளனர்.

ஜப்பானில் கடந்த மார்ச் 11ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி, நில நடுக்கத்தை அடுத்து புகுஷிமா டச்சி அணுமின் நிலையம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதையடுத்து எதிர்கால அணுமின் நிலையத் திட்டங்களை அந்நாட்டு அரசு கைவிட்டது.

தலைநகர் டோக்கி யோவில் இருந்து 200 கி.மீ தென்மேற்கில் அமைந்துள்ள ஹம வோக்கா அணுமின் நிலையத்தை பாதுகாப்பு கருதி இழுத்து மூடும் படி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதமர் நவோட்டோ கான் உத்தர விட்டார்.

தற்போது செயற்பட்டு வந்த 4 மற்றும் 5ஆம் உலை களில் 13ஆம் திகதி 4ஆம் உலை நிறுத்தப்பட்டது. தொடர்ந்து 5வது உலையையும் பாதுகாப்பு கருதி இழுத்து மூடும்படி பிரதமர் உத்தரவிட் டார். இதையடுத்து நேற்று முன்தினம் அந்த உலை மூடப்பட்டது.

பிரதமரின் இந்த உத்தரவு குறித்து நாட்டில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 66.2 சதவீதம் பேர் பிரதமருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 47 சதவீதம் பேர் நாடு முழுவதும் உள்ள அணுமின் உலைகளின் எண்ணிக்கையை குறைக்கும் ஆலோசனையை வரவேற்றுள்ளனர்.

# பேர்லின் நகரில் நடத்த முயன்ற நாஜி ஆதரவுப் பேரணி

பேர்லின், மே 17

ஜேர்மனியின் கிரஸ்பர்க் மாவட்டம் பெர்லின் நகரில் சனிக்கிழமை நாஜி ஆதரவாளர்கள் பேரணியை நடத்த முயன்றனர். அதன்போது நடந்த தாக்குதல்களில் ஏராளமானோர் காயம் அடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

மேற்கு கிரஸ்பர் சுகில் உள்ள மெகிரிஸ்டம் யு பன் ரயில் நிலையத்தில் 110 நாஜி ஆதரவாளர்கள் ஊர்வலத்துக்காக திரண்டனர்.

இந்த மாவட்டத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் துருக்கி வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். நாஜிப்படை ஆதரவாளர்கள் உண்மை தெரிந்தால் நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள் என்ற எழுத்துப் பலகைகளுடன் வந்தனர்.

இந்தநாஜி ஆதரவு பேரணியை தடுக்க 350 பேர் திரண்டு வந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர். இந்த நாஜி ஊர்வலத்தை நேரில் பார்வையிட்ட நபர் கூறியதாவது: 150 நாஜி ஆதரவு நபர்களின் ஊர்வலத்தை தடுக்க 3 முறை முயற்சி நடந்தது.

நாஜி ஆதரவாளர்கள் பேரணியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல் அவர்களை பாதுகாக்க வேண்டிய நிலையும் பொலிஸாருக்கு ஏற்பட்டது. நாஜி ஆதரவாளர்களுக்கு எதிர்ப்பாளர்களுக்கும் இடையே கடுமையான மோதல்கள் ஏற்பட்டன.

அப்போது வெடிகள் அலறவைக்கும் வகையில் வெடித்தன. 7 பொலிஸ் அதிகாரிகள் உள்பட பலர் காயம் அடைந்தனர். நாஜி ஆதரவாளர்கள் ஊர்வலத்தை தொடர முடியாமல் யு பன் ரயில் நிலையத்துக்கு திரும்பினர். அங்கு அவர்களை பயணிகள் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

ஓர் அமைப்பு மூலமாக நாஜி ஆதரவு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என ஒரு பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கூறினார். கிரஸ்பர்க் கரீன் கட்சி பரடெரிக் ஷய்ன் கூறுகையில், நாஜி எதிர்ப்பாளர்களால் குறிப்பிட்ட ஊர்வலம் வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டது என்றார்.

பார்வையிடல்...



வடகொரியாவின் வடபகுதியில் உள்ள பியாங்கனில் மீன் பண்ணைக்கு வந்த வடகொரியா அதிபர் இரண்டாம் கிம்ஜாங் பண்ணையைப் பார்வையிடுகிறார்.

# சிங்கப்பூர் லீ அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார்

சிங்கப்பூர் நாட்டின் தந்தை என அழைக்கப்படும் லீ குவான் யூ, அமைச்சர் பதவியை ராஜினாமா செய்வதாகவும், அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதாகவும் அறிவித்துள்ளார். சிங்கப்பூரின் முதல் பிரதமராக இருந்த லீ குவான் யூ, தற்போது அமைச்சர் பதவியை வகித்து வந்தார். கடந்த 7ஆம் திகதி நடந்த தேர்தலில், ஆளும் மக்கள் கட்சி அமோக வெற்றி பெற்றாலும், கடந்த தேர்தலை விட இந்த தேர்தலில் அக்கட்சிக்கு ஓட்டு சதவீதம் குறைந்தது. இதை காரணம் காட்டி லீ குவான் யூ, தற்போதைய அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாகவும், 87 வயதாகி விட்டதால் இனி இளைஞரான தனது மகன் லீ ஹிசின் லூங்ன், தனக்கு பதில் அரசியல் பொறுப்புகளை கவனிப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

லீ குவான் யூ மகன் லூங்ன் தற்போது சிங்கப்பூர் பிரதமராக உள்ளார். லீ குவானின் ராஜினாமாவை ஏற்பதா, வேண்டாமா என்பது குறித்து 17ஆம் தேதி முடிவு செய்யப்படும் என முன்னாள் பிரதமரும், கட்சியின் முக்கிய பிரமுகருமான கோ சோக் டாங் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் படையினர் சூடு; 12 பேர் உயிரிழப்பு

பாலஸ்தீன எல்லைப் பகுதியில் சில குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டக்காரர்கள் மீது இஸ்ரேலியப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.

துப்பாக்கி தாக்குதலில் 12 பேர் இறந்தனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த வன்முறை குறித்து இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெடன்யகு கூறுகையில், 'நமது எல்லைப் பகுதியையும் இறையாண்மையையும் பாதுகாக்க வேண்டிய உறுதியில் உள்ளோம். அமைதி விரைவில் திரும்பும்" என்றார்.

இந்த நிலையில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் இஸ்ரேலிய தூதரகத்திற்கு முன்பாக நடந்த எதிர்ப்புப் போராட்டக் கும்பலை கலைக்க பாதுகாப்புப் படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினார்கள்.

கண்ணீர் புகைக்குண்டுகளையும் வீசினர். அனைத்து தரப்பனருக்கும் பொறுப்பு இருப்பதால் பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் நாடுகள் அமைதி காக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கி மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோல்டன் ஹை பகுதியை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலிய படையினர் மீது பாலஸ்தீன போராட்டக்காரர்கள் கற்களை வீசி எதிர்ப்புத் தெரிவித்தனர். மஜ்தால் ஷாம்ஸ் என்ற கிராமத்தின் அருகே போராட்டக்காரர்கள் வேலியை கடந்து செல்ல முயன்றனர்.

கடந்த 1967ஆம் ஆண்டு நடந்த 6 நாள் போரின் போது சிரியாவின் எல்லைப் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றித் தொண்டது. இஸ்ரேலின் அந்த நிலை கண்டித்து தற்போதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

# அல்குவைதாவின் மிரட்டலை அடுத்து அமெரிக்கா முழுவதும் பாதுகாப்பு தீவிரம்

## சிக்காகோ நகரில் வீதி வீதியாக பொலிஸ் ரோந்து

சிக்காகோ, மே 17

பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பழிக்கு பழி வாங்க விரைவில் தாக்குதல் நடத்தப் போவதாக அல்குவைதா தீவிரவாத இயக்கம் மிரட்டல் விடுத்தது.

இதற்கிடையே பின்லேடன் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட சி.டிக்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் அமெரிக்கா மீது மீண்டும் ஒரு பெரிய தாக்குதலுக்கு அல்குவைதா திட்டமிட்டிருப்பது தெரிய வந்தது.

இரட்டைக் கோபுரம் தாக்குதலின் பத்தாம் ஆண்டு நினைவு நாளான செப்ரெம்பர் 11ந் திகதி அமெரிக்க ரயில்களில் பெரிய தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பின்லேடன் கொல்லப்பட்டாலும், கூட, அவரது ஆதரவாளர்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என்று அமெரிக்கா கருதுகிறது.

மேலும் சிக்காகோ நகரில் இதுவரை இல்லாத அளவுக்கு தாக்குதல் ஒன்றை நடத்த அல்குவைதா வியூகம் வகுத்திருப்பது உளவுத்துறை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை தலிபான் தீவிரவாதிகள் எந்த நேரத்திலும் நடத்தலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் அச்சுறுத்தல் காரணமாக அமெரிக்க மக்களிடம் குறிப்பாக சிக்காகோ நகர மக்களிடம் பீதி ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் அனைத்து பகுதிகளிலும் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய நகரங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த முயற்சி செய்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ராணுவம் அறிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க உள்ளூர் பொலிஸாருக்கு கூடுதல் நவீன கருவிகள் வழங்க கப்பட்டுள்ளன. சிக்காகோ நகரில் அதிகப்படியாக எல்லா தெருக்களிலும் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கா கோலாவின் 125 வருட கால சேவை




1886 ஆம் ஆண்டு முதலாவது கொக்கா கோலா பருகி மகிழ்ந்த நாள். அன்றிலிருந்து இன்றுவரையான 125 வருடங்கள் கழிந்து விட்டன. அன்று முதல் கலாசார நிகழ்வுகள் மற்றும் நேரடியான ஒருங்கிணைப்புகள் மூலம் உலகம் முழுவதிலும் புத்துணர்ச்சியை உருவாக்குவதற்கு பங்களித்த அனைவருக்கும் கொக்கா கோலா நிறுவனம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

''எங்களுடைய உற்பத்திகளை விரும்பும் இந்த மக்கள் இல்லாவிடில் நாம் இந்த மைல் கல்லை எட்டியிருக்க முடியாது. ஏனெனில், கடந்த 125 வருடங்களில் கொக்கா கோலாவை பருகி மகிழ்ந்த அனைவரும் உலகம் புத்துணர்ச்சி பெறுவதற்கு உதவி புரிந்தவர்களாக உள்ளனர்.'' என கொக்கா கோலா நிறுவனத்தின் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான எம்.கென்ட் தெரிவித்தார்.

''இந்த நாமம் இன்று இந்த நிலையை அடைவதற்குக் காரணமாய் இருந்த உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு நன்றி தெரிவித்து இந்த வருடம் முழுவதும் இதனைக் கொண்டாட நாம் விரும்புகின்றோம். எங்களுடைய வாடிக்கையாளர்கள், பங்காளர்கள் மற்றும் கொக்கா கோலாவை விரும்பும் அனைவருக்கும் எங்களுடைய நன்றிகள்.'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தக் கொண்டாட்டத்தின் ஒரு கட்டமாக வார இறுதியில், கொக்கா கோலா எப்போதும் பயன்படுத்தும் இசை, கலை மற்றும் பொழுதுபோக்கு என்ற வகையில் மக்களை ஒன்றிணைத்து மகிழ்ச்சியை உருவாக்குவதற்கும், மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

மே மாதம் 7 ஆம் திகதி, அட்லாண்டாவில் பெம்பர்டன் பிளேஸில் விசேட திருவிழா ஒன்றைத் தமது ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்குமாக கொக்கா கோலா நிறுவனம் நடத்தியது. இங்கு இவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனர்த்த நிவாரண உடையணிந்து அணி திரண்டு, பல்வேறுபட்ட கலை நடவடிக்கைகளிலும் பங்குபற்றினர்.



மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் 18 இளைஞர் சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்திருந்த நவரத்தினம் சர்மிளாவுக்குத் திருமணப் பரிசாகத் தங்க நாணயமொன்றை வங்கிக் கிளையின் முகாமையாளர் க.இலட்சுமணசர்மா வங்கியில் வைத்து வழங்குகிறார். (த-100)

## சுகாதாரமான, ஆரோக்கியமான இலங்கையை கட்டியெழுப்ப டெட்டோல் முன்னெடுக்கும் திட்டம்

ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் சர்வதேசப் புகழ்பெற்ற தயாரிப்பான டெட்டோல் இலங்கையில் அறிமுகமாகி 50 வருடங்கள் பூர்த்தியை அண்மையில் கொண்டாடியிருந்தது. நாடு முழுவதும் சுகாதார அமைச்சுடன் இணைந்து நோய்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு களை டெட்டோல் முன்னெடுத்து வருகிறது.

இந்த 50 ஆண்டுகள் பூர்த்தி செயற்பாடுகள் குறித்து ரெக்கீட் பென்கீசர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராகுல்முர்காய் கருத்துத் தெரிவிக்கையில், ''எம் அனைவருக்கும் சுகாதாரம் என்பது மிகவும் பிரதான மானது. டெட்டோல் நாளாந்தம் பாடசாலை மாணவர்களையும், அன்னையர்களையும் இலக்காகக் கொண்டு சுகாதாரத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கங்களை வழங்கி வருகிறது.

அத்துடன் வைத்திய சாலை புனர்நிர்மாணப் பணிகளுக்கும், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் செயற்றிட்டங்களிலும் நாம் பங்கெடுத்துள்ளோம்.

இந்த வருடம் டெட்டோல் 'சுகாதாரத்துக்கான குறிக்கோள்' எனும் திட்டத்தை முன்னெடுக்க நாம் தயாராகவுள்ளோம். இதன் மூலம் சுகாதாரமானதும் ஆரோக்கியமானதுமான இலங்கையைக் கட்டியெழுப்ப எம்மால் முடியுமென எதிர்பார்க்கின்றோம். இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்ள அனைத்து இலங்கையர்களையும் அழைக்கின்றோம்.

இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கம் மக்களுக்கு அறிவு, விழிப்புணர்வு மற்றும் உதவிகளை வழங்கி அவர்களை சுகாதாரமானதும், ஆரோக்கிய மானதுமான இலங்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் பங்களிப்புச்செய்ய தூண்ட முடியும்.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடம் இருந்தும் டெட்டோல் தயாரிப்புகளுக்குச் சிறந்த அங்கீகாரம் கிடைத்துள்ளதும் இலங்கையர்களுக்கு சர்வதேச தரம்மிக்க தயாரிப்புகளை வழங்குவதில் டெட்டோல் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும்'' - என்றார்.




யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் 2 ஆவது பொதுக்கூட்ட நிகழ்வு வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் நடைபெற்றது.

ஓய்வூதியர்கள் மேலதிக வருமானத்தை ஈட்டும் பொருட்டும் பங்குச்சந்தை வியாபாரத்தில் ஈடுபடுவது சிறந்தது என அபிப்பிராயப்பட்டதால் அதுபற்றி அறிவூட்டல் உரையை யூரோவில் நிறுவனத்தில் செயற்படும் பாட்லீட் பங்குச்சந்தை வியாபார நிபுணரான என்.ஸ்ரீ சேதுபரன் நிகழ்த்துகின்றார். சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் படத்தில் உள்ளனர்.

## இலங்கைக் கடற்படையின் றக்பி கெப்பிட்டல் அலையன்ஸ் அனுசரணை

கெப்பிட்டல் அலையன்ஸ் தொடர்ந்து 2ஆவது வருடமாக இலங்கை கடற்படை றக்பி அணிக்கு தனது அனுசரணையை வழங்கு கிறது.

கெப்பிட்டல் அலையன்ஸ் நிறுவனம் அண்மையில் இலங்கை கடற்படை றக்பி அணிக்கு அனுசரணைக்கான காசோலையை வழங்குவதற்காக ஒழுங்கு செய்யப் பட்டிருந்த வைபவத்தில் அந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் நிர் வாக பணிப்பாளரான அஜித் பெர்னாண்டோ உரையாற்றும்பொழுது: 'இரண்டாவது வருடமாகவும் கடற்படை றக்பி அணிக்கு அனுசரணை வழங்குவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இரண்டு வருடகாலத்தில் இந்த அணி அதிகளவில் வளர்ச்சியடைந்ததையும் இந்த வருடம் அதன் செயன் முறை கள் திருப்திகரமாக இருந்ததையும் நாம் அவதானித்தோம்'' என்றார்.

விளையாட்டுத் துறையில் பிரகாசிக்கும் இலங்கை கடற்படை றக்பி அணியில் நாமல், யோஹித்த மற்றும் யோஹித்த ராஜபக்ஷ போன்ற திறமை மிகு விளையாட்டு வீரர்களுடன், 2011 ஆம் ஆண்டில் ஐந்து ஆசிய நாடுகள் கலந்து கொள்ளும் றக்பி விளையாட் டுப் போட்டி யில் கலந்து கொள்ள விருக்கும் சத்யா ரணதுங்க, சூல சுசந்த, நுவான் ஹெட்டியாரச்சி, எரங்க சுவர்ண திலக்க மற்றும் தனுஷ்க பெரேரா ஆகிய ஐந்து பேரடங்கிய அணிவீரர்களும் இருப்பதையிட்டு இந்த அணி பெருமை கொள்கிறது. (த)

# லிங் சமஹனின் வெற்றிக்கு தரம் பேணல் முக்கிய காரணம்

சுவாசத் தொகுதியில் வைரஸ் தாக்கத்தினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் ஒவ்வாமை தொடர்பான பிரச்சினைகளுக்கும் சிறந்த தீர்வாக இலங்கை மக்கள் பெரும்பாலான வர்களினால் நாடப்படும் லிங் சமஹன் மிகவும் குறுகிய காலத்தில் பெரும் சாதனை படைத்துள்ளது என்றே கூற வேண்டும். இந்தத் தயாரிப்பு பாதுகாப்பையும், செயலாற்றலையும் கொண்டது. அத்துடன் இந்தத் தரத்தைப் பேணுவதில் கம்பனி உறுதியாகச் செயற்படுகின்றது. இத்தகைய முக்கியமான காரணிகளே சமஹனின் வெற்றிக்கு அடிப் படையாக அமைந்தன. இவ் வாறு நிரூபிக்கப்பட்ட நோய்த் தடுப்பு அனுகூலங்களுக்குக் காரணமான நோய் எதிர்ப்பு குணாம்சங்கள் தொடர்பாகப் புதிய ஆராய்ச்சி மேற்கொள்ளப் படுகின்றது.

எந்தவொரு மருந்து நிவாரணிக்கும் அடிப்படையாக அமைவது அதன் பாதுகாப்பு, செயலாற்றல் மற்றும் தரம் ஆகியவையே. லிங் சமஹன் 14 வகையான மூலிகைகளால் தயா ரிக்கப் படுவதால் அதன் பாதுகாப்பும், செயலாற்றலும் உறுதிப்படுத் தப்படுகின்றது. இந்த மூலிகைகள் அனைத்தும் பல நூற் றாண்டுகளாக ... மேற்கொண்டுள்ள ... நவீன ஆராய்ச்சிகளின் மூலமும் இது உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருத்து வர்கள், ஆராய்ச்சி விஞ்ஞானிகள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் உள்ளடங்கும் நிபுணர் குழுவின் மேற்பார்வையின் கீழ் லிங் சமஹனில் உள்ளடங்கும் மூலிகைகள் தயாரிக்கப்படுகின்றன.



இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்கா, லத்வியா மற்றும் உக்ரேன் உள்ளிட்ட 30 இற்கு மேற்பட்ட நாடுகளில் லிங் சமஹன் தாராளமாகக் கிடைக்கின்றது.

நோயைத் தடுக்கின்றதும், குணமாக்கக் கூடியதுமான லிங் சமஹனில் உள்ளடங்கியுள்ள நோய் எதிர்ப்பு அம்சங்கள் தொடர்பில் ஆய்வுகூட ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன. தடிமன், காய்ச்சல் போன்ற குணங்குறிகளை இலகுவில் குணமாக்குவது மட்டுமன்றி லிங் சமஹனைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துபவர்கள் தாம் தடிமன், காய்ச்சல் போன்றவற்றின் பாதிப்புகளில் இருந்து குறிப்பாக நிவாசம் எனப்படும் தீவிர நுரையீரல் பிரச்சினையில் இருந்து நிவாரணம்' பெற்றுள்ளனர் எனக் கூறுகின்றனர். தடிமன், தொண்டைக் கரப்பான், பீனிசம், காய்ச்சல் போன்ற நுரையீரலுடன் தொடர்புடைய மற்றும் ஒவ்வாமையுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு இன்று நம்பகமான உடனடித் தீர்வாக முழுதும் இயற்கையான லிங் சமஹன் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சராக நேற்று பதவியேற்றார் ஜெ.

சென்னை, மே 17

தமிழகத்தின் முதல்வராக அ.தி.மு.க., பொதுச்செயலர் ஜெயலலிதா 3 வது முறையாக நேற்று பதவி யேற்றார். சென்னை பல்கலைக் கழக, நூற்றாண்டு அரங்கில் நடந்த பதவியேற்பு விழாவில் , தே.மு.தி.க., தலைவரும், எதிர் கட்சி தலைவருமான விஜய காந்த், குஜராத் முதல்வர் நரேந்திரமோடி, ஆந்திர மாநில முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு (தெலுங்குதேசம்) , இடதுசாரி தலைவர்கள் ஏ.பி., பரதன், ராஜா உட்பட பலர் பங் கேற்றனர்.



புதிய அமைச்சரவை பதவி ஏற்பு விழா நேற்று சென்னை பல் கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடந்தது. நண் பகல் 12.10 மணிக்கு விழா அரங் குக்கு ஜெயலலிதா வந்தார். அவரை தலைமை செயலாளர் மாலதி பூச்செண்டு கொடுத்து வரவேற்றார்.

அனைவருக்கும் வணக்கம் தெரிவித்த ஜெயலலிதா பின்னர் விழா மேடைக்கு சென்று அமர்ந் தார். அவரைத் தொடர்ந்து புதிய அமைச்சராக பதவி ஏற்க இருந்தவர்கள் மேடைக்குச் சென்று தங்களுக்கு உரிய இருக்கைகளில் அமர்ந்தனர். 12.40 மணிக்கு ஆளு நர் பர்னாலா வந்தார். அவரை ஜெயலலிதா மலர்க்கொத்து கொடுத்து வரவேற்றார்.

ஆளுநர் பர்னாலாவுக்கு புதிய அமைச்சர்களாகப் பொறுப்பு ஏற்க இருந்த 33 பேரையும் ஜெய லலிதா அறிமுகம் செய்தார். இதை யடுத்து பதவி ஏற்பு விழா தொடங் குவதாக அறிவிக்கப்பட்டது. உட னடியாக தேசிய கீதம், தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. அதன் பின்னர் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள வரு மாறு ஜெயலலிதாவை தலைமைச் செயலாளர் மாலதி அழைத்தார். 12.45 இற்கு பதவியேற்பு விழா ஆரம்பமாகியது. ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா ஜெயலலிதாவை, முதல்வராக பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

நடந்து முடிந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி யைப் பிடித்துள்ள அ.தி.மு.க., வின் சட்டசபைத் தலைவராக நேற்று முன்தினம் ஜெ., தெரிவு செய்யப்பட்டார். இதனைய டுத்து ஆளுநர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார். இதனைய டுத்து நேற்று 34 அமைச்சர்கள் கொண்ட தமது அமைச்சரவை யுடன் முதல்வராகப் பொறுப் பேற்றார். ஆளுநர் பர்னாலா பதவிப்பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

விழாவில் சி.பி.எம். செயலா ளர் ஜி.ராமகிருஷ்ணன், சி.பி.ஐ. செயலாளர் தா.பாண்டியன், சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார், மற்றும் மனித நேய மக்கள் கட்சி, பார்வர்ட் பிளாக், புதிய தமிழகம், மூவேந்தர் முன்னேற்ற முன்னணி உள் ளிட்ட தமிழக கூட்டணிக் கட்சித் தலைவர்கள் , பா.ஜ., மாநில தலைவர் பொன். ராதாகிருஷ் ணன், பத்திரிகையாளர் சோ, மேல்நீதிமன்ற நீதிபதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், உட்பட பலர் பங்கேற்றனர்.

## கேரள சட்டசபையின் எதிர்க்கட்சி தலைவராகிறார் அச்சுதானந்தன்

கேரள மாநிலத்தில் இடதுசாரி முன்னணி வெற்றி வாய்ப்பை தவற விட்ட போதிலும் பதவியி ழந்த முன்னாள் முதல்வர் அச்சு தானந்தன் எதிர்க்கட்சித் தலை வராகிறார்.

எனவே இதனால் கட்சியினர் மத்தியில் இவரது செல்வாக்கு அதிகரித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவராக இவரையே இருக்கு மாறு கட்சித் தலைமை கூறும் எனத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதையடுத்து செய்தியாளர் களிடம் பேசிய அச்சுதானந்தன் மக்களின் தீர்ப்பை ஏற்ப தாகத் தெரிவித்தார். ஜனநாயக விரோத செயலில் ஈடுபட்டு ஆட்சியைக் கைப்பற்றும் எண் ணம் தனக்குக் கிடையாது. காங் கிரஸ் தலைமையிலான அரசு ஊழல் செய்வதற்கு தமது கட்சி ஒருபோதும் அனுமதிக்காது என் றும் அவர் தெரிவித்தார். (வ)

## ஜெயலலிதாவின் பதவியேற்பின்போது கலந்து கொண்ட பிரமுகர்கள்



# கர்நாடகாவில் ஜனாதிபதி ஆட்சிக்குப் பரிந்துரை; உயர் மட்டக்குழு பரிசீலனை

பெங்களூர்,மே 17

கர்நாடகாவில் அரசியல மைப்புக்கு உட்பட்டு ஆட்சி நடக்கவில்லை என்றும், இங்கு லஞ் சம், ஊழல் மலிந்து விட்டதாகவும், எனவே இங்கு ஜனாதிபதி ஆட்சியை பிரகடனம் செய்ய வேண்டும் என ஆளுநர் பரத்வாஜ் அறிக்கைஅனுப்பியுள்ளார்.

உள்துறை அமைச்சகம் பெற் றுக்கொண்ட இந்த அறிக்கையை அலசி ஆராய்ந்து வருகிறது. இதற்கிடையில் ஆளுநர் எடுத்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கர்நாடகாவில் ஆளுநர் மாளிகை முன்பாக முதல்வர் மறியல் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து பிரதமர் மன் மோகன்சிங் மூத்த அமைச்சர் களுடன் அவசர ஆலோசனை நடத்தி வருகிறார். இதனால் டில்லியிலும், கர்நாடக மாநிலத் திலும் அரசியல் பரபரப்பு தொற் றிக் கொண்டுள்ளது.

கர்நாடக முதல்வர் எடியூரப் பாவுக்கு நீண்ட காலமாகவே பிரச்சினை இருந்து வருகிறது. ரெட்டி சகோதரர்கள் முதல் உள் கட்சியில் அதிருப்பதி சட்ட சபை உறுப்பினர்கள் மற்றும் லஞ்சப்புகார் என பல இன்னல் களைச் சந்தித்தார். இந்தப் பிரச் சினைகள் நேற்று முன்தினத் துடன் சுமுகமாக முடிவடைந்தன.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் எடியூ ரப்பா மீது அதிருப்பதி தெரிவித்த பா.ஜ., சட்டசபை உறுப்பினர்கள் 11 பேர் மற்றும் சுயேச்சை 5 பேர் ஆளுநரிடம் மனுக்கொடுத் தனர். இதனையடுத்து நம் பிக்கை வாக்கெடுப்பு நடத்தி பெரும்பான்மையை நிரூபிக்க உத்தரவிட்டார்.

பா.ஜ., மற்றும் சபாநாயகர் இணைந்து கட்சித்தாவல் தடை சட்டத்தின்படி 16 பேரையும் தகுதி நீக்கம் செய்தனர். இதனால் வாக்கெடுப்பில் வாக்களிக்கும் தகுதியை இழந்தனர். இதனை யடுத்து எடியூரப்பா வெற்றி பெற்றார்.

மேல்நீதிமன்றத்தில் தகுதி யிழந்த சட்டசபை உறுப்பினர் கள் வழக்குத் தொடுத்தனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம் இவர்களைபதவி நீக்கம் செய்தமை செல்லாது என கடந்த 2 நாள் களுக்கு முன்னர் அறிவித்தது. இதனால் மீண்டும் பிரச்சினை வெடித்தது. சட்டசபை உறுப்பி னர்கள் தங்களுடைய அதிருப் தியை வாபஸ் பெற்றுக்கொண்டு , எடியூரப்பாவுக்கு ஆதரவு அளிப் பதாக 'அந்தர்பல்டி' அடித்து ஆளு நரிடம் எழுத்துப்பூர்வமாக கொடுத்தனர்.

இதனால் ஆளுநரிடம் இருந்து எவ்வித நெருக்கடியும் வராது என எதிர்பார்க்கப்பட்ட நிலை யில் ஆளுநர் பரத்வாஜ் நேற்று முன்தினம் மாலை மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமுல் படுத்த வேண்டும் என பரிந் துரைத்து அறிக்கை அனுப்பி னார்.

(வ)

## ரஜனியை நலம் விசாரித்தார் மோடி



கடந்த மூன்று வாரங்களாக போரூர் ராமச்சந் திரா மருத்துவ மனையில் சிகி ச்சை பெற்றுவரும் ரஜினிகாந்தை சந்தித்து நலம் விசாரித்தார் குஜ ராத் முதல்வர் நரேந்திரமோடி.

இதேவேளை ரஜினிகாந்தின் உடல் நிலை சீராக உள்ளதாகவும் விரைவில் குணமடைந்துவிடுவார் எனவும் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ரஜினிகாந்தை தி.மு.க. தலைவர் கருணாநிதி உட்பட பல்வேறு முக்கிய பிரமுகர்கள் நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

(வ)

## திரிணாமுல் அரசில் காங்கிரஸ் இணையுமா?

மம்தா பானர்ஜி தலைமையில் மேற்கு வங்கத்தில் அமை யவுள்ள ஆட்சியில் பங்கேற்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள் ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் ஆட்சியில் இணையு மாறு காங்கிரஸுக்கு மம்தா பானர்ஜி அழைப்பு விடுத்துள்ளார். இந்த வேண்டுகோளை காங்கிரஸ் ஏற்கும் என்றும் தெரியவருகிறது.

இதுகுறித்து மேற்கு வங்க மாநில காங்கிரஸ் தலைவர் ஒருவர் கூறுகையில்:

இது தொடர்பாக அனைத்து விடயங்களும் சாதகமாக நடந்து வருவதாகவே தெரிகிறது என்றார். இதற்கிடையே, ஆட்சியில் பங்கேற்பது குறித்து மாநில காங்கிரஸ் தலைவர்களுடன் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார். மேலும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டசபை உறுப் பினர்களின் கருத்தையும் அவர் கேட்டு வருகிறார்.

மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, தனிப் பெரும்பான் மையுடன் ஆட்சி அமைக்கிறது. இருப்பினும் காங்கிரஸையும் ஆட்சியில் வந்து இணையுமாறு மம்தா அழைப்பு விடுத்துள்ளார். அதேபோல எஸ்.யு.சி.ஐ.யையும் ஆட்சியில் இணையுமாறு அவர் அழைத்துள்ளார். (வ)

## தலைவர் பொறுப்பிலிருந்து குஷ்பு ராஜினாமா

சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத் தலைவர் பொறுப்பை நடிகை குஷ்பு ராஜினாமாச் செய் துள்ளார்.

தேர்தல் நேரத்தில் தி.மு.க. வுக்கு ஆதரவாக பிரசாரம் செய் தவர் குஷ்பு. தேர்தல் தோல்வி அடைந்ததும் கடந்த சில நாள் களுக்கு முன்னர் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராம.நாராயணன் மற்றும் குக நாதன் ஆகியோர் ராஜினாமாச் செய்தனர். இதேவேளை நடிகை குஷ்பு தான் வகித்து வந்த சின் னத்திரைத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் பொறுப்பை ராஜி னாமா செய்வதாக அறிவித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 மே 2011 செவ்வாய்க்கிழமை

# முற்றுகை களத்திலிருந்து மக்களை வெளியேற விடாது புலிகள் தடுத்ததால் ஏராளமானோர் மரணிக்க நேரிட்டது

## கட்டாய ஆள்சேர்ப்பையும் அவர்கள் கடுமையாகக் கடைப்பிடித்தனர்

(உ) வெள்ளை வான்களை உள்ளிட்ட கடத்தல்கள் மற்றும் ஆள்கள் காணாமற் போதல் போன்ற பல வகையான அச்சுறுத்தல்கள் மூலம் ஊடகங்களையும் ஏனைய விமர்சகர்களையும் பயமுறுத்தி மௌனம் சாதிக்க வைக்க அரசு முனைந்தது.

177. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றிய குழுவின் விளக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்துள்ள ஆறு அடிப்படை வகுதிகளைச் சேர்ந்த பெரும் நிலைத்தகவுள்ள மீறல்களை வெளிப்படுத்துகிறது.

(62)

(அ) தாக்குதலைத் தடுப்பதற்காக பொதுமக்களைப் பொறியாகப் பாவித்தல்: யுத்த களத்தில் நிலவிய பெரும் ஆபத்துக்கள் மற்றும் பயங்கரமான நிலைமைகளைக் கவனியாது தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை வெளியேற அனுமதிக்காது, அவர்களைப் பணயக் கைதிகளாகவும் சில சமயங்களில் அவர்களுக்கும் முன்னேறி வரும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையிலான தாக்குதலைத் தடுப்பதற்கான பொறியாகவும் பிரயோகித்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் அதன் தலைமைத்துவத்தைப் பாதுகாக்க போரிட்டபோது அது பொதுமக்களைத் தேவையற்ற வர்கள் என தொடர்ச்சியாகப் பலிகொடுத்தது. பொதுமக்களை வெளியேற விடாது தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்த காரணத்தினால் யுத்தத்தில் மொத்தம் மடிந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகியது.

**(ஆ) தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தப்ப முனைந்த பொதுமக்களைக் கொலைசெய்தல்.**

2009 பெப்ரவரி முதல், யுத்த வல யத்தில் இருந்து தப்ப முயற்சிக்கும் பொதுமக்களைச் சுடும் கொள்கையினை தமிழீழ விடுதலைப்புலிகள் கடைப்பிடித்தனர். இதனால் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது இறந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்தது. பொதுமக்கள் தப்பிச் செல்லும் இடங்கள் மீது உறுப்பினர்களை நிறுத்தி நீரில் தடுமாறி அல்லது கண்ணிவெடிகள் நிறைந்த இடங்களைத் தாண்டி அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கிச் செல்லத் தத்தளித்துக் கொண்டிருந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது சிலர் நீரில் மூழ்கி மரணித்தனர்.

(இ) பொதுமக்களிடையே இருந்து இராணுவ உபகரணங்களைப் பாவித்தல். இடம்பெயர்ந்த மக்களுக்கிடையே யுத்த சூனிய வலயத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் எறிகுண்டு களைச் செலுத்தியதோடு, இடம்பெயர்ந்தோர் இருக்கும் இடங்களிலிருந்து அல்லது ஆஸ்பத்திரிகள் போன்ற பொது இடங்களிலிருந்து துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டனர் அல்லது இராணுவ உபகரணங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்தனர். இலங்கை இராணுவம் பதிலடி கொடுக்கும் என்பதையும் அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் அறிந்திருந்தும் அவர்கள் அவ்வாறு செய்தனர். சில சமயங்களில் பொதுமக்களிடையே இருந்து சுட்டுவிட்டு பொது மக்கள் அதன் விளைவுகளை அனுபவிக்க விட்டு விட்டு அங்கிருந்து விரைவாக அகன்று விடுவார்கள்.

(ஈ) சிறுவர்களைக் கட்டாயமாக அணிதிரட்டல்: யுத்தம் நடைபெற்ற காலம் முழுவதிலும் கட்டாயமாக ஆள்சேர்க்கும் கொள்கையினை தமிழீழ விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த போதிலும், இறுதிக்கட்டங்களின் போது 14வயதுச் சிறுவர்கள் உள்ளிட்ட சகல வயதுக்குட்பட்டவர்களையும் ஆள்சேர்ப்பதில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர்.

ஒரு குடும்பத்திலிருந்து ஒரு பிள்ளைக்கு மேல் ஆள்சேர்த்ததோடு, சாவதற்கென்தம் பிள்ளைகளை எடுத்துச் செல்வதைத் தடுக்க முனைந்த உற வு களைத் அவர்கள் தாக்கினர். இந்தக் கொள்கை மிகவும் ஈவிரக்கமற்ற முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்நோக்கி நம்பிக்கை அற்ற நிலைமையிலும் செயற்படுத்தப்பட்டது.

(63)

**(உ) வலுக்கட்டாய உழைப்பு**

தனது சொந்தப் பாதுகாப்புக்காக அகழிகளைத் தோண்டுதல் மற்றும் அரண்களை அமைப்பது மூலம் தம் பாதுகாப்பு அணிகளை உறுதிப்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தியதோடு, அப்படிச் செய்வதன் மூலம் போராளிகள் மற்றும் பொதுமக்களிடையே உள்ள வேறுபாட்டினை தெளிவற்றதாக்கினர். இதனால் பொதுமக்கள் ஷெல் தாக்குதலுக்கான மேலதிக ஆபத்துக்கு உள்ளாக்கப்பட்டனர்.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 16**

(ஊ) தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொலை செய்தல்: யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது, யுத்த வலயத்துக்கு வெளியே தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும் அதன் கொள்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கடைப்பிடித்தனர். யுத்தத்தின் முந்திய கட்டங்களுடன் ஒப்பீட்டளவில், அத்தகைய தாக்குதல்களை நடத்துவதற்கான அதன் திறன் குறைந்திருந்தபோதிலும், 2009 பெப்ரவரி 09 ஆம் திகதி முல்லைத்தீவைப் பிரிக்கும் மத்திய நிலையத்தில் 30 பேர்களைக் கொன்ற தற்கொலைத் தாக்குதல், 2009 மார்ச் 10 ஆம் திகதி சுமார் 15 பேர்களைக் கொன்ற அமைச்சர் மஹிந்த விஜேசேகர மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஆகியவற்றை உள்ளிட்ட பல தாக்குதல்களை அவர்கள் யுத்த வலயத்துக்கு வெளியே மேற்கொண்டனர்.

**IV. குற்றச்சாட்டுக்களைச் சட்டரீதியாக பகுப்பாய்வு செய்தல்**

178. அத்தியாயம் III இல் விளக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நம்பக மானவை என்ற குழுவின் தீர்மானத்தைக் கருத்திற்கொண்டு அந்தக் குற்றச்சாட்டுகளின் சட்ட ரீதியிலான தகைமைகளை அது இப்போது ஆராயும்.

இந்த மதிப்பீட்டை அதன் ஆணை தேவைப்படுத்துகிறது. மேலே குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வுகள் சட்டத்தை மீறும் குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களா மற்றும் அவை நிகழ்ந்தன என பின்னர் நிரூபிக்கப்பட்டால், மீறல்களா என்ற கேள்விக்கு இப்படியாக இந்தக் குழுகவனம் செலுத்துகிறது.

மேலும், தற்போதைய மதிப்பீடு குற்றச்சாட்டுக்களைச் சட்டப்படியாக வகைப்படுத்தலுக்கு மட்டுப்படுகிறது. ஏதுமொரு குற்றச்சாட்டு சர்வதேச சட்டத்தை மீறுவதாகவில்லை என்ற குழுவின் கருத்து அதன் பின்னணியில் உள்ள நடவடிக்கையை அது அனு மதிக்கிறது என்பதாகாது. அத்தியாயம் III இன் இறுதியில் இனங்காணப்பட்ட குற்றச்சாட்டுக்களின் வகுதிகளை குழு சீர்தூக்கிப் பார்க்கிறது.

**அ. பொருத்தமான சட்டம்**

179. சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகிய இரண்டினதும் குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களை ஆராய்வதை குழுவின் ஆணை தேவைப்படுத்துகிறது.

இலங்கை போன்ற நீண்ட கால யுத்தம் ஒன்றின் போது சர்வதேச மனிதாபிமான சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் சட்டமும் ஏற்புடையதாக்கும் என்ற அடிப்படை மற்றும் தர்க்க ரீதியில் நெடுங்காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் குழு ஆய்வுகளை மேற்கொள்கிறது.

180. குழுவின் தேவைகளுக்காக, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டம் ஆகியவற்றை முழுமையாக எடுத்துக்கொள்ளாமல், அவற்றின் முக்கிய விதிமுறைகளை கலந்தாராய்தல் போதுமானதாகும்.

மேலும், சம்பந்தப்பட்ட மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் விதிமுறைகள் நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், நீதிமன்றங்கள், நீதித்துறை போன்ற கண்காணிப்பு அமைப்புக்கள் அத்துடன் ஏனைய நிறுவனங்களால் கணிசமான அளவு விளக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

(64)

1. சர்வதேச மனிதாபிமானச் சட்டம்

181. இந்தப்போர் நிலவரம் தெளிவாக உள்நாட்டு ஆயுதம் தாங்கிய மோதலொன்றின் நிலையை அடைந்திருந்ததால், அதாவது, அரச மற்றும் அமைப்பு உருவிலான ஆயுதக் குழுக்களுக்கும் இடையே நீண்டகால வன்முறை சம்பந்தப்பட்டது. சர்வதேச மனிதாபிமான சட்டம் ஏற்புடைத்தாகிறது 'நாடுகளுக்கு இடையே அல்லது அரசு மற்றும் அமைப்பிலான ஆயுதக் குழுக்களிடையே அல்லது நாட்டுக்குள் அத்தகைய குழுக்களுக் கிடையே நீண்டகால ஆயுதம் தாங்கிய வன்முறை தீர்வுக்கான வழிமுறையாக நாடப்பட்டால் 'ஆயுதந் தாங்கிய யுத்தம் ஒன்று உண்டு' என்பது முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் குழுவின் கூற்றாகும்.

குழு ஆராய்ந்த காலப்பகுதியில் இலங்கையில் உள்நாட்டு ஆயுத மோதல் ஒன்று அதற்கான தீவிரத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டது. என்பதில் சந்தேகமில்லை அதன் விளைவாக, அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்த மோதலை நடத்தியவிதத்தை நிர்ணயிக்கும் சட்டம் சர்வதேச மனிதாபிமான சட்டமாகும்.

182. 1949 ஆம் ஆண்டின் நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளுக்கு இலங்கை ஒரு தரப்பாகும்: சர்வதேசம் சாராத யுத்தங்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் ( உடன்படிக்கை நிபந்தனை II) ஜெனீவா உடன்படிக்கைகளுக்கான 1977 ஆம் ஆண்டின் மேல திக நிபந்தனைகளுக்கு அது தரப்பினரல்ல.

எனவே, மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கடப்பாடுகளின் நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளின் பொதுவான உறுப்பினர் 3 இல் வழங்கப்பட்டுள்ளனவாகும். பொதுவான உறுப்பினரை 3 இன் முக்கிய ஏற்பாடுகளை மேற் கோள்காட்டுவது பொருத்தமாகும்.

(1) ஆயுதங்களைக் களைந்த அல்லது நோயினால், காயங்களினால், தடுத்து வைக்கப்படுவதினால் அல்லது வேறு காரணங்களுக்காக தொடர்ந்தும் பங்கேற்க முடியாத படை வீரர்களை உள்ளிட்ட எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடாதவர்கள், சாதி, நிற, சமய, ஆண், பெண் பாகுபாடு, பிறப்பு அல்லது செல்வம் அல்லது வேறு ஏதேனும் அது போன்ற காரணங்களுக்காக எந்தவொரு வேற்றுமையையும் காட்டப்படாது. சகல சந்தர்ப்பங்களிலும் கருணையுடன் நடத்தப்படவேண்டும். இதற்காக மேற்சொல்லப்பட்டவர்கள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எந்தவொரு நேரத்திலும் மற்றும் எந்தவொரு இடத்திலும் தடை செய்யப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் அப்படியே இருக்கும்.

(அ) குறிப்பாக சகல விதமான கொலைகள், கடத்தல் மற்றும் சித்திர வதை போன்ற உயிருக்கும் ஆளுக்கும் எதிரான வன்முறை.

(ஆ) பணயக் கைதிகளாகப் பிடித்தல்

(இ) குறிப்பாக அவமானப்படுத்தும் மற்றும் இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துவதைக் கொண்ட சொந்த கௌரவத்துக்குப் பங்கம் விளைவித்தல்...

**(2) காயமடைந்தோரும் நோயாளிகளும் சேகரிக்கப்பட்டு பராமரிக்கப்படவேண்டும்**

(65)

183. சர்வதேச சட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் அதன் சம்பிரதாயம் பற்றிய கருத்தை நிர்ணயிப்பதற்காக, அரச செயற்பாடு மற்றும் மனப்பான்மை ஆகியவற்றை முழுமையாக பகுப்பாய்வு செய்யும் ஐ.சி.ஆர்.சியின் ஆய்வான, கஸ்டமரி இன்டர்நஷனல் ஹரிமனிடேரியன் லோ (2005) அத்துடன் சர்வதேச மற்றும் தேசிய சட்டத்துறை தீர்மானங்கள் மற்றும் சர்வதேச குற்றவியல் குழுக்களின் சட்டம் மற்றும் ஆய்வுத்துறை ஆகியவற்றை உள்ளிட்ட பல்வேறு மூலவளங்களில் குழு தங்கியிருந்தது.

**2. சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**

184. அநேகமான நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளபடியும் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட பலஸ்தீன நிலப்பரப்பில் மதில் ஒன்றை கட்டுவது தொடர்பான சட்ட பின் விளைவுகள் என்ற 2004 ஆம் ஆண்டின் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவாறும் ஆயுதமேந்திய மோதல் நிலைமைகளில் மனித உரிமைகள் சட்டம் ஏற்புடைத்தாகிறது. கொங்கோ நிலப்பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆயுதம்தாங்கிய நடவடிக்கைகள் பற்றி 2005 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தீர்ப்பில் இதே நியாயத்தைப் பிரயோகித்து ஆயுதம்தாங்கிய மோதலின் போது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச நடை முறை மரபினை உகண்டா மீறியுள்ளது எனக்கண்டது.

185. ஆயும்மேந்திய மோதலுடன் சம்பந்தப்பட்ட நம்பகமான குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் விதிகள் மீது குழு அதன் கவனத்தை ஈடுபடுத்தி. அவற்றுள் பல மனித உரிமைகள் மீறல்களுக்குச் சமமாகிறது என்பதை இனங்காண்கிறது. 2009 மே 19 ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து மனித உரிமைகள் சட்டம் பொருத்தமான ஒரே சட்டத் தொகுப்பாக ஆகியுள்ளது. இவ்வாறாக, யுத்தத்தை நடத்துவதற்கும் புறம்பான மனித உரிமைகள் மீறல்கள் பற்றி மாத்திரமே குழு நடவடிக்கை எடுக்கிறது.

186. சிவில், கலாசார, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக உரிமைகள் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட அடிப்படை சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகள் மற்றும் சித்திரவதையைத் தடை செய்யும். அத்துடன் பெண்கள் மற் றும் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய உடன்படிக்கைகள் ஆகியவற்றுக்கு இலங்கை ஒரு தரப்பாக உள்ளது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு,மே 17

யாழ். மாவட்டப் பாட சாலை அணிகளுக்கு இடையேயான 17,19 வயதுப் பிரிவினருக் கானவலைப்பந்தாட்டப் போட்டி கள் இன்றும் நாளையும் பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில்நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் மோத வுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**17 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை யூனி யன் கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.
* கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
* வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயம் எதிர் வட மராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
* வடமராட்சி இந்து மகளிர் கல்லூர் எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.
* அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரி.
* யாழ்ப்பாணம் இந்து மக ளிர் கல்லூரி எதிர் புங்குடு தீவு ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம்.
* சாவகச்சேரி மகளிர் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து காரைநகர் யாழ்ரன் கல்லூரி மோதவுள்ளது.

**19 வயதுப் பிரிவு**


* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம் எதிர் யாழ்ப் பாணம் இந்து மகளிர் கல்லூரி.
* கொடிகாமம் திருநாவுக் கரசு வித்தியாலயம் எதிர் வடம ராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
* யாழ்ப்பாணம் திருக்குடும் பக் கன்னியர் மடம் வித்தி யாலயம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
* வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி எதிர் தென்ம ராட்சி மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
* உடுப்பிட்டி மகளிர் கல் லூரி எதிர் கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி. இரண்டாம் சுற்றில் இருந்து வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மோதவுள்ளது.(ம-86)

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் ஆறு பந்து பரிமாற்றங்களைக் கொண்ட அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் மென்பந்துத் துடுப்பாட் டச் சுற்றுப் போட்டி ஒன்றை இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்த உள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்களை நாளை புதன் கிழமைக்கு முன்னர் கே.கே.எஸ் வீதி, இணுவி லில் அமைந்துள்ள நகை மாடத்தில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-45)

# பயிற்றுநர்களுக்குச் சான்றிதழ்



யாழ்ப்பாணம், மே 17

வடமாகாண விளையாட் டுத் திணைக் களத்தின் ஊடாக யாழ். மாவட்ட செய லக விளையாட் டுத் திணைக் களத்தின் கிரிடா சத்தி திட்டத்தின் கீழ் 11 குழு விளையாட்டு, மென்வன்மைப் பயிற்றுநர்களுக்கான சான்றி தழ்கள் வழங்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு மதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்துகொண்ட வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அண் ணாத்துரை பயிற்றுநர்களுக் கான நியமனச் சான்றிதழ்கள் வழங்கினர். (ஐ-23)

# வடமாகாண விளையாட்டு விழா யாழ்.மாவட்ட அணிகள் சம்பியன்

வவுனியாவில் நடைபெற்று வரும் வடமாகாண விளை யாட்டு விழாவில் கூடைப் பந்தாட்டம், ஹொக்கிப் போட்டி களில் யாழ்.மாவட்ட அணிகள் வெற்றியீட்டிச் சம்பியன்களாகி யுள்ளன.

நேற்று முன்தினம் நடை பெற்ற ஆண்களுக்கான கூடைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் வவுனியா அணியை எதிர்த்து யாழ். அணி மோதிக் கொண் டது. இதில் யாழ். அணி 88:40 என்ற புள்ளி அடிப்படையில் வவுனியா அணியை வென்று சம்பியன் ஆனது.

பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் வவுனியா அணியை எதிர்த்து யாழ். அணி மோதி யது. இதில் யாழ். அணி 43:10 என்ற புள்ளி அடிப்படையில் வவுனியா அணியை வென்று சம்பியனானது.

ஆண்களுக்கான ஹொக்கி இறுதி ஆட்டத்தில் மன்னார் அணியை எதிர்த்து யாழ். அணி மோதியது. இதில் யாழ். அணி இரண்டு புள்ளிகளைப் பெற் றுச் சம்பயினானது. (த)

# மூன்றாமிடத்தை பெற்றது கொக்குவில் இந்து

யாழ்.மாவட்டக் கல்வி வல யப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண் களுக்கான எல்லேப் போட்டி யில் கொக்குவில் இந்துக் கல் லூரி பலத்த போராட்டத்தின் பின்னர் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத் துக்கான போட்டியில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி 2 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டது. அனைவரும் ஆட்ட மிழந்து 3 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரியினர் 2 ஓட்டங்களைப் பெற்று அனை வரும் ஆட்டமிழந்தனர். போட்டி சமநிலையில் நிறைவடைந்த நிலை யில் வெற்றி, தோல்வியைத் தீர் மானிக்க இரு அணிகளுக்கும் மேலும் தலா பத்துப் பந்துக்கள் விளையாட அனுமதிக்கப்பட்டது.

முதலில் விளையாடிய கொக்கு வில் இந்துக் கல்லூரி பத்துப் பந் துகளில் ஒரு ஓட்டத்தைப் பெற்றுக் கொண் டது. பத்துப் பந்து களில் 2 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக் குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஓட்டங்கள் எதையும் பத்துப் பந்து கள் நிறைவில் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 3:2 ஓட்டங்கள் என்ற நிலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூ ரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்று மாவட்டப் போட்டியில் விளையாடத் தகுதிபெற் றுள்ளது. (ம-86)

**TUTORING STAFF POSITIONS AT A REPUTATIONAL HIGH SCHOOL IN JAFFNA (GRADE 9 TO 13)**

**ENGLISH LANGUAGE**
**THAMIL LANGUAGE**
**MATHEMATICS**
**SCIENCE**

*Do you have the passion to tutor under achievers? Will you ready to work after school hours?*
*If you feel, you are the right candidate for any of the positions,*
**sends your curriculum vitae**
**using the form below & forward to us either by**

MAIL: *UHCOSA-CANADA,*
*P.O BOX 46630 SHEPPARD AVE EAST,*
*TORONTO, ONTARIO CANADA MIT 3J0*

Email: *kspavan@hotmail.com*

Fax: 011 416 750 8779

**Earn very competitive salary**
**quarterly performance incentives**
**annual bonuses, Job security**

*Send your application before May 27, 2011. Credible candidates will appear for an interview at the high school in a short notification.*

**Position(s) Desired:** 1.________ 2.________

**Full name:** ________

**Permanent address:** ________

**Telephone:** ________ **Email:** ________

**EDUCATIONAL BACKGROUND**

HIGH SCHOOL: ________ COMPLETION: ________

GRADES & SUBJECTS ________

UNIVERSITY / TECHNICAL COLLEGE: ________ COMPLETION: ________

PROGRAM & SUBJECTS ________

**OTHER QUALIFICATIONS & EXPERIENCE** (*necessary use a separate sheet*)
Summarize special job-related skills and qualifications acquired from employment or other experiences and/or state any additional information you feel may be helpful in considering your application, i.e. honors, awards, activities, technology skills or professional or communities' development activities:

**ESSAY:** We are interested in your ability to organize and express thoughts on a specific topic or topics in a concise manner. Please select **two** of the following topics and write the essays **in separate sheets, one in English and other in Thamil Language**.

1. The Most Important Qualities of an Outstanding Educator.
2. My Philosophy of Student Discipline.
3. The Importance of Continuing Professional Development and How I Plan to Incorporate It Throughout My Career.
4. How Information Technology (i.e., computers, Internet) can be integrated into the Instructional Process and Curriculum.

**REFERENCES:** References should include experience teachers, principals or professors who have first-hand knowledge of your professional competence and your personal qualifications.

**1.**

**2.**

**CERTIFICATION &RELEASE AUTHORIZATION**

I certify that all of the statements made by me are true, complete and correct to the best of my knowledge and belief, and are made in good faith. **I further certify that I am the sole author of the essay.** I understand that any misrepresentation of information shall be sufficient cause for: (1) rejecting my candidacy, (2) withdrawing of any offer of employment, or (3) terminating my employment.

Date ________ **Signature of Candidate (in ink)** ________

Note: *Email applicants- summit your CV in Microsoft Word or PDF file, filled with the same contents.* (சி/049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மாவட்டக் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளராக கடமையாற்றும் திருமதி புஸ்பரட்ணம் சிவஞானவதி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சரஸ்வதி சுப்பிரமணிய செட்டியார்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலக உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

# கைதடிப் பாலத்தில் ஓட்டோ விபத்து

தென்மராட்சி, மே 17

கைதடிப் பாலத்தில் வாகனத்தினால் மோதுண்ட ஓட்டோ பாலத்தின் பக்க வாட்டிலுள்ள இரும்பு கேடர்களுக்கு இடையில் புகுந்து சேதமடைந்தது. நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது.

பாலத்தில் ஓட்டோவை முந்திச் செல்ல முயன்ற வாகனம் மோதியதால் ஓட்டோ பாலத்தின் பக்கவாட்டில் மோதிச் சேதமடைந்தது.

ஓட்டோவில் பயணித்த யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலை விரிவுரையாளரான அருளானந்தம் ராதா (வயது-55) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-207)

# தென்மராட்சி, வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய 3 ஆம் நாள் திருவிழா

தென்மராட்சி, வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருவிழா 16.05.2011 ஆந் திகதி ஆரம்பமாகியது நாளை (18.05.2011) புதன்கிழமை நடைபெற இருக்கும் மூன்றாம் நாள் திருவிழா காலை 9.30 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி மு.ப 11 மணியளவில் வசந்தமண்டபப் பூசைகள் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் அம்பாள் எழுந்தருளி உள்வீதி வலம் வந்து இருப்பிடத்தை அடைவார். அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வு இடம்பெறும்.

பிற்பகல் ஒரு மணியளவில் யாழ் மண்ணில் தலைசிறந்த இசை அமைப்பாளர் இசைப்பிரியன் S.G.சாந்தன் இசைக் குழுவினரின் இன்னிசைக் கானங்கள் ஒங்கிமுழங்கும். பி.ப 5 மணியளவில் தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைக் கச்சேரிகளுடன் இரவு பூசைகள் ஆரம்பமாகி அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் அம்பாள் வெளிவீதி வலம் வருவார்.

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் திருவருட் கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**3 ஆம் திருவிழா உபயகாரர்.** (1678)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னையா அன்னமுத்து



இணுவிலைப் பிறப்பிடமாகவும், உடுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அன்னமுத்து (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், சண்முகநாதன் (ஜனனி தேநீரகம், மருதனார்மடம்), பத்மநாதன், கமலநாதன்(ஓய்வுபெற்ற முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ), சந்திராதேவி(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், வ/ கந்தபுரம் வாணி வித்தியாலயம்), தில்லைநாதன், கமலாதேவி, இரத்தினேஸ்வரி(பிரான்ஸ்), பஞ்சநாதன், மதனேஸ்வரி(செல்வம்), சத்தியநாதன்(விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி), சிவகுருநாதன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, தவமலர், சண்முகராஜா(போட்டோ சண்கோ), முத்துமலர், மகேஸ்வரன், வைகுந் தவாசன்(பிரான்ஸ்), வரதா, வேலாயுதபிள்ளை(மலேசியா), ஜெயராணி(ஆசிரியை, வ/ கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம்), வாகினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கண்ணன்(பிரான்ஸ்), காண்டீபன்(ஜேர்மனி), சுபாசினி(ஆசிரியை, யா/ இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), பாடினி(பிரான்ஸ்), பளிங்கன் (பிரதேசசபை, உடுவில்), கோகுலன்(பிரான்ஸ்), ஜனார்த்தனி(ஆசிரியை, வ/ பெரியகோமரசன் குளம் ம.வி), கலைநிலா, ருஜாந்தி(மு.உ, வ.க அலுவலகம், வவுனியா வடக்கு), சுலேகா, யனனி(முகிழ்நிலை ஆசிரியர், வவுனியா தே.க.க), மாதங்கி, அன்புச்செழியன்(பிரான்ஸ்), லாவண்யன்(பிரான்ஸ்), பரந்தாமன்(யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்.), வேணுகானன், பிரவீனா, நிரோசன், நிரோஜிகா, யதூஷன்(யா/ இந்துக்கல்லூரி மாணவன்), சிந்துர்க்கா, சிவதுர்க்கா(வ/இறம்பைக் குளம் மகளிர் ம.வி மாணவிகள்), பிரணவன், தர்மிகா, பானுஷன்(ஜேர்மனி) மற்றும் நளினி(பிரான்ஸ்), சசிரேகா(ஜேர்மனி), இராஜேந்திரன்(கம்சிகா பான்ஷி, யாழ்ப்பாணம்), ஆனந்தசங்கர்(பிரான்ஸ்), சுகந்தன்(கலைநிலா ஹாட்வெயர், உரும்பிராய்), சிந்துஜா(பிரான்ஸ்), பிரபா(ஹொலன்ட்) ஆகியோரின் பேர்த்தியும் நிரூபன், நிவேதன், நிருத்திகா, கஜீபன், கஜானன், கார்த்தியா, ஹம்சிகா, ஜனாங்கணன், மதுரிகா, ஆகாஷ், ஆரணி, அபினாஸ், கேசிகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# உ. அரச அலுவலகம் தற்காலிகமாக தண்ணீரூற்றில்

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று உதவி அரச அலுவலகக் கட்டடத் திருத்த வேலை காரணமாக நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் தற்காலிகமாக தண்ணீரூற்று 4ஆம் கட்டையில் இயங்கிவருகின்றது. சேவைகளைப் பெற வருவோர் மறு அறிவித்தல் வரை தற்காலிக இடத்தில் பூர்த்திசெய்ய முடியும் என கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# மரண அறிவித்தல்கள்

## நடராஜா ஜெயசிறி



யாழ்ப்பாணம், நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் Drancy, France ஐ வதிவிடமாகவும் கொண்ட நடராஜா ஜெயசிறி 10.05.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா பத்தர்- மீனாம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ரட்ணசபாபதி(சின்னத்தம்பி)- நாகரட்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாவின் அன்புக் கணவரும், லாவண்யன், வசுதாராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீதா, டேவிட் ஆகியோரின் மாமனாரும், பிரதீஷின் பேரனும், காலஞ்சென்ற ராஜசூரி(இலங்கை) மற்றும் ராஜீவி(France), ரஞ்சிற்(France), கோபி(France) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி(France) மற்றும் தனலஷ்மி (இலங்கை), புனிதா(France), ரூபா(France), மகேஸ்வரன் (France), இலங்கேஸ்வரன்(இலங்கை), சியாமளா, (Canada), இலங்கேஸ்வரி(London) ஆகியோரின் மைத்துனரும் திவ்யரூபனின் மாமனும், விஷ்ணுகாந்தனின் சித்தப்பாவும் கம்ஷலா, தர்ஷிகா ஆகியோரின் மாமனும், றமணேஸ், ஜெயகணேஸ், மிதுரா, அனுஷன், மாதேஸ், ஜெனித்தா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(18.05.2011) புதன்கிழமை France இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு-
0033141502089,
00330148386926

தகவல்:
றஞ்சிற்- யமுனாராணி(புனிதா-பிரான்ஸ்),
தேவராசா- மல்லிகாதேவி(உடுப்பிட்டி). (வி/053)

## திருமதி பாக்கியலட்சுமி தம்பிரத்தினம்



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி தம்பிரத்தினம் (16.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கதியாகராஜா தம்பிரத்தினம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், வித்தியாதரன்(கனடா), சுபாஜினி(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயரூபனின் அன்பு மாமியாரும், இராஜலட்சுமி, விஜயலட்சுமி, இரத்தினவேல், அற்புதவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரூபிசேத்(மாணவன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, 4B) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று விளாவெளி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் அதிபர்

திருமதி

**சரஸ்வதி சுப்பிரமணிய செட்டியார்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்.**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1983ல் பிறந்த, அவிட்ட நட்சத்திரம், கிரகபாவம் 36¼ உள்ள N.D.T (Engineering) செய்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்பு-0778171689

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

மானிப்பாயில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு ஆண் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

தொடர்பு:-0750482382

## கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட முதற்தர சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் மற்றும் ஊர்க்குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு

தொடர்பு-0217200616, 0777490914

## பெயர் மாற்றம்

அளவெட்டி வடக்கு பன்னாலை என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வரத்தினம் பரமேஸ்வரி ஆகிய நான் 17.05.2011 முதல் செல்வரத்தினம் பிரதீபா என சட்ட வரம்பிற்கமைய பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன். (40)(4271)

-செல்வரத்தினம் பிரதீபா

## Morris Minor (1000) விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 1953 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ELXXXX,
A/C பொருத்தப்பட்டுள்ளது.
4 Wheel Cupகளும் உண்டு.
இன்றும் நாளையும் யாழ். நகரில் பார்வையிடலாம்.

தொடர்பு:-0772208605

## வளரும் தேயும் நிலவொளி

வளரும், ஆசை, கனவு, ஏக்கம், எதிர்பார்ப்பு முடிவுறாது(நிறைவு) மனம் கவலைகளில் தேயும் வயது, விளை வாய் நோய், பிணி மரணம், இம்மை மறுமை இரண்டிலும் துயர் முழுமை நிறைந்த மனமாய், துயரில்லாத நிலைக்கு, கௌதம புத்தர் வைகாசி விசாக பூரணைத் திதியில் பரிநிர் வாணமடைந்த இப்புனித நன்னாளில்-நாம் எமது மனங்க ளையும் ஆற்றுப்படுத்த புத்த பகவான்...

வெசாக் திருநாள் இன்று

இராமஜெயபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளிலும் பிரார்த் தனையில் ஈடுபடுமாறும் அன்றைய தினத்தில் ஆடம்பரக் கொண்டாட்டங்களைத் தவிர்க்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''ஓராண்டு மட்டும் நினைவு தினத்தைக் கடைப்பிடித்தால் போதுமானது என்று எண்ணக்கூடாது. ஒவ்வோர் ஆண்டும் முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு மே 18ஆம் திகதி அஞ்சலி செலுத்தப்பட வேண்டும்'' - என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-சி)

## யாழ்.பல்கலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் முதல்முறையாக பௌத்த சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும் அவை குறிப்பிடுகின்றன. எனினும் பல்கலைக் கழக வட்டாரங்களில் இருந்து பௌத்த சங்கம் உருவாக்கப்பட்ட செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை.

அதற்கான முயற்சிகள் சில இடம்பெற்றன என்பதை மாணவர்கள் சிலர் உறுதிப்படுத்தினர். ''சிங்கள மாணவர் கள் சிலர் சேர்ந்து வெசாக் கொண்டாடு வதற்காக ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். அந்த அமைப்பின் விவரங்கள் துணைவேந்தருக்கும் சமர்ப்பிக்கப்பட்ட தாகத் தெரிகிறது. ஆனால், அதனை அவர் அங்கீகரித்தாரா? இல்லையா? என்பது தெரியாது'' என்றார் மாணவர் ஒருவர்.

பல்லைக்கழகத்துக்குள் வெசாக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கு சிங்கள மாணவர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகள், ''குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதால் தவிர்ப்பது நல்லது'' என்ற அறிவுரையை அடுத்துக் கைவிடப்பட்ட தாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.

பல்லைக்கழகத்துக்குள் பௌத்த சங்கம் ஒன்றை அமைப்பதன் பின்னணி யில் படையினர் செயற்படுகின்றனர் என்றும் மற்றொரு தகவல் ஒன்று தெரிவித்தது. (உ)

THE PRINCESS OF WALES NURSING HOME
132, KACHCHERI NALLUR ROAD, JAFFNA.
T.P: 021-4922589 FAX:021-222-6180

★ பொது சத்திர சிகிச்சை ★ குழந்தைகள் சிகிச்சை
★ இருதய நோய் சிகிச்சை ★ பொது சிகிச்சை
★ மகப்பேற்று சிகிச்சை ★ காது, மூக்கு, தொண்டை சிகிச்சை
★ நீரிழிவு சிகிச்சை

மேற்குறிப்பிடப்பட்ட சிகிச்சைகள் யாவும் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களி னால் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

- வெளி நோயாளர் பிரிவு (OPD) காலை 6மணி தொடக்கம் மாலை 8மணி வரை நடைபெறுகின்றது.
- ஸ்கானிங் (ECG) இரத்த, சல பரிசோதனைகளும் இங்கு செய்து கொடுக்கப்படும்.
- சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் தகுதி வாய்ந்த வைத்தியர்களினால் வழங்கப்படுகின்றன.
- அடிப்படைத் தாதியர் பயிற்சி நெறியின் 2 ஆம் பிரிவு ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாகின்றது. உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.
- Dr. கமலா செல்வராஜா, Dr.பிரியா செல்வராஜா ஆகிய வைத்தியர்களினால் (ஆங்கில வைத்தியம்) சோதனைக் குழாய் கருத்தரிப்பு சிகிச்சை மூலம் (IVF- ICSI) குழந்தைப் பாக்கியம் பெற விரும்புபவர்கள் மருத்துவ அறிக்கையுடன் சனிக்கிழமை நேரில் வரவும்.

**தேவை.**
காலை, மாலை வேளைகளில் கடமையாற்றுவதற்கு அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் தேவை.

**Note:-**
18.05.2011 தொடக்கம் எமது வைத்தியசாலை
புதிய பொலிவுடன் மீனாட்சி மருத்துவமனையாக பெயர் மாற்றம்
செய்யப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

## மரண அறிவித்தல்

### *வைரவன் சங்கரன் (சின்னப்பெடி)*



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் சங்கரன் (சின்னப்பெடி) கடந்த 15.05.2011 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சந்திரராஜா, தங்கராஜா, சகுந்தலாதேவி, இந்திரராஜா, காலஞ் சென்ற யோகராஜா மற்றும் விஜியகுமாரி, தர்மராஜா, காலஞ் சென்ற ஞானராஜா மற்றும் சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செட்டி வீதி,**
**இணுவில் மேற்கு.** (4302)

தகவல்:
குடும்பத்தினர்.

## அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களால் நாடாளுமன்றத் துக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்மைப்பு, உங்களது அற்புதமான தேர்தல் வெற்றிக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறது. மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக நீங்கள் பதவி ஏற்கும் இவ்வேளையில், எமது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரி வித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

தமிழ் பேசும் மக்கள், நாட்டின் சுதந்திரத்துக்குப் பின்னர் பல தசாப்தங்களாக எமது ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வாவின் தலைமையின் கீழ் இலங்கையில் தாம் சம பிரஜைகளாக வாழ்வதற்கு சமாதானமான வன்முறையற்ற எத்தனங்களை எடுத்திருந்தனர்.

எமது சுய கௌரவத்தோடும் பாதுகாப்போடும் வாழ்ந்து எமது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார அபிலாஷைகளை அடைவது மட்டும்தான் எமது நோக்கமாக இருந்தது. எமது சாத்வீக போராட்டக் காலத்திலே அப்படியானதோர் அரசியல் ஏற்பாடு உருவாக்கப்படவில்லை.

அதைத் தொடர்ந்து, கொடூரமான ஒரு போர் நடைபெற்று இரண்டு வருடங்களுக்கு முன்னர் அதுவும் முடிவடைந்திருக்கின்றது. தமிழ் மக்கள் மீண்டும் சாமாதானமாகவும் வன்முறையற்ற முறையிலும் தமது அபிலாஷைகளை அடைய விரும்புகின்றார்கள்.

எமது இந்தக் குறிக்கோளை அடைவதற்குத் தங்களது பூரண ஒத்துழைப்பை நாங்கள் நாடி நிற்கும் அதேவேளையில், விரைவில் தங்களுக்கு உகந்ததொரு வேளையில் இந்த விடயங்கள் குறித்து நேரடியாக உரையாடுவதற்கு எமக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (உ-சி)

## புதிய வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் நடைபெற்று வந்தன.

அந்த வழக்குகளின் தீர்ப்பு வெளியான நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 19 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட 61 சபைகளுக்கும் உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டி உள்ளது.

இந்தத் தேர்தல் புதிய வாக்காளர் பட்டியல்படியே நடக்கும் என்று உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் நிகால் ஜெயக்கொடி தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதியுடன் 2009 வாக்காளர் பட்டியல் காலாவதியாக வுள்ளது. அதன் பின்னர் அந்தப் பட்டியலின் கீழ் தேர்தலை நடத்த முடியாது. இருப்பினும் தேர்தலில் உள்ள பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யுமாறு பவ்ரல் அமைப்பு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிடம் கோரியிருந்தது.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட் அமைச்சின் செயலாளர் நிகால் ஜெயக் கொடி, இதற்காக தேர்தல் சட்டத்தில் அரசு திருத்தம் செய்யாது என்று கூறியுள்ளார்.

இந்த மாத இறுதிக்குப் பின்னர் நடைபெறும் எல்லாத் தேர்தல்களும் 2010 வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே நடத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய வாக்காளர் பட்டியலில் பெருமளவு இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறினார். (உ)

**தாதிய உத்தியோகத்தர் தேவை**

எமது வைத்தியசாலையில் பணிபுரிய
தாதிய உத்தியோகத்தர் தேவை.
முன்னனுபவம் உள்ளவர்கள்
விரும்பத்தக்கது. நேரில் வரவும்
[illegible] 7.30 [illegible] 8
[illegible] வைத்தியசாலை
இல. 75 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## இறுதிப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மாணவர்களும் இணைந்து கொண்டனர். விரிவுரையாளர்களும் இந்த நிகழ்வில் பங்கு கொண்டு தமது உணர்வை வெளிப்படுத்தினர்.

அஞ்சலியில் கண்ணீர் மல்க கலந்து கொண்ட மாணவர்கள் கொல்லப்பட்ட வர்களின் நினைவாக நினைவுச் சுடர்களையும் ஏற்றினர்.

முள்ளிவாய்க்காலில் ஆயுதமோதலின் போது கொல்லப்பட்ட சக பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், சகோதரர்கள் ஒவ்வொருவரையும் மனதில் எண்ணி அவர்களின் ஆத்மாசாந்தி யடைய வேண்டும் என்று தாம் பிரார்த் தித்ததாக நிகழ்வில் கலந்துகொண்ட பல்கலைக்கழக சமூகத்தினர் தம்முடைய அஞ்சலிகளின்போது தெரிவித்தனர்.

## நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர்கள் எல்லை மீறும் பிரச்சினையில் இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்து, அவர் களைத் தடுப்பதற்குப் பார்க்க வேண்டும் என்று அமைச்சர் கிருஷ்ணா வலியுறுத்தினார் என்று இந்திய அதிகாரி கள் தெரி வித்தனர்.

மீனவர்களின் உயிர்கள் எல்லாவற்றையும்விட முக்கியமானது என்றும் கிருஷ்ணா குறிப்பிட்டார் என்றும் அவர்கள் கூறினர். எனினும் நிபுணர் குழு விவகாரம் குறித்து என்ன கலந்துரையாடப்பட்டன என்பது பற்றி அவர்கள் எது வும் தெரிவிக்கவில்லை.

இந்தச் சந்திப்பில் இரு அமைச்சர்களும் இரு நாடுகளினதும் நலன் சார்ந்த விடயங்கள், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசு தற்போது மேற்கொண்டுவரும் நல்லிணக்க நடவடிக் கைகள் மற்றும் அரசியல் தீர்வு முயற்சி கள் என்பன தொடர்பிலும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியத் தரப்புக்கு எடுத்துரைத்தார் என்று டில்லித் தகவல்கள் கூறின. (உ)


## கைதவறிவிட்டது

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு, நானாட்டான் என்ற முகவரியைக் கொண்ட கார்த்திகேசு ரவீக்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல.781895202 V), வங்கி ஏ.ரி.எம். அட்டையும் 16ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் சுன்னாகத்துக்கும் ஈவினை பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் கைதவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: இ.தங்கவேல் (சொக்கன்), காளிகோயிலடி, பத்தமேனி
அச்சுவேலி - 0750405305
(சி-057)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
12 ★ 08 ★ 1932



ஆண்டவன் அடியில்
27 ★ 05 ★ 2010

### அமரர் சின்னத்துரை விஸ்வலிங்கம்

(ஓய்வு பெற்ற இ.போ.ச. ஊழியர்)

அப்பாவுக்காக கண்ணீருடன்...
ஆலமரமாய் இருந்தீர்கள் அப்பா!
ஆயிரம் உறவுகள் இளைப்பாறின அப்பா!
அந்தரிக்க விட்டுச் சென்றீர்கள் அப்பா!
அநாதைகளாய்த் தவிக்கின்றோம் நாங்கள் அப்பா!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அப்பா!
ஆறுதல் தர நீங்கள் இல்லையே அப்பா!
குடிசை வாழ்க்கையில் இருந்த இன்பம்
இன்று கோடிகள் கொடுத்தாலும் இல்லையே அப்பா!
ஓராண்டுதான் சென்றது அப்பா!
ஓய்வில்லை எம் கண்ணீர் அப்பா!
எங்கு சென்றீர்கள் எமைவிட்டு அப்பா!
எப்போது வருவீர்கள் எம்மிடம் அப்பா!
இன்னொரு பிறப்பு இருந்தால் அப்பா!
எனக்கு என்றும் நீங்கள் தான் அப்பா!

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(சி-1301)

## மரண அறிவித்தல்

### *வேலன் தங்கராசா(அப்பையா)*

வரணிவடக்கைப் பிறப்பிடமாகவும், கந்தாவளை சந்தியடியை நிரந்தர வசிப்பிடமாகவும், மகாரம்பைக்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் தங்கராசா (அப்பையா) நேற்று (16.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், குமாரசாமி(உதயன்), தவராசா, தங்கேஸ்வரன், தங்கன், ரஜனிகாந்த், சுபாஜினி, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயில் வீதி,
மகாரம்பைக்குளம், வவுனியா.
(சி/059)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# 13 வருடங்களாக சிறையில் வாடும் கைதி ஜனாதிபதிக்குக் கண்ணீர்க் கடிதம்

கொழும்பு,மே17

சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு விடுதலை செய்யப்படவுள்ள 2 ஆயிரத்து 600 கைதிகளில் தனது வறுமை நிலையையும் எதிர்கால வாழ்க்கையையும் கருத்திற்கொண்டு தன்னையும் ஒருவராக சேர்த்துக்கொள்ளும்படி புதிய மகஸின் சிறைச்சாலை கைதி ஒருவர் ஜனாதிபதியை மன்றாடி கடிதம் எழுதியுள்ளார்.

குறித்த கடிதத்தில் எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு, ஐயா சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நான் 13 வருடகாலமாக சிறை வைக்கப்பட்டுள்ளேன். நீதிமன்றத்தால் எனக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்தில் இன்னும் 3 வருடகாலங்கள் மட்டுமே நான் சிறையிருக்க வேண்டியுள்ளது.

நான் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். வீட்டு கஷ்ட நிலைமை காரணமாக கொழும்புக்குத் தொழில் தேடி வந்த நான் கைதுசெய்யப்பட்டேன். கைது செய்யப்படும் போது எனக்கு 21 வயது.

நான் காதலித்திருந்த பெண்ணைச் சிறை அதிகாரிகளின் அனுமதியுடனும், ஒத்துழைப்புடனும் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி சிறையினுள் பதிவுத் திருமணம் செய்து கொண்டேன். இவ்விடயம் தொடர்பாகத் தங்களுக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தேன்.

நான் மிகவும் வறுமை நிலையுடைய குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்கு எவ்விதத்திலும் உதவி புரிய எவருமேயில்லை. நான் சிறையினுள் வைத்து திருமணம் செய்துகொண்ட பெண்ணின் குடும்பமும் மிகவும் வறுமையானது.

அவள் சிறையினுள் உள்ள என்னை திருமணம் செய்து கொண்டமையினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றாள். இப்படிப்பட்ட குடும்ப நிலையையுடைய என் மீது தாங்கள் கருணைகூர்ந்து சம் புத்த ஜயந்தி தினத்தில் 2 ஆயிரத்து 600 கைதிகளை விடுதலை செய்யும்போது என்னையும் விடுதலை செய்யுமாறு தங்களிடம் மிகுந்த பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

## மாவிட்டபுரம் மக்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே17

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மாவிட்டபுரம் (J/231), மாவிட்டபுரம் தெற்கு (J/232) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில் முன்றிலில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் வலி. வடக்கு பிரதேச செயலர் எஸ். முரளிதரனும் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் கிராம அலுவலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-ஏ)

## தொழிற் சங்கங்களுடன் அரசு மீண்டும் பேச்சு

கொழும்பு,மே17

தனியார்துறை ஓய்வூதியச் சட்டமூலம் திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் னர் மீண்டும் தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தப்படும் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

உத்தேச தனியார்துறை ஓய்வூதிய சட்டமூலம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

உத்தேச ஓய்வூதியச் சட்டமூலத்தில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக நிதி அமைச்சு இப்போது ஆராய்ந்து வருகிறது. உத்தேச தனியார் ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்து தொழிற் சங்கங்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில் வெசாக் அலங்காரம்

தென்மராட்சி,மே17

வெசாக் பண்டிகையையொட்டி தென்மராட்சி பிரதேசம் அலங்கரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், வரணி போன்ற இடங்களில் வீதிகளில் வெசாக் கொடிகளும் பதாகைகளும் காணப்படுகின்றன. ஏ-9 வீதியின் இருமருங்கிலும் பல இடங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை படையினரின் முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றிலும் வெளிச்சக் கூடுகள் தொங்கவிடப்பட்டுள்ளன. (ஒ-207-131)

## ஆசிரியர் செயலமர்வுகள் இனிமேல் சனி, ஞாயிறில் ஒருநாள் மட்டுமே

### இரு தினங்களும் நடத்த முடியாது

யாழ்ப்பாணம்,மே17

ஆசிரியர்களின் நலன் கருதி செயலமர்வுகள் வார இறுதி விடுமுறை தினங்களாகிய சனி, ஞாயிறு தினங்களில் ஏதாவதொரு தினத்தில் மட்டுமே நடத்தப்படவேண்டும் என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நடைமுறை கொண்டுவரப்படுவதாக அவர் கூறினார்.

ஆசிரியர்கள் வாரத்தில் ஏழு நாள்களும் கற்றல், கற்பித்தல் மற்றும் பாடசாலை நடவடிக்கைகளில் ஈடுபடுவது சுமையானதும் கடினமானதும் ஆகும். எனவே ஏதாவது ஒரு நாள் ஓய்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஏற்ப செயலமர்வுகள் இரு விடுமுறை நாள்களில் ஏதாவது ஒரு தினத்தில் மட்டுமே நடத்தப்படும்.

இது சம்பந்தமான அறிவுறுத்தல் சகல கல்வி வலயங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-8)

# ஆட்சிக்கு வந்ததுமே ஈழப்பிரச்சினையை ஜெயலலிதா கையில் எடுத்தது ஏன்?

## தி.மு.க.விடமிருந்து காங்கிரஸைக் கழற்றி எடுக்கவே!

சென்னை, மே 17

ஈழப் பிரச்சினையை, தான் கையில் எடுத்தால் பதிலுக்கு தி.மு.கவும் அதைக் கையில் எடுக்கும். இதன்மூலம் தி.மு.க. - காங்கிரஸ் உறவைக் காலி செய்யலாம் என்பது ஜெயலலிதாவின் திட்டம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போர் என்றால் மக்கள் சாவது சகஜம் என்ற ஜெயலலிதா, இப்போது தமிழக முதல்வர். ஈழப் படுகொலைகளுக்காக மஹிந்த ராஜபக்ஷவைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முயற்சிப்பேன் என முதல் நாளே அறிவித்துள்ளார்.

இதனால் தமிழுணர்வாளர்கள் அகமகிழ்ந்து போயிருக்கிறார்கள்!

ஈழப் படுகொலைகளுக்கு உற்ற துணைவர்களாக இருந்த காங்கிரஸ் தலைவர் சோனியாவும் பிரதமர் மன்மோகன் சிங்கும் இதற்காக ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடத் தயாராக இல்லாத நிலையில், இதில் மாநில முதல்வரான ஜெயலலிதா முயற்சி என்னவாக இருக்கும்... எந்த அளவு பயன் தரும்...

எந்த அளவு உண்மையாக இந்த முயற்சிகளில் அவர் இறங்குவார் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

தி.மு.கவை காங்கிரஸ் கழற்றி விட நெருக்கடி கொடுப்பதற்காகவே ஆட்சிக்கு வந்தவுடனேயே ஈழப் பிரச்சினையை ஜெயலலிதா கையில் எடுத்தார் எனத் தெரிகிறது.

ஈழப் பிரச்சினையை ஜெயலலிதா முழுவீச்சில் கையிலெடுக்கும் போது, ஈழத் தமிழர்களுக்காக ஆட்சியையே இழந்தவன் நான் என அடிக்கடி சொல்லி வரும் தி.மு.க. தலைவர் கருணாநிதி மட்டும் சும்மா இருக்க முடியுமா?.

இனி மஹிந்த ராஜபக்ஷவை தூக்கிலேற்றவேண்டும் என்ற குரல் அறிவாலய முகாமிலிருந்து சற்றுப் பலமாகவே கேட்க ஆரம்பிக்கும். அதற்கு அச்சாரமாக, தந்தை செல்வா காலத்திலிருந்து இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க தி.மு.க. மேற்கொண்ட முயற்சிகள் தொடங்கி சகோதர யுத்தம் வரை என கருணாநிதி தரப்பிலிருந்து தொடர்ந்து அறிக்கைகள் வெளியாகும்.

மீண்டும் மனித சங்கிலி, உண்ணாவிரதங்கள், மீனவர்களுக்காக கனிமொழி நடத்திக் காட்டியது போன்ற ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் அரங்கேறும்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி சும்மா இருக்குமா? கூட்டணிக்குள் இருந்து கொண்டே ஈழப் பிரச்சினையில் தி.மு.க. தீவிரம் காட்டுவதை அமைதியுடன் வேடிக்கை பார்க்குமா?. தி.மு.கவுக்கு சி.பி.ஐ. உள்ளிட்ட பலவகைகளில் நெருக்கடிகளை காங்கிரஸ் அதிகரிக்கும். இதைத்தான் எதிர்பார்க்கிறார் ஜெயலலிதா.

தான் ஈழப் பிரச்சினையைக் கையில் எடுத்தால் பதிலுக்கு தி.மு.கவும் அதைக் கையில் எடுக்கும். இதன்மூலம் தி.மு.க. - காங்கிரஸ் உறவை காலி செய்யலாம் என்பது அவரது திட்டம். அதில் அவர் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றுவிட்டதாகவே தெரிகிறது.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தால் இந்தியா முழுவதும் கெட்ட பெயர் வாங்கிவிட்ட காங்கிரஸ், தி.மு.கவை வெட்டிவிட தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அவர்கள் அடுத்து கைகோக்க வேண்டிய இடம் அ.தி.மு.க தான். இந்நிலையில் அந்தக் கட்சி ஈழப் பிரச்சினையைப் பெரிதாக்கி, தனக்கு எதிராகத் திரும்புவதற்குள் அ.தி.மு.கவைக் கூட்டணிக்குள் கொண்டு வந்துவிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் சோனியா. இதனால்தான் யாரும் எதிர்பாராத வகையில் தேநீர் விருந்துக்கு ஜெயலலிதாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இப்படி காங்கிரஸால் வெட்டிவிடப்பட்டாலும் தி.மு.க. கையில் எடுக்கப்போகும் பிரச்சினை ஈழ விவகாரமே.

நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவு படுவீழ்ச்சியைச் சந்தித்துள்ள தி.மு.கவுக்கும் இப்போதைக்கு இளைப்பாறக் கிடைத்திருப்பது ஈழப் பிரச்சினை என்ற நிழல்தான் என்கிறார்கள் நடுநிலையாளர்கள். (ஒ-சி)

# நிகழ்வுகள்

### கலாசாரப் பேரவைக் கூட்டம்

கொழும்புத்துறை, மே.17

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் யாழ். பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலை கலாசார ஆர்வலர்களைப் பங்குகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-135)

### ஆயுள்வேத பாதுகாப்புச் சபை பொதுக்கூட்டம்

கொழும்புத்துறை, மே.17

நல்லூர் பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச் சபைப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் நல்லூர் பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி சு.ஸ்ரீ விக்கினேஸ்வரா தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-135)

### பௌர்ணமி தின பஜனை

பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் சண்டிலிப்பாய் பிரதேச மக்களும் இணைந்து பௌர்ணமி தின பஜனை நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்மன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது திருநாவுக்கரசு சிவதட்சணாமூர்த்தி சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார் (ஒ-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிரான வழக்கைத் தொடராமைக்கான காரணங்களை ஆராயவென விசேட குழு அமைப்பு

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாமற் போனதற்கான காரணங்களை ஆராய விசேடகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

அவர்களில் பலர் வருடக் கணக்கில் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். அதன் காரணமாகப் பலரது பிள்ளைகள் மற்றும் குடும்பங்கள் என்பன கநிர்க்கதியான நிலையை எதிர் கொண்டுள்ளன. தம்மீதான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கைதிகளும் அவ்வப்போது போரட்டங்களில் குதிக்கின்றனர்.

எனவே அவ்வாறு வழக்குத் தொடரப்படுவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணத்தை ஆராய்ந்து அறிவதற்காக விசேட குழுக்கள் சில நியமிக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பேராளர் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவ்வாறு வழக்குத் தொடரும் நடவடிக்கைகள் தாமதமடைந்ததற்கு ஒட்டு மொத்தமாக அரசை மட்டும் குறை சொல்வதில் பயனில்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (தமிழ்வின்)

# கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்ரர் நேற்றுக் கைது

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் கிருஷ்ணானந்தராஜா கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பில் இருந்து சென்ற பொலிஸ் குழுவொன்றே அவரைக் கைது செய்துள்ளது.

கொலைச் சம்பவமொன்று தொடர்பாக சந்தேகத்தின் பேரிலேயே பிரதீப் மாஸ்டர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் கைது தொடர்பாக அவரது குடும்பத்தினருக்கோ அல்லது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கோ அறிவிக்கப்படவில்லை என்றும் கட்சி அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கிடையே மாகாண சபையில் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் பொறுப்பான அந்தஸ்தில் இருக்கும் பிரதீப் மாஸ்ரரைப் போதிய காரணங்களின்றிக் கைது செய்தமைக்காகக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# போர்க்குற்றச்சாட்டு தொடர்பாக ஜெனீவாவில் கலந்துரையாடல்

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து சுவிட்சர்லாந்தும், கனடாவும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன.

ஜெனீவாவில் நடைபெறும் இந்த கூட்டத்திற்கு இலங்கையைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இது நட்புரீதியற்றது என இலங்கை அரசு தனது எதிர்ப்பைத் வெளியிட்டுள்ளது. கொழும்பில் உள்ள கனேடியத் தூதுவர் புறூஸ் லெவி மற்றும் சுவிஸ் தூதுவர் தோமஸ் லிற்சர் ஆகியோரை அழைத்து வெளிவிவகார அமைச்சு தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஒட்டாவா மற்றும் பேர்ன் பகுதிகளில் உள்ள இலங்கை தூதரகங்களும் இந்த கூட்டத்தை நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(தமிழ்வின்)

# ஐ.நா. அறிக்கைக்கு ஆதரவு திரட்ட நாடுகடந்த தமிழீழ அரசு முயற்சி

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கைக்கு ஆதரவு திரட்டுவதற்காக ஐ.நாவின் உறுப்பு நாடுகளின் தூதரகங்களுடனான சந்திப்புக்களை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஜனநாயகவாதிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை கனடாவின் ஒட்டாவா நகரில் அமைந்துள்ள தென்னாபிரிக்க மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் தூதரக அதிகாரிகளுடன் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஜனநாயகவாதிகளின் கனேடிய பிரதிநிதிகளான திரு. எஸ். திருச்செல்வம், பாலன் ரட்ணராஜா, ஈசன் குலசேகரம், சுரேஸ் ரட்ணபாலன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் எந்த வடிவில் இடம்பெற்றாலும் தமது நாடுகள் அதனை எதிர்த்து மற்றைய உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயற்படுமென்று மேற்படி தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பதவியில் மெக்சிக்கோ இருந்தபோது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்திருந்தது. (தமிழ்வின்)

# அரச சார்பற்ற அமைப்புகளின் அதிகாரிகள் புலிகளின் செயற்பாடுகளுக்கு உதவினர்

## அம்பலப்படுத்துகிறது நோர்வே பத்திரிகை

நோர்வேயின் முன்னணி நாளிதழான அப்டென் பொஸ்டன் பத்திரிகை விடுதலைப் புலிகளுக்கு உதவிய அரச சார்பற்ற அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் குறித்த தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளது.

சமாதான ஒப்பந்தம் மீறப்படுகின்றதா என்பதை அவதானிக்கும் சாக்கில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கியஸ்தர்களே விடுதலைப் புலிகளுக்கு உதவும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளதாக அப்பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

அவ்வாறான அரச சார்பற்ற அமைப்புகளின் முக்கியஸ்தர்களின் முக்கியஸ்தர்களுடன் இலங்கையிலுள்ள நோர்வேத் தூதரக அதிகாரிகளும் இணைந்து கொண்டிருந்தார்கள். இரு தரப்பும் இணைந்தே விடுதலைப் புலிகளுக்கு உதவும் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்கள்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் முன்னணி செயற்பாட்டாளர்களுக்கு சர்வதேச நாடுகளுக்கான சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளையும் பிரஸ்தாப அரச சார்பற்ற அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் செய்து கொடுத்துள்ளனர் என்றும் அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆயினும் இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அரசாங்கத்தின் முக்கிய அதிகாரியொருவர் வெளிநாட்டு ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் குறித்து நன்றாக ஆராய்ந்த பின்பே அதில் குறிப்பிடப்படும் விடயங்கள் மற்றும் தரப்பினரிடம் கருத்துக்களை கேட்கவேண்டும். அதைவிடுத்து செய்தியொன்று வெளியாகி இருக்கின்றது என்பதற்காக யாரையும் கண்டபடி குற்றம் சாட்டும் போக்கை அரசு அனுமதிப்பதில்லை என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

# துட்டகைமுனுவின் அஸ்தி இன்று முதல் புதிய கலசத்தில்

துட்டகைமுனு மன்னனின் அஸ்தியை புதிய கலசமொன்றில் இட்டுப் பாதுகாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இன்று காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறும் வைபவமொன்றினையடுத்தே துட்டகை முனு மன்னனின் அஸ்தி புதிய கலசமொன்றில் இடப்படவுள்ளது.

துண்டாடப்பட்டிருந்த இலங்கையை எல்லாள மன்னனுடன் போரிட்டு ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து ஆட்சி செய்ததுடன், பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கும், அதன் மேம்பாட்டிற்குமான பங்களிப்புகளை வழங்கியதற்காகவும் துட்டகைமுனு மன்னனுக்கு சிங்கள மக்கள் மத்தியில் தனியான நன்மதிப்பொன்று உள்ளது.

அதே போன்று விடுதலைப் புலிகளுடன் போரிட்டுத் தோற்கடித்து இலங்கையைத் துண்டாட விடாமல் பாதுகாத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கரங்களால் துட்டகைமுனு மன்னனின் அஸ்தியை புதிய கலசமொன்றில் இட்டுப் பாதுகாக்கப்படவுள்ளதுடன், மே மாதம் 18ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ள புண்ணிய இலங்கையின் தேசிய மரபுரிமைகள் தொடர்பான கண்காட்சியிலும் துட்டகைமுனு மன்னனின் அஸ்திக் கலசம் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளதாகவும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

(தமிழ்மிரர்)

# லண்டனில் எழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு

நாடுகடந்த தமிழீழ அரசால் ஏற்பாடு செய்யப் பட்ட முள்ளிவாய்க்கால் நினை வேந் தல் நிகழ்வு நேற்று லண்டனில் எழுச்சியுடன் நடைபெற் றது.லண்டனில் உள்ள மண்ட 'கிறீன் போட்டவுன் ஹோல்' பத்தில் நடைபெற்ற இந்த நிகழ் வில் பொதுச்சுடரினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உதவிப் பிரதமர் ருத்திரா பதி சேகர், பிரித்தானியத் தொழில்கட்சி உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர்களின் விடுதலைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருபவருமான விரேந்திர சர்மா மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்களான திருமதி பாலாம்பிகை, செல்வ ராஜா, மனோரஞ்சன் ஆகி யோர் ஏற்றி வைத் தனர்.

ஈகைச்சுடரேற்றலைத் தொடர்ந்து இதுவரை காலமும் போரினால் கொல்லப்பட்ட மக்களுக்காகவும், தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், சுதந்திர வாழ்வுக்காகவும் போராடி உயிரிழந்த போராளிகளுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் ''தமிழினப் படுகொலைகள் -1956-2008'' எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த வரலாற்று நூலை மேடையிலேயே அதிகளவான மக்கள் வாங்கிச் சென்றதை காணமுடிந்தது.



இணையச் செய்திகள்

# இணைந்த வழிபாடு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று களனி ரஜ மஹா விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். இவ்விகாரைக்கு புத்தர் சிலையொன்றை வழங்கிய ஜனாதிபதி, புதிதாக அமைக்கப்பட்ட கற்பாறை படிக் கட்டையும் திறந்துவைத்தமை குறிப்பிடத்தக்கது.(தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சமாதானம், அபிவிருத்திக்கு புத்த பகவானின் போதனைகள்

கொழும்பு, மே 17

நாட்டுக்கு கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்தியதிலும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதிலும் புத்த பகவான் காட்டிய நால்வகை பாதகங்களற்ற பாதையையும் தர்மத்தையும் கொண்ட அரச கொள்கையைப் பின் பற்றியதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வெசாக் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச் செய்தியில் தொடர்ந்து கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

பூரண அரச அனுசரணையுடன் 2600 ஆவது புத்த ஜயந்தி வெசாக் மகோற்சவத்தை பக்திபூர்வமாகக் கொண்டாடுகின்றோம்.

புத்த போதனை இரண்டாயிரத்து அறு நூறு ஆண்டுகளாக அனைத்து மக்கள் சமுதாயத்துக்கும் சரியான பாதையைக் காட்டியுள்ளது. உலகவாழ் மக்கள் அனை வரும் அதன்மூலம் எல்லையில்லாத மன நிம்மதியைப் பெற்றிருந்தனர். அந்த உயரிய தர்மத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாதுகாத்துக்கொண்டதன் காரணமாகவும் அந்த தர்மத்தின் பிரகாரம் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொண்டதன் காரணமாகவும் எமது தாயகம் உலகத்தின் கௌரவத்துக்கும் மகத்துவத்துக்கும் பாத்திரமாகின்றது.

நாட்டுக்கு கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்திய போதும் தாய்நாட்டை அபி விருத் திப் பாதையில் இட்டுச் செல்கின்ற போதும், புத்த பெருமானார் காட்டித் தந்த நால்வகை பாதகங்கள் அற்ற பாதையையும், தர்மத்தை முதன்மையாகக் கொண்ட அரச கொள்கையையும் நாம் பின்பற்றி னோம்.

## ஜனாதிபதி வெசாக் செய்தி



குரோதத்தை அன்பினால் வெற்றி கொள்ள வேண்டும். தீமையை நன்மையால் வெற்றி கொள்ளவேண்டும். உலோபியை வள்ளல் தன்மையாலும், பொய் சொல்பவனை சத்தியத்தாலும் வெற்றிகொள்ள வேண்டும் என புத்தபெருமானாரின் போதனையில் குறிப்பிடப்படுகின்றது. நம் எதிரே வருகின்ற அனைத்து சவால்களின் போதும மேற்கூறப்பட்ட உயரிய அறநெறியினால் போதிக்கப்பட்ட முன்மாதிரியை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

ஆசையின் காரணமாக உலகத்தில் தோன்றிய அனைத்து முரண்பாடுகளும் தீர்க்கப்பட்டு நல்வழியில் கருணையைப் பரப்புகின்ற பாதையை நாம் திறந்து வைக்கவேண்டும். தணிந்த அமைதியான உலகத்தை உரு வாக்குவதற்கு அறநெறி வழியை நாம் காட்டவேண்டும்.

நமது புத்தபெருமானின் இறுதிப் போதனையின் பிரகாரம் அவர் கொள்கை களைப் பேணுவதற்கு முதலிடம் கொடுத்து தாமதமின்றி நன்மைகளையும் அறத்தை யும் சேகரித்து புத்த ஜயந்தி வெசாக் மங் கள உற்சவத்தை அர்த்தமுள்ளதாக்கி புத்த பெருமானை சரணம் அடைய உறுதிபூணுவோமாக - என்றுள்ளது.

(ஒ-சி)

# இராணுவ வாகனம் மோதியதில் சாவகச்சேரியில் இளைஞர் பலி

தென்மராட்சி, மே 17

சாவகச்சேரி - பருத்தித்துறை வீதி, கெருடாவில் சந்தியில் இராணுவ வாகனம் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றது.

குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளும் இராணுவ வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

கரணவாய், கலட்டி தூதாவளை மூத்த விநாயகர் கோயில் பகுதியைச் சேர்ந்த ஆர். இதயராசா (வயது-28) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளை மோதிய இராணுவ வாகனத்தைச் செலுத் திய சிப்பாய், விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து தப்பிச் சென்று விட்டார். எனினும் அங்கு திரண்ட மக்கள் இது தொடர்பாக அப்பகுதி இராணுவ முகாமுக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து இராணுவப் பொலிஸ் பிரிவினரும், இராணுவத்தினரும் குறித்த சிப்பாயை கைதுசெய்துள்ளனர். (131-207)

## போர்வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரின்போது உயிரிழந்த இராணுவத்தினரை நினைவு கூரும் முகமாக இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி வரையான காலப்பகுதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தேசத்தை ஐக்கியப்படுத்துவதற்காக உயிர்களைப் பறிகொடுத்த முப்படையினர் மற்றும் பொலிஸாரை நினைவு கூரும் நிகழ்வைப் பாதுகாப்பு அமைச்சும், இராணுவ சேவை அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

போரின்போது உயிர்விட்ட இராணு வத்தினரின் நினைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள கொடி அன்றைய தினத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அணிவிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் அனைத்து மாகாண முதலமைச்சர் களுக்கும் ஜனாதிபதி கொடியை வழங்குவார். அத்துடன் 27ஆம் திகதி மாலை உயிரிழந்த படையினருக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையிலுள்ள இராணுவ நினைவுத் தூபியில் ஜனாதிபதி தலை மையில் நடைபெறும்.

(உ-சி)

## கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகளுடன் தவறான முறையில் நடக்க முற்பட்டுள்ளார் என்றும் தந்தையாரிடமிருந்து தப்பிப்பதற்காக மகள் அயல் வீட்டில் தஞ்சமடைந்துள்ளார் எனவும் விசாரணை மூலம் தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து குறித்த நபர் தனது மனைவி மற்றும் ஏனைய பிள்ளைகளை கொலை செய்யப்போவதாக மிரட்டியுள்ளார் என்றும் இதனால் அச்சமடைந்த மனைவியும் பிள்ளைகளும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை குறித்த நபர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஒன்பது வருடங்களுக்கு முன்பு சந்தேக நபர் ஏற்கனவே கொலைக் குற்றச்சாட்டு ஒன்றில் 6 வருடங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஒ-14-15)

**M.A, M.Com, M.Sc, M.BA PG. Dip**

*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*

* மேற்படி பட்ட நெறிகளுக்கு பல்கலைக்கழகத்தினால் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
* பதிவுகள் முடிவு திகதி 31.05.2011 ஆகும்.

குறிப்பு:- *May மாதப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான B.A, B.Com இற்கான பரீட்சைகள்.
ஆரம்பம்:-18.05.2011 மு.ப. 10.00 மணி.
M.A, M.Com, M.Sc க்கான பரீட்சைகள்.
*ஆரம்பம்:- 25.05.2011*
*பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் பரீட்சை அனுமதி அட்டையினையும், நேர அட்டவணையையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

யாழ். இணைப்பாளர்கள்

| | |
|---|---|
| *காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)* தொ.பே:- 021 222 8148. | புதிய உயர் கல்லூரி, இல.95, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். |

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் கௌரிமலர்



இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் கௌரிமலர் 15.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்லையா நவரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செந்திவேலின் சகோதரியும் காலஞ்சென்ற தனேஸ்வரன் மற்றும் பகீரதன் (இத்தாலி), முகுந்தன், கஜேந்திரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் பாலசுந்தரம் (கனடா) காலஞ் சென்ற தங்கேஸ்வரி (தேவி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2011) புதன்கிழமை 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (4285)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.



150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)

**தேவை**

யாழ். தட்டாதெரு சந்தியிலுள்ள சிமெந்து விற்பனை நிலையத்துக்கு பெண் கணக்காளர் தேவை. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:-0212229296, 077974 2504.

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித் தல், தச்சு வேலைகள், Plumping, Electrical, Painting, Welding, பூந்தோட் டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும். அழையுங்கள் :0776679564

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

**விற்பனையாகிறது**

மே 21, 22 இல் நடைபெறவுள்ள SLAS பரீட்சைக்கான விசேட கையேடு.
* இலங்கை நிருவாக சேவை பரீட்சை (SLAS) இற்கும் ஜூன் மாதம் அளவில் நடைபெறவுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு ஏற்றது.
ஆக்கம்:- வே. தபேந்திரன் M.A, விலை:- 75/=
நாடெங்கிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏகவிநியோகஸ்தர்கள்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம், தொ.பே:- 021 222 2573.
லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது.
தொ.பே:- 011 234 1942.

**தொழிற்பயிற்சிகள்**

*Mobile Phone Repairing — காலம்: 03 மாதம்
சகல இன Phone களும் திருத்தும் முறை பயற்சியளிக்கப்படும்.
*Electronics — காலம்: 10 மாதம்
றேடியோ, T.V. ,V.C.D ,D.V.D. ;Amplifier மற்றும் இலத்திரனியல் பொருள்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
*ஏயர் கொண்டிசனிங் — காலம்: 6 மாதம்
O/L படித்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.
பயிற்சி முடிவில் நிறுவனங்களில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும். பயிற்சிகள் ஆரம்பம் 21.05.2011 09.30 A.M
விவரங்கள் நேரில்

JAFFNA TECHNICAL INSTITUTE

இல: 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். TP:- 0718561654
கிளை: NEW ASIAN CENTER 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 0779254078.

DHL
உத்தரவு பெற்ற முகவர்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

DHL உடன் 5 வருட பூர்த்தியை முன்னிட்டு விசேட சலுகைகள்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள்,அன்பளிப்புபொருட்கள்,DVD,CD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும்அனுப்பிட

திருமுருகன் கொம்நெற்



TCN Express.
2B,Nelsan place,COlombo-06.
Customer service No.021 222 7835

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18.பிரதான வீதி,நெல்லியடி. இல.46.ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்17.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.